நிறுவன ஆசிரியர உரை

# விசுவாசத்தில் ஊன்றக்கட்டப்படுதல்

# GROUNDED IN THE FAITH

*J.C. Choate*



முதல் நூற்றாண்டில், இருதயத்தில் விசுவாசம் உண்டாகும்படியாகவும் (ரோமர் 10:10; எபி. 11:6), இரட்சிக்கப்படும்படியாகவும் 1 கொரி. 15:1,4-ல் விவரிக்கப்பட்டிருக்கிற கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் போன்றவற்றை உள்ளடக்கிய சுவிஷேத்தை ஒருவர் கேள்விப்படுவது அவசியமாயிருந்தது. இன்றைக்கும் அதுவே போதுமானதாயிருக்கிறது. (மாற்கு 16:15; ரோமர் 10:17) ஆகிய வசனங்களையும் வாசியுங்கள். இது ஒருவர் தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி (அப். 2:38; அப். 17:30) கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்து (அப். 8:37; மத். 10:32) பாவங்கள் மன்னிக்கப்படும்படியாக அல்லது இரட்சிக்கப்படும்படியாக ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதற்கு வழிவகுத்தது (அப். 2:38; மாற். 16:16).

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் பதினொரு மனமாற்றச் சம்பவங்கள் உள்ளன. அவைகள் ஜனங்கள் இரட்சிக்கப்படும்படியாக தேவன் அவர்களை கேட்டுக்கொள்ளும் காரியங்கள் என்ன என்பதை உறுதி செய்கின்றன. அப்புத்தகம் முழுவதையும் நன்றாக வாசித்துப் பார்த்து நீங்களே தெரிந்து கொள்ளுங்கள். சபை ஸ்தாபிக்கப்பட்ட ஆரம்ப நாட்களில் இரட்சிக்கப் படுவதற்கு ஒரே வழிதான் இருந்தது, இப்போதும் இரட்சிக்கப்படுவதற்கு ஒரே வழிதான் இருக்கிறது.

தேவன் தம்முடைய வார்த்தையில் என்ன சொல்லுகிறார் என்பதைப் படித்து புரிந்து கொள்ள வேண்டும். இரட்சிப்பானது அறியாமை மற்றும் பிழையை அடிப்படையாகக் கொண்டதல்ல, ஆனால் சத்தியத்தைப் பற்றிய அறிவையும், சத்தியத்திற்கு கீழ்ப்படிவதையும் அடிப்படையாகக் கொண்டது. ஒருவர் எதிர்பாராத விதமாக கிறிஸ்தவனாகி, கர்த்தருடைய சபையில் அங்கத்தினராவதில்லை. ஒருவர் ஒரு நாள் திடீரென எழுந்து எப்படியோ யாருக்கும் புரியாத விதத்தில் கர்த்தருடைய பிள்ளையாக மாறிவிட்டதாகவும்,

கர்த்தருடைய குடும்பத்தில் இருப்ப தாகவும் சொல்ல முடியாது. மாறாக, ஒருவர் சத்தியத்தை கற்றுக் கொண்டு, தேவனுக்கு கீழ்ப்படிகிற காரியத்தில் அவர் துல்லியமாக என்ன செய்திருக்கிறார் என்பதை நன்றாக, சரியாக அறிவார்.

இது மிகவும் சுலபமானது போலவும், மிகவும் அடிப்படை யானது போலவும் தோன்றலாம், ஆனால், கர்த்தர் இதன் மூலம் எல்லா வகையான மக்களோடும், அனைத்து நிலை கல்வி அறிவுள்ள மக்களோடும் இடைபடுகிறார். எந்த ஒரு மனிதனும் தன்னுடைய மனதில் சுவிசேஷத்தையும், இரட்சிப்பின் திட்டத்தையும் புரிந்து, அதற்கு பதிலளிக்கும் வகையில் தான் தேவன் அவைகளை சுலபமாக்கி யிருக்கிறார். தீர்க்கதரிசி இவ்வித மாகச் சொல்வதைக் கவனியுங்கள், "*அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்து வருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையாயிருந் தாலும் திசைகெட்டுப் போவதில்லை*" (ஏசாயா 35:8).

ஒருவர் தேவனுடைய சித்தத்தைக் கேட்டு, புரிந்து கொண்டு அதற்கு இசைவாக இருக்கும் போது சத்தியத்தில் உறுதியாக ஊன்றக் கட்டப்படுகிறார். அந்த நபர் கன்மலை யாகிய இயேசு கிறிஸ்து என்னும் உறுதியான அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிற அவருடைய சபையின் அங்கத்தினராகிறார் (மத். 16:18; 1 கொரி. 3:11).

மத்தேயு 13 ஆம் அதிகாரத்தில் விதைக்கிறவனுடைய உவமையில் இயேசு விதையானது விதைக்கப் படுவது மட்டும் போதுமானதல்ல என்கிற உண்மையை வலியுறுத்து கிறார், அதாவது, விதை விதைக்கப் படுவது அவசியமாக இருந்தாலும் கூட அது போதுமானதல்ல என்று சொல்கிறார். அது மதிப்புள்ள நல்ல பலனைக் கொடுக்க வேண்டு மென்றால், விதையானது நல்ல நிலத்தில் விழுந்து வளர வேண்டும்.

ஆவிக்குரிய விதையானது விதைக்கப்பட்டு அது பிழைக்கத்தக்க தாகவும், செழிக்கத்தக்கதாகவும் பராமரிக்கப்பட வேண்டும். அப்போது தான் அறுவடை சாத்தியமாகும். ஒருவர் தன்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் இரட்சிக்கப்பட்ட ஆரம்ப நிலையிலேயே இருக்கக் கூடாது. ஆனால், தொடர்ச்சியாக இரட்சிக்கப்பட்ட நிலையில் நிலைத் திருக்க வேண்டும். ஆகவே, ஒருவர் இரட்சிப்பைக் கொண்டு வரும் அடிப்படைக் கட்டளைகளுக்கு கீழ்ப் படிந்த பிறகு, கிறிஸ்துவையும் அவருடைய உபதேசத்தையும் தொடர்ந்து பின்பற்றி, அவருக்கு மரணபரியந்தம் உண்மையா யிருக்க வேண்டும்.

இதன் பொருள் கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் ஊன்றக்கட்டப்பட வேண்டும் என்பதே. பவுல் கொலோசெ பட்டணத்திலுள்ள

சகோதரர்களுக்கு இவ்விதமாக எழுதினார். "*நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையை விட்டு அசையாமல், ஸ்திரமாயும், உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும். அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது; அதற்கென்றே பவுலாகிய நான் ஊழியக்காரனானேன்*" (கொலோ. 1:22,23).

ஆனால், விசுவாசத்தில் ஊன்ற கட்டப்படுதல் என்பதன் பொருள் என்ன? அதன் பொருள், முதலாவது, ஒருவர் மூலைக் கல்லாகிய கிறிஸ்துவின் மீது கட்டப்பட்டிருக்கிறார் என்பதையும். இரண்டாவது, சத்தியத்திற்கு தூணும், ஆதாரமுமாயிருக்கிற சபையில் ஒருவர் தன்னை அங்கத்தினராக இணைத்துக் கொண்டிருக்கிறார் என்பதையும் இது குறிக்கிறது (1 தீமோ. 3:15).

மேற்சொல்லப்பட்ட நபர் கிறிஸ்தவராக இருக்கிறார். அதன் பொருள், அவர் வளரும்படி தொடர்ந்து தேவனுடைய வார்த்தையை வாசிக்கவும், படிக்கவும் வேண்டும். இன்னும், அவருடைய ஆத்துமா தேவனுடைய சித்தத்தில் நிலை கொண்டுள்ளது என்றும், அவர் கர்த்தரிடத்தில் உண்மையாயிருப்பதற்கு எல்லா நோக்கமும் உண்டு என்றும் பொருள்படும். தான் யார் என்பதையும், தான் என்னவாக இருக்கிறார் என்பதையும், தான் எப்படி வாழ வேண்டுமென்பதையும், தான் போகிற இடம் எது என்பதையும் அவர் அறிந்திருக்கிறார். அங்கே சந்தேகங்கள் இல்லை, சமரசங்கள் இல்லை. அந்த நபர் பூரணமான மனிதன் அல்ல. ஆனால், அதே நேரத்தில், சத்தியத்தில் ஊன்ற கட்டப்பட்டிருக்கிறவர். நம்பத் தகுந்தவராகவும், உண்மையுள்ள வராகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தயாராகவும் இருக்கிறார். இப்படிப்பட்ட நபர் இரட்சிக்கப்பட விரும்புவது மாத்திரமல்ல, தொடர்ந்து நிற்கவும், சிறந்த முன்னுதாரணமாகத் திகழவும், நல்ல கனியைக் கொடுக்கவும், இறுதியாக பரலோகம் போகவும் விரும்புகிறார்.

விசுவாசத்தில் ஊன்றக் கட்டப்பட்டவர்கள் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்துவார்கள். அவர்கள் உலகத்தை மாற்றுவார்கள். நீங்கள் விசுவாசத்தில் ஊன்றக்கட்டப்பட்டிருக்கிறீர்களா?.

**முடியும், முடியாது**

விசுவாசத்திற்குள்ளாக வருவது எல்லோராலும் முடியும்.
ஆனால்,
விசுவாசத்தில் நிலைத்திருப்பது எல்லோராலும் முடியாது.

நிர்வாக ஆசிரியர் உரை

# எகிப்துக்கே....

## IF IT WAS FOR EGYPT

*S. Rajanayagam*

தேவனுக்குப் பயந்த யோசேப்பு, தன் உடன் பிறந்த சகோதரர்களை, எகிப்திலே ஏற்றுக் கொள்வதற்கு முன், அவர்களைச் சோதித்து நடத்தின முறையை நாம் கவனித்தால், நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அவை களிலிருந்து சில பாடங்களை நாம் கற்றுக்கொள்ள முடியும் என்பது நன்றாகவே விளங்கும். ஆகவே, அப்பாடங்கள் என்னவென்று இப்பொழுது கவனிப்போம்.

### I அவர்களின் உண்மை சோதிக்கப்பட்டது

யோசேப்பு தன் சகோதரர்களை, தான் இருக்கும் எகிப்தில் ஏற்று கொள்வதற்கு முன், முதலாவது, அவர்களின் உண்மையைச் சோதித்தான்.

தன்னுடைய பிள்ளைப் பருவம் முதல், தான் இஸ்மவேலர்களிடத்தில் விற்கப்பட்ட தனது பதினேழு வயது வரை, தன்னுடைய சகோதரர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பதை அவன் அறிந்திருந்தான். அவர்கள் துன்மார்க்கத்தன மானவர்களென்பதும், உண்மையில்லாதவர்களென்பதும் அவன் அறிந்த ஒன்றுதான் (ஆதி. 37:2). ஆனால், வருடங்கள் 22 உருண்டோடிவிட்ட பிறகு, இன்னும் அதே உண்மையற்ற தன்மை நீடிக்கிறதா அல்லது அதற்கு ஒரு முடிவு வந்து விட்டதா என்று சோதித்துப் பார்க்க முடிவெடுத்தான். இன்னும் குறிப்பாகத் தன்னை விலையாகக் கொடுத்த பிறகாகிலும், அவர்கள் மாறியிருக்கிறார்களா என்று அறிய விரும்பினான்.

ஆகவே, அவர்கள் தானியங்கொள்ள வந்தபோது, தானியத்தோடு சேர்த்து அவர்கள் கொண்டு வந்த பணத்தையும் போட்டனுப்பும்படி உத்திர விடுகிறான். கொண்டு சென்ற பணம் திரும்ப வந்து விட்டதை, அவனுடைய சகோதரர் இரண்டு கட்டமாகத் தெரிந்து கொண்டு (42:27,35) பயந்து நடுங்கு கின்றனர். பிறகு, மீண்டும் தானியங்கொள்ள வந்தபோது, ஏற்கனவே சாக்கில் வந்து விட்ட பணத்தோடு, அப்போதைய தேவைக்கும் பணம் கொண்டு வந்த தோடு எங்களை அறியாமலேயே அந்த தவறு நடந்து விட்டதென்ற வினயத் தோடு எடுத்துரைத்து, தவறுக்கு மன்னியுங்கள் என்ற பாணியில் நடந்து கொள்கின்றனர் (43:21).

கிட்டத்தட்ட 22 ஆண்டுகளுக்கு முன்பாக யோசேப்பு கண்ட சகோதரர்கள் அல்ல நாங்கள் என்பதை இப்படித் தங்கள் செயல் மூலம் நிரூபித்துக் காட்டினர்.

யோசேப்பை விலையாகக் கொடுத்ததற்குப் பிறகு, நாங்கள் மாறி விட்டோம் என்பதைத் தெள்ளத் தெளிவாகத் தெரிவித்தனர். யோசேப்பை விலையாகக் கொடுத்தபின் அவர்கள் மாறியிருக்க வாய்ப்புண்டு என்பதை நான் ஆதார மில்லாமல் குறிப்பிடவில்லையென்பதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். யோசேப்பு அவர்களைக் காவலிலிருந்து விடுவித்து, உங்கள் காரியம் மெய்யென்று விளங்க, உங்கள் இளைய சகோதரனைக் கூட்டி வாருங்கள் என்று சொன்னபோது, ஒருவரை ஒருவர் பார்த்து *"யோசேப்பு நம்மைக் கெஞ்சிக்கேட்டும் அவன் மன வியாகுலத்தை நாம் கண்டு கொள்ளவில்லையே என்று தங்களுக்குள் சொல்லிக்கொண்டனர்"* (42:20,21). ஆகையால், துன்பம் வந்தபொழுதெல்லாம், அவர்கள் யோசேப்பை நினைத்திருக்க வேண்டு மென்று இதிலிருந்து தெரிகிறது. அவர்களின் உண்மையற்ற வாழ்வு, யோசேப் போடு ஒரு முடிவுக்கு வந்திருக்கலாம். எப்படியோ, அவர்கள் உண்மை சோதிக்கப் பட்ட போது தாங்கள் தேறியிருப்பதை எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபித்துக் காட்டினர்.

சராசரி மனிதனாகிய யோசேப்பு இருந்த இடமாகிய எகிப்துக்குள், இன்னும் இப்பொழுது கிட்டத்தட்ட இருந்த இடம் தெரியாமல் போன *எகிப்துக்குள் பிரவேசிப்பதற்கே,* உண்மை சோதிக்கப்படுவது அவசியமானால், சர்வ வல்லமையுள்ள பரிசுத்த தேவன் வாசம்செய்யும், என்றென்றும் நிலைத்து நிற்கும் நித்திய வீடாகிய *பரலோகில் பிரவேசிப்பதற்கு* நம்முடைய உண்மை சோதிக்கப்பட வேண்டியது எவ்வளவு அவசியம் என்று எண்ணிப்பாருங்கள்!

அன்பான தேவனுடைய பிள்ளைகளே! நம்முடைய வாழ்வில் உண்மை எந்தளவு உள்ளது என்று நிதானித்துப் பார்ப்போம். நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையில் நாம் உண்மையாக உள்ளோமா? நம்முடைய குடும்ப வாழ்வில் நம்முடைய உண்மை எந்தளவில் உள்ளது? கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் உண்மையாக இருக்கிறோமா? பிள்ளைகள் பெற்றோருக்கும், பெற்றோர் பிள்ளைகளுக்கும் உண்மையாக இருக்கிறார்களா? அதற்கும் மேலாக நம்முடைய வாழ்வில், மணவாளனாகிய இயேசுக் கிறிஸ்து, மணவாட்டியாகிய சபையை நேசித்து உண்மையாக இருப்பது போல, நாம் ஒவ்வொருவரும், கிறிஸ்துவின் சபைக்கு உண்மையாக இருக்கிறோமா? சொல்லுங்கள். இன்னும் பரலோகத்தின் தேவன் பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு கொடுத்த தேவ வசனங்களுக்கும் நாம் உண்மையாக இருக்கி றோமா? சொல்லுங்கள்!.

## II அவர்களின் பொறாமை குணம் சோதிக்கப்பட்டது

யோசேப்பு தன் சகோதரர்களை தான் இருக்கும் எகிப்தில் ஏற்றுக் கொள்வதற்கு முன், இரண்டாவதாக அவர்களின் பொறாமை குணத்தைச் சோதித்தான்.

பொறாமை குணத்தின் பாதிப்பை யோசேப்பைக் காட்டிலும் அதிகமாக வேறு எந்த மனிதனாவது அனுபவித்திருப்பானா என்று யோசித்தால், பதில் கிட்டத்தட்ட இருக்க முடியாது என்றுதான் வரும். ஒருவேளை, ஆதியிலே நடந்த முதல் கொலையே பொறாமையின் விளைவால் தானே என்று சொன்னாலும், அது சடிதியாய் நடந்த ஒரு செயலாகையால், ஆபேல், பொறாமையின் விளைவை தன் வாழ்க்கையில் அனுபவிக்கவில்லை. ஆனால், யோசேப்பு தன் இளம் பிராயத்திலேயே அதை அணு, அணுவாக அனுபவித்தான். அதன் பாதிப்பு அவன் அரியணை ஏறியபோதும் விட்டபாடில்லை. ஆகவே, அவர்கள் உண்மை நிரூபிக்கப்பட்டாலும், இக்காரியத்தில் அவர்கள் எந்தளவு தேறியிருக் கிறார்கள் என்று அறிந்து கொள்ள முடிவு செய்தான். குறிப்பாக, *ராகேலின் குமாரனை* அவர்கள் இன்னமும் வெறுக்கிறார்களா என்பதை அறிந்து கொள்ள ஆர்வம் காட்டினான்.

தாங்கள் தகப்பனாகிய யாக்கோபிடம் கெஞ்சி, மன்றாடி, யூதாவின் உத்திரவாதத்தின் பேரில் இளையவன் பென்யமீனை எகிப்துக்கு இரண்டாம் தரம் வந்தபோது அழைத்து வந்தனர். தன் தாயின் மகனாகிய பென்யமீன் இவன் தான் என அறிந்த மாத்திரத்தில் அவன் உள்ளம் பொங்குகிறது. உணர்வுகளை அடக்க முடியாமல், அறைக்குள் சென்று அழுது முடித்து, வெளியே வந்து அவர்களுக்கு போஜனம் வையுங்கள் என்றான் (42:30,31) வயதின்படி வரிசையாக அமர வைக்கப்பட்டதைக் கண்டு அவர்கள் ஆச்சரிய மடைந்தார்கள். பிறகு, ஆகாரம் பங்கிட்டு அனுப்பப்பட்டபோது, தன் தாயின் மகனாகிய பென்யமீனுக்கு 5 மடங்கு கொடுத்தான். அவர்களனை வருக்கும் சிறந்த போஜனம் வயிறாரவே கொடுக்கப்பட்டிருக்கும். அங்கே பென்யமீனுக்கு ஐந்து மடங்கு அவசியமில்லை. ஐந்து மடங்கு போஜனத்தை அவனால் சாப்பிட்டிருக்கவும் முடியாது. அவனால் சாப்பிட முடியாதென்பது யோசேப்புக்கும் தெரியும். ஆயினும் ஒரு நோக்கத்தோடு அனுப்புகிறான். அதன் மூலம் அவர் களின் பொறாமை குணத்தை ஆராய்ந்தான். ஆனால், யாக்கோபின் குமாரர்கள் இச்சோதனையிலும் வென்றார்கள். " *அவர்கள் பானம் பண்ணி, அவனுடனே சந்தோஷமாயிருந்தார்கள்* " (43:34) என்று வசனம் சொல்லுகிறது. இருப்பினும் அவன், இன்னும் தன்னை வெளிப்படுத்தவில்லை.

அன்பானவர்களே, யோசேப்பு இருந்த எகிப்துக்குள் எட்டி வைப்பதற்கே பொறாமை குணம் துப்புவராக இருக்கக் கூடாதென்றால், இக்கொடுங்குணத் தோடு, நாம் தேவன் இருக்கும், பரலோகத்தில் பிரவேசிக்க முடியுமா? முடியாது. முடியவே முடியாது.

அருமையானவர்களே, தங்களைக் கொடுமையான முறையில் கட்டிப் போட்டிருந்த பொறாமையின் விலங்கை, யோசேப்பு விற்கப்பட்டதற்குப் பிறகு யாக்கோபின் குமாரர் தகர்த்தெறிந்தனர். *அக்குணம், இப்பொழுது தங்களுக் கில்லையென்று செயல் மூலம் நிரூபித்தும் காட்டினார். ஆனால், இயேசுவுக்கு சகோதரர்களாய் இருக்கும்படியான* (எபி. 2:11) பாக்கியம் பெற்ற கிறிஸ்தவர்கள்,

இயேசுவை விலையாகக் கொடுத்த பிறகும், இந்த எலும்புருக்கி நோயிலிருந்து விடுபடமுடியாமல் தவியாய்த் தவித்துக் கொண்டிருப்பது எவ்வளவு கேவலமானதென்று எண்ணிப் பாருங்கள்.

இன்றைக்கு எத்தனை கிறிஸ்தவ ஸ்தாபனங்கள், இக்கொடிய குணத்தால் சீரழிந்து கொண்டிருக்கிறது என்று சிந்தித்துப்பாருங்கள். கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் தான் எப்படியோ போகட்டும் என்றால், இது சபையையும் விட்டு வைக்கவில்லை. சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாக இருக்க வேண்டிய சபைகள், பொறாமை குணத்தால், சாத்தானின் கைக் கூலிகளாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. யாக்கோபின் குமாரர்களை வாய் கூசாமல் குற்றம் சுமத்தும் கிறிஸ்தவ சமுதாயமே! நாம் எப்பொழுது இதிலிருந்து விடுபடப்போகிறோம்? இன்னும் எத்தனை காலம்? யோசேப்பைக் குழியில் தள்ளிய கையோடு தங்கள் பொறாமை குணத்தையும் அவர்கள் குழியில் தள்ளி அதற்கு அவர்கள் சமாதி கட்டியிருக்கும் போது, தேவனுடைய பிள்ளைக ளென்று நம்மை அழைத்துக்கொள்ள விரும்பும் நாம், இயேசுவைச் சிலுவையில் அறையக் கொடுத்த பின்னரும் அக்குணத்தை உடும்புப் பிடியாய் பிடித்துக் கொண்டிருப்பது, நியாயமாகுமா?

இக்குணத்திற்கு, இப்பொழுதே விடை கொடுக்காவிட்டால், தேவன் வாசம் செய்யும் பரலோகம் நமக்கு சற்றும் சம்பந்தமில்லாத இடமாக மாறிவிடும். ஆகவே, பொறாமை குணத்திலிருந்து உடனடியாக விடுதலை பெறுவோம்.

## III *அவர்களின் சகோதர சிநேகம் சோதிக்கப்பட்டது*

யோசேப்பு, தன் சகோதரர்களைத் தான் இருக்கும் எகிப்தில் ஏற்றுக் கொள்வதற்கு முன், மூன்றாவதாக, அவர்களின் ஒற்றுமையை, சகோதர சிநேகத்தை சோதித்தான்.

முதல் இரண்டு சோதனையில் அவர்கள் அபார வெற்றி பெற்றிருந் தாலும், இதுவும் அவர்களுக்கு அவசியம் என்று கருதி சோதிக்கிறான். ஆம், இரண்டாம் தரம் அவர்கள் திரும்பிச் சென்ற போது, அவனவன் பையிலே அவனவன் பணத்தையும் பென்யமீன் பையிலே பணத்தோடு, யோசேப்பின் வெள்ளிப்பான பாத்திரத்தையும் போட்டுவிடும்படி வேலைக்காரர்களுக்குக் கட்டளை கொடுத்தான் (44:1,2) பிறகு, அவர்கள் புறப்பட்டு வெகுதூரம் போவதற்கு முன்பாக, விரட்டிச் சென்று, ஏன் இப்படிச் செய்தீர்கள் என்று அவர் களைப் பார்த்துக் கேட்கும்படி செய்தான். இருதயத்தைக் கொஞ்சம் கூட இளக்காமல், அவர்கள் மீது திருட்டுப்பட்டம் சுமத்துகிறான். பிறகு நடந்த தேடுதல் வேட்டையில் அந்த வெள்ளிப்பாத்திரம், பென்யமீன் சாக்கிலே கண்டுபிடிக்கப் பட்டபோது, என்னசெய்வதென்று தெரியாமல் ஆளாளுக்குத் தங்கள் வஸ்திரங் களைக் கிழித்துக்கொண்டார்கள் (44:13).

பிறகு, யோசேப்புக்கு முன்பாக, அவர்கள் நிறுத்தப்பட்டபோது, " என் ஆண்டவனாகிய உம்மிடத்தில் நாங்கள் என்ன சொல்லுவோம்? என்னத்தைப்

பேசுவோம்? எதினாலே எங்கள் நீதியை விளங்கப் பண்ணுவோம்? உம்முடைய அடியாரின் அக்கிரமத்தை தேவன் விளங்கப்பண்ணினார். பாத்திரத்தை வைத்திருக்கிறவனும், நாங்களும் என் ஆண்டவனுக்கு அடிமைகள்" என்றனர் (44:16) அதற்கு யோசேப்பு, இல்லையில்லை, அப்படிப்பட்ட செய்கை எனக்குத் தூரமாயிருப்பதாக, எவன் வசத்தில் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டதோ "அவனே எனக்கு அடிமை, நீங்களோ சமாதானத்தோடு உங்கள் தகப்பனிடத்திற்கு போங்கள் என்றான்" (44:17) அப்பொழுது, உத்திரவாதியாகிய யூதா, "ஒரு வார்த்தை" சொல்லுகிறேன் என்று ஆரம்பித்து, ஒரு குட்டிப் பிரசங்கத்தையே செய்து, பென்யமீனுக்குப் பதில் நானே அடிமையாயிருக்கிறேன் என்று சொல்லி, இறுதியில், " *இளையவனை விட்டு, எப்படி என் தகப்பனிடத்திற்குப் போவேன்? போனால் என் தகப்பனுக்கு நேரிடும் தீங்கை நான் எப்படிக் காண்பேன் என்றான்* ".

அதற்கு மேல் தன்னை அடக்கிக் கொள்ள முடியாத யோசேப்பு, எல்லோரையும் வெளியே போகச் சொல்லி, சத்தமிட்டு அழுது, தன்னை தன் சகோதரர்களுக்கு வெளிப்படுத்தினான். அங்கே யோசேப்பின் அழுகை, ஓர் அபயக்குரல் அல்ல. அது, அங்கீகார தொனி, அப்பொழுதிலிருந்து அவர்களை எகிப்தில் குடியேற்றுவதற்கான பணி ஏக தடபுட லாக நடந்தது.

எனதருமை வாசகர்களே, ஒரு சாதாரண தேசமாகிய எகிப்துக்குள் அடியெடுத்து வைப்பதற்கே, சகோதர ஒற்றுமை அவசியமானால், சராசரி மனிதனாகிய யோசேப்பு இருக்கும் இடத்தில் குடியேறவே சகோதர சிநேகம் அவசியமானால், நித்திய நாடாகிய பரலோகத்தில் பிரவேசிக்க, பரிசுத்தமும், நீதியும் நிறைந்த சர்வ வல்லவர் இருக்கும் நகரத்தில், நித்திய காலமாய் வாழ்வதற்கு, சகோதர சிநேகத்தில் எந்தளவு சிறந்து விளங்க வேண்டுமென்று எண்ணிப் பாருங்களேன்.

இப்பொழுது நாம் பார்த்தபடி, உண்மையும், பொறாமை அற்ற தன்மையும், சகோதர சிநேகமும் மாத்திரம் இருந்தால் போதும், பரலோகம் போய்விட முடியுமென்று நான் சொல்வதாக நினைத்துக் கொள்ளாதீர்கள். அப்படி யில்லை. யோசேப்பு, அவர்களிடம் அத்தவறுகளைக் கண்டதால், அவைகளிலிருந்து அவர்கள் விடுபட்டிருக்கிறார்களா என்று சோதித்தான். ஆம், என்று நிரூபணமான போதே, தான் இருக்குமிடத்தில் அவர்களையும் ஏற்றுக் கொண்டான்.

அதுபோலத்தான், நம்முடைய பாவங்கள் அனைத்தையும் கண்டறியும் தேவன், அவைகளிலிருந்து நாம் தேறியிருக்கிறோமா என்று நம்மை சோதித்து, தேறியிருந்தால், அவர் இருக்குமிடத்தில் நம்மைச் சேர்த்துக் கொள்வார். ஆகையால், வேதம் விவரிக்கும் எல்லாக் குணங்களிலும் தேறி, திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாக மாறி, நம்முடைய தேவன் வாசம் செய்யும் பரலோகம் சென்றடைவோம்.

ஒப்பிடமுடியாத அப்பாக்கியத்தைப் பெற, பரலோகத்தின் தேவன் நமக்கு அனுக்கிரகம் செய்வாராக! ஆமென்!.

# உள்ளடக்கம்


நிறுவன ஆசிரியர் உரை ..... 1

நிர்வாக ஆசிரியர் உரை ..... 4

சிறப்பு ஆசிரியர் உரை ..... 11

## தேவன்

இயேசு வாழ்க்கையை ஒளிமயமாக்குகிறார் .....14

இதோ, தேவ ஆட்டுக்குட்டி ..... 18

தாராளமாய்த் தருபவர் ..... 21

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் ..... 25

நாம் ஏன் பயப்படக்கூடாது? ..... 28

ஜனங்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள் ..... 31

## சாட்சியங்கள்

அண்டசராசரங்களின் ஆதாரத்தைப் புரிந்து கொள்ளுதல் ..... 34

அந்த அளவுக்கு யாரும் குருடில்லையே ..... 38

## தேவனுடைய வார்த்தை

எந்த அதிகார அளவினால் .... ..... 40

பொருத்தமான சுவிசேஷம் ..... 42

பழைய ஏற்பாட்டைப் படிப்பதற்கான காரணங்கள் ..... 45

பரிசுத்த அலங்காரத்துடனே தொழுது கொள்ளுங்கள் ..... 47

## வாழ்வதற்கான உபதேசங்கள்

எதற்காக ஞானஸ்நானம் ? ..... 49

எங்களுக்கு விமர்சகர்கள் தேவை இல்லை ..... 51

கிறிஸ்துவை அணிந்து கொள்ளுதல் .....53

## சபை

ஜனநாயகம் சிறந்ததல்ல .....55

இயேசுவால் கட்டப்பட்டபடியே சபை .....57

## சபை வளர்ச்சி

தேவனுடைய நித்திய நோக்கம் .....61

வளருகின்ற சபையின் குணாதிசயங்கள் .....67

## ஆராதனை

வண்டிக்கு இடமில்லையே .....69

ஆராதனையின் மதிப்பு .....71

## அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை


வேறு சில பாக்கியவான்கள் .....73

கிறிஸ்தவர்கள் வித்தியாசமானவர்கள் .....75

உங்கள் குழந்தைகளோடு ..... 78

நீங்கள் விசுவாசித்தால், அப்படியே பேசுங்கள் ..... 79

இவ்வுலகம் எனக்குச் சொந்த வீடல்ல ..... 81

பின் வாங்குதல் கூடாது ..... 83


## கிறிஸ்தவ இல்லம்


குழந்தை வளர்ப்பு தாய்மார் களுக்கானது மட்டுமல்ல .....86


## செயலில் கிறிஸ்தவம்


இன்று .... .....88

நாம் அவரை எப்படி அணிந்து கொள்கிறோம்? .....89

ஆத்துமாக்களை ஆதாயம் செய்வது ஞானமானது .....90

நீங்கள் ஒரு செயல்படுகிற அங்கத்தினரா? .... 92

நல்ல உக்கிராணக்காரராக இருங்கள் .... 93

நியாயத்தீர்ப்பு நாளுக்கு நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா? .... 97

உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள் .... 100


## வேத பகுதி பாடங்கள்


ஒற்றுமைக்காக வேண்டுகோள் .... 104


## வேதாகமக் கதாப்பாத்திரங்கள்


கிதியோன், விசுவாச மனிதன் .... 106

தொற்காள் எல்லோருக்கும் சிநேகிதி ....108


## வேதாகமக் கேள்விகள்


ஞானஸ்நானம் சம்மந்தமாக இரண்டு கேள்விகள் .... 111

# விலைகொடுக்க நாம் விருப்பமுள்ளவர்களாயிருக்கிறோமா?

## ARE WE WILLING TO PAY THE PRICE?

***Byron Nichols***

இயேசு தம்முடைய சீடர்களாயிருக்கும்படி ஒட்டுமொத்த மனித இனத்துக்கும் அழைப்பு விடுக்கிறார் (மத். 11:28,30). ஆனால், அவர் அழைப்பதற்கு மேலாக ஒன்றைச் செய்கிறார். ஆம், அவர் நம்மை வருந்தி அழைக்கிறார். அவர் நம்மை வெறுமனே அக்கறையற்ற நிலையில் அழைப்ப தில்லை; மாறாக, அவர் வருந்தி கேட்டுக் கொள்கிறார், கெஞ்சுகிறார், மன்றாடுகிறார். அவருடைய அழைப்பை எல்லோருமே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று அவர் உண்மையாகவே விரும்புகிறார்.

இயேசு முற்றிலும் நேர்மையானவராக, நேரடியாகப் பேசுகிறவராக இருக்கிறபடியால் அவர் மற்றவர்களைப் போல் இல்லாமல், அவருடைய அழைப்பை நாம் ஏற்றுக் கொள்வதற்கு நாம் செலுத்த வேண்டிய கிரயத்தை ஆரம்பத்திலேயே சொல்லி விடுகிறார்.

கொடுக்க வேண்டிய விலையொன்று இருக்கிறபடியால், நம்மை நாம் இயேசுவுக்கு அர்ப்பணிப்பதற்கு முன்பாக செல்லுஞ்செலவை கணக்குப் பார்க்க வேண்டும். இருந்தபோதிலும், இத்தகைய உறவில் எவைகளெல்லாம் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது என்பதை உணர்வதற்கு முன்பாகவே நம்மில் பலர் ஏற்கனவே அவரைப் பின்பற்றுபவர்களாக மாறியிருக்கலாம். நம்முடைய சூழ்நிலை என்னவாக இருந்தாலும் சரி, நாம் அவரோடு செய்து கொண்ட ஒப்பந்தத்திலும் நமது பங்கை பார்க்க வேண்டும். நாம் நமக்குள்ளே இவ்விதமாகக் கேட்டுக் கொள்ளலாம். " கிரயத்தைச் செலுத்த நாம் விரும்பமுள்ள வர்களாயிருக்கிறோமா? விருப்பமில்லையென்றால், மாற்று வழி ஏதாவது உண்டா என்று நாம் பரிசீலனை செய்ய வேண்டும் ".

இயேசுவின் சீஷராயிருப்பதற்கான விலை பற்றி இயேசுவே தம்முடைய வார்த்தைகளைக் கொண்டு இவ்விதமாகச் சொல்லியிருக்கிறார் (மத். 16:24,26; மாற்கு 8:34,38; லூக்கா 9:23,26; 57,62; 14:25,33). வேத வாக்கியங்களை ஜாக்கிரதையாக வாசித்து முடித்த பிறகு, நாம் இவ்விதமாக

நமக்குள்ளே கேட்டுக் கொள்ள வேண்டும் " *என்னை நான் வெறுத்து அனுதினமும் சிலுவையை எடுத்துக்கொண்டு அவரைப் பின்பற்ற விருப்ப முள்ளவனாயிருக்கிறேனா?* " என்று

வேறு காரியங்களுக்கு மத்தியில், இயேசுவைப் பின்பற்றும் ஒருவர் பரிகாசம், நிராகரிப்பு, தவறான பிரதிநிதித்துவம், ஏமாற்றம் மற்றும் சோர்வு போன்றவைகளுக்கு உட்படுத்தப்படுகிறார் (1) பரிகாசம் என்பது அநேகமாக அழைக்கப்பட்ட கிறிஸ்தவன் சகித்துக் கொள்ளும் கடினமான காரியங்களுள் ஒன்றுபோல் தெரிகிறது. நாம் யாரும் பரிகாசம், நிராகரிப்பு, அவமதிப்பு, நிந்தை அல்லது கேலிக்கு உட்பட விரும்புவதில்லை. ஆனால், இவைகள் சிலவேளை களில் நம்மை இயேசு கிறிஸ்துவோடு அடையாளப்படுத்துகின்றன. இயேசு கிறிஸ்து நாம் ஒருவரும் ஒருபோதும் அனுபவித்திராத நிந்தைக்கு உட்படுத்தப் பட்டார். (2). நிராகரிக்கப்படுதல், இயேசுவைப் போல் வாழ முயற்சிக்கும் போதோ அல்லது இயேசுவுக்காக வாழ முயற்சிக்கும் போதோ, சிலவேளை களில் நாம் நண்பர்களாலோ, உடன் வேலையாட்களாலோ வெளியேற்றப் படலாம், மேலும், நம் உறவினர்களால் நாம் ஒதுக்கப்படலாம். அப்போ தெல்லாம் நம் வேலையே நமக்கு யார் மிக முக்கியமானவர் என்பதைத் தீர்மானிப்பது தான். அப்படித் தீர்மானிக்கும் போது, இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களைப் பார்த்து நண்பர்களைவிட, உலகப் பொருள்களை விட, நமக்குப் பிரியமான உறவினர்களை விட, குடும்ப அங்கத்தினர்களை விட அதிகமாக இயேசுவை நேசிக்க வேண்டுமென்று இயேசு சொன்னதை நினைவில் கொள்ள வேண்டும் (3) தவறாக பிரதிநிதித்துவப்படுத்தப்படுதல். மக்கள் நம்மை அநியாயமாக அநீதியுடன் சித்தரித்துக்காட்டுவது எவ்வளவு வேதனையை நமக்குத் தரும்! இருந்தபோதிலும் இயேசுவுக்கு இப்படிப்பட்ட கொடுமைகள் எல்லாம் பரிச்சயமானது தான், " சீஷன் தன் போதகனிலும், வேலைக்காரன் தன் எஜமானிலும் மேற்பட்டவனல்ல " என்று இயேசு சொல்லி யிருக்கிறார் (மத். 10:24). (4) ஏமாற்றம், இது இயேசுவைப் பின்பற்றுவதன் ஒரு பகுதியாக இருக்கிறது. சிலரால் நாம் ஏமாற்றப்படும்போது, அப்படி ஏமாற்றுபவர்க ளிடத்தில் இயேசுவின் குணாதிசயங்களை நாம் காண் பதில்லை. அப்போது தேவன் இவ்வுலகத்தை நம்முடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவில்லை என்பது போல் தோன்றுகிறது. அப்போதெல்லாம் துன்மார்க்கர் காரியங்களை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைக்கவும், மோசமான காரியங்கள் நடக்க தேவன் அனுமதிப்பது போலவும் தெரிகிறது. (5) சோர்வு, நன்மை எப்போதும் தீமையை வெல்ல முடியாத சூழ்நிலையை நாம் பார்க்கும் போது, உற்சாகத்தை இழந்து விடுகிறோம், நாம் சோர்ந்து போகிறோம். சில வேளைகளில் கிறிஸ்துவுக்குள் இருக்கும் நம் சகோதரர்கள் வாழ வேண்டிய அளவுக்கு வாழாதபோது, பெரும்பாலும் அவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மற்றவர்களை விட உயர்வாக எண்ணப்படுவதையும், இயேசு தம்முடைய


வார்த்தையில் எதைப் போதித்திருக்கிறாரோ அதன்படி வாழக் கடுமையாக முயற்சிக்கிறவர்களைவிட இவர்கள் உயர்வாக மதிக்கப்படுவதையும் பார்க்கும் போது நன்மை தீமையை வெல்வதுபோல் தெரியவில்லை. ஆயினும், நாம் அவரை உண்மையாகப் பின்பற்றுகிறவர்களாயிருந்தால், நாம் பாடுகள் பட வேண்டியதாயிருக்கும். " அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2 தீமோ. 3:12).

இயேசுவைப் பின்பற்றுவதில் நம் சிலுவையும் உள்ளடக்கம். இதில் சரண் அடைவதும் உள்ளடக்கம். இது ஒருபோதும் எளிதான காரியமல்ல. மற்றவர்களுடைய விருப்பத்திற்கு ஆதரவாக நம் விருப்பத்தை விட்டுவிடுவது எப்போதுமே கடினமான ஒன்றாக இருக்கிறது. ஆனால், விலையின் ஒரு பகுதியாக சிலுவை இருக்கிறது என்று சொல்லுகிறார். நம்மை வெறுப்பது என்கிற சிலுவை அல்லாமல், சிலுவையின் கிறிஸ்துவை நாம் பின்பற்ற முடியாது.

சாத்தான் நாம் கர்த்தரை சிரமமின்றி சேவிக்க விடமாட்டான் (1 பேதுரு 5:8; 1 கொரி. 10:12). இது நாம் கொடுக்க வேண்டிய விலையின் ஒரு பகுதியாக இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் தனியாக இல்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். 2 கொரி. 1:3,7 வசனங்களில் பவுலின் வார்த்தைகள் இயேசுவின் சீஷர்களுக்கு உற்சாகம் மற்றும் புத்துணர்ச்சியின் உண்மையான ஆதாரமாகத் தான் இருக்க வேண்டும். பவுல், தேவன் தான் ஆறுதலின் ஆதாரமாக இருப்பதாகவும், பாடுகளின் மத்தியில் ஆறுதலைத் தருவதாகவும் சொல்கிறார். மேலும், அவர் சொல்லும் போது பாடுகள் ஆறுதலையும், இரட்சிப்பையும் கொண்டு வருவதாகவும் சொல்கிறார். சாத்தானால் உண்டாகும் சோதனைகள் ஒவ்வொன்றிலிருந்தும் தேவன் தப்பித்துக் கொள்ளும் போக்கை தேவன் உண்டாக்குவார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் (1 கொரி. 10:13). மேலும், இயேசு தம்மைப் பின்பற்றுபவர் களிடத்தில் "உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் அவர்களுடனே இருப்பதாக வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார் " (மத். 28:20).

ஆம், கிறிஸ்தவராயிருப்பதற்கு நாம் விலை கொடுக்க வேண்டியதாயி ருக்கிறது. அந்த விலையை நாம் கருத்தில் கொள்ள வேண்டும், ஆனால், நாம் கிறிஸ்தவராக இல்லாமலிருப்பதற்கான விலையைப் பற்றியும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

கிறிஸ்தவ நண்பர்களே, நாம் நம்மை ஒப்புக்கொடுத்திருக்கிறோம். அதைக் காத்துக் கொள்வோம். கிறிஸ்தவரல்லாத நண்பர்களே, நீங்கள் உங்களை தேவனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டிய அவசரத் தேவையில் இருக்கிறீர்கள். உங்களால் அதைச் செய்ய முடியும். நீங்கள் அப்படிச் செய்ய பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் தங்கள் பங்கை செய்வார்கள். உங்களால் அதைச் செய்ய முடியும். செய்யுங்கள்.



# இயேசு வாழ்க்கையை ஒளிமயமாக்குகிறார்

# JESUS ILLUMINATES LIFE

*Randall Caselman*

இயேசு கிறிஸ்து கூடாரப் பண்டிகையைக் கொண்டாட எருசலேமுக்கு வந்தார், அந்த கூடாரப் பண்டிகை தீபத் திருவிழா என்றும் அழைக்கப்பட்டது. அது இஸ்ரவேலர்கள் வனாந்திரத்தில் அலைந்து திரிந்த போது தேவனுடைய வழி நடத்துதலையும், அக்கறையையும் நினைவுகூரும் படியாக அவர்களால் கொண்டாடப் பட்ட பண்டிகையாக இருக்கிறது. இந்த தீபத் திருவிழா தேவாலய வாசலில் மிகப்பெரிய குத்து விளக்கை ஏற்றுவதுடன் முடிவடைகிறது. இந்தப் பின்னணியில் தான் இயேசு, " *நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்* " என்றார். அதன் பிறகு இயேசு எருசலேம் பட்டணத்திற்குள் வெற்றி கரமாக பிரவேசித்த போது " *என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனும் இருளில் இராதபடிக்கு, நான் உலகத்தில் ஒளியாக வந்தேன்* " என்று சொன்னார்.

அவர் ஒளியாயிருப்பது நம்முடைய ஜீவியங்களில் எப்படிப் பட்ட தாக்கத்தை ஏற்படுத்துகிறது? ஒளியில் எதையும் மறைத்து வைக்க முடியாது. இயேசு நம்முடைய

வாழ்க்கையை ஒளிமயமாக்கும் போது நாம் உண்மையாகவே யாராக இருக்கிறோமோ அதை நாம் அப்படியே பார்க்கிறோம். நாம் எப்படி இருக்கிறதாக நினைக்கிறோமோ அப்படி அல்ல. சரி எது, தவறு எது என்பதற்கு இயேசுவே நமக்கு சிறந்த மாதிரியாயிருக்கிறார். நாம் இயேசு வாகிய ஒளியினிடத்தில் நம் வாழ்க்கையைத் தூக்கி பிடிக்கும் போது மட்டுமே உண்மையாக நாம் யார் என்பதைக் காண்கிறோம். நம் தவறான மனப்பான்மைகளை, பாவ முள்ள எண்ணங்களை, வார்த்தை களை செயல்பாடுகளை நாம் காண் கிறோம். கர்த்தருடைய மகிமையை நாம் ஆழ்ந்து சிந்திக்கும் போது, நாம் மாற்றப்பட்ட மக்களாக மாறுகிறோம் என்று பவுல் சொல்கிறார். நாம் அவரைப்போல் மாறுகிறோம். நாமெல்லாரும் முகம் திறக்கப்பட்ட நிலையில் கர்த்தருடைய மகிமை யைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்கி றோம், மேலும், கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமை யின் மேல் மகிமையடைந்து மறு ரூபப்படு கிறோம். ஒளியாகிய வார்த்தையை, சுயாதீனப் பிரமாணத்தை உற்றுப் பார்ப்பது, கண்ணாடியிலே முகத்தை உற்றுப் பார்ப்பது போன்றதாகும். அதாவது, நாம் எப்படி இருக்கிறோ மோ அதைக் காண்கிறோம். நம்மை நாமே ஒப்பிட்டுப் பார்க்காமல் இயேசு வாகிய ஒளியோடு நம்மை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்று வேத வசனங்கள் நமக்குப் போதிக்கின்றன.

## இயேசு தேவனிடத்தில் போகும் வழியை வெளிச்சமாக்குகிறார்

"*நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலே யல்லாமல் ஒருவனும் பிதா வினிடத்தில் வரான்; என்னை அறிந் திருந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்*" (யோவான் 14:6,7). இயேசுவுக்கு வெளியே தேவனோடு நமக்கு எந்த உறவும் இல்லையென்பதை அறிந்து கொள்ள வேண்டும். தேவன் இந்த உலகை மானது தம்மோடு ஒப்புரவாக, தம்முடைய குமாரனை தெரிந்து கொண்டிருக்கிறார். "*அவராலே யன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர் களுக்குள்ளே அவருடைய நாமமே யல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை*" (அப். 4:12). பவுல் அகிரிப்பாவிடம் தேவன் தன்னை புறஜாதிகளின் கண்களை திறக்கும்படி கட்டளையிட்டிருப்பதாகச் சொன்னார். அதன் காரணமாக நாம் இருளிலிருந்து திரும்பி வெளிச் சத்தை அடைந்து, நம் பாவங்களி லிருந்து மன்னிப்பையும் பெற்றுக் கொள்ளலாம்.

## இயேசு கடினமான பாதைகளை வெளிச்சமாக்குகிறார்

தேவன் ஒருபோதும் சோதனைகள், பிரச்சனைகள் இல்லாத வாழ்க்கையை நமக்கு வாக்குத்தத்தம் செய்யவில்லை.

அவர் நமக்கு செய்திருக்கிற வாக்குத்தத்தம், நாம் வழிநடத்தப்படுவதற்கு அவருடைய பிரசன்னத்தையும், வெளிச்சத்தையும் நமக்கு தருவதாகச் சொல்லியிருக்கிறார். தாவீது இதை அறிந்தவராக இவ்விதமாக எழுதினார். "*கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்* ". " *உம் வசனம் என் கால்களுக்குத் தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது* " என்று. இயேசு நம்முடைய கடினமான நேரங்களை இரண்டு விதமாக வெளிச்சமாக்குகிறார்; ஒன்று, நமக்கு முன்பாக இருந்த அனுபவத்தின் மூலமாக, இரண்டு, நம்மோடு கூட சேர்ந்து நடப்பதன் மூலமாக. " *நான் உங்களோடு கூட எப்போதும் இருப்பேன்....நான் உங்களை விட்டு விலகுவதுமில்லை உங்களை விடுவதுமில்லை* ".

வெளிச்சமும், வளர்ச்சியும் ஒன்றோடொன்று சம்மந்தமுடையதாயிருக்கிறது

வெளிச்சம் எங்கே இருக்கிறதோ அங்கே தான் வளர்ச்சியும் சாத்தியம். இதை நீங்கள் சந்தேகித்தால், உங்கள் வீட்டின் ஒரு பகுதியில் தோட்டம் அமைத்துப் பாருங்கள். உறுதியான விசுவாசம், ஆழமான விசுவாசம், ஆழமான அர்ப்பணிப்பு, உண்மையான ஆவிக்குரிய தன்மை போன்றவைகளெல்லாம் இயேசுவைத் தங்கள் வாழ்வில் ஒளியேற்ற அனுமதிப்பவர்களுக்குச் சொந்தமானவைகள். கிறிஸ்துவில் ஜீவன் இருக்கிறது. ஏனென்றால், "*அவர் மனுஷர்களுக்கு வெளிச்சமாயிருக்கிறார்* ". எபிரெய எழுத்தாளர் சிலரை பெலவீனர்களாகவும், முதிர்ச்சியற்றவர்களாகவும், குழந்தைகளாகவும் படம் பிடித்துக் காட்டுகிறார். அவர்கள் கர்த்தருடைய வார்த்தையைப் பற்றிய அறிவில் வளராத படியால் அவ்விதமாகச் சொன்னார்.

வெளிச்சத்தால் பிரதிபலிக்க முடியும்

இயேசு நம்முடைய வாழ்க்கையை ஒளியேற்றும் போது மற்றவர்கள் நம் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற பரம பிதாவை மகிமைப்படுத்துவார்கள் (மத். 5:16). நாம் வெளிச்சமாக இல்லை, வெளிச்சத்தை பிரதி பலிக்கிறவர்களாயிருக்கிறோம். பவுல் பலிப்பி பட்டணத்து சபையார் உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிக்க வேண்டுமென்று புத்திமதி சொல்கிறார். நாம் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாயிருந்து இயேசு நமக்குள் வெளிப்பட அனுமதிக்க வேண்டும். " *கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது* " (பிலி. 2:5).

வெளிச்சத்திற்கு எல்லை உண்டு

வெளிச்சத்தை கட்டுப்படுத்துகிற இரண்டு வழிகள் உண்டு. முதலாவது, இயேசுவின் சித்தத்திற்கு முன்பாக நம்மையும், நம்முடைய தனிப்பட்ட விருப்பத்தையும் வைக்கும் போது நாம் வெளிச்சத்தை கட்டுப்படுத்துகிறோம். நம்முடைய நற்கிரியைகளை கட்டுப்படுத்துகிறது

யார்? வேதத்தைப் படிப்பது, ஜெபிப்பது, விசுவாசம், அர்ப்பணிப்பு, உதாரத்துவமான காணிக்கை மற்றும் ஊழியம் செய்வது போன்றவற்றை என் வாழ்விலும், உங்கள் வாழ்விலும் கட்டுப்படுத்துவது யார்? நாம் தான். இதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்! இரண்டாவது, தேவன் ஒருநாளில் ஒளியை கட்டுப்படுத்துவார். மனிதர்கள் கிரியை செய்ய முடியாத இரவு வருகிறது. மரணம் வெளிச்சத்தைக் கட்டுப் படுத்துகிறது. வெளிச்சம் இருக்கும் போதே வேலை செய்யுங்கள். இன்றே இரட்சணிய நாள், இப்போது தான் சரியான நேரம்.

வெளிச்சம் பாவங்களை மன்னிக்கிறது.

நற்செய்தி! "*அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்* (1 யோவான் 1:7).

இயேசு உங்கள் வாழ்வை ஒளிமயமாக்கட்டும்.

## சமாதானம் என்பது என்ன?

அது சோதனைகள் அழுத்தும் போது உண்டாகும் அமைதி;

அது தேவன் சிறந்ததை அறிந்திருக்கிறார் என்கிற நம்பிக்கை;

அது சலசலப்பில்லாத அமர்ந்த தன்மை

அது எதைப் பற்றியும் கவலைப்படாத அமைதி

அது நம் வாழ்க்கைப் பாதையில் கொண்டிருக்கும் அமைதியான நம்பிக்கை;

அது தேவன் மீது நமக்கிருக்கும் நன் நம்பிக்கை


-George B. Adams

தேவன்

# இதோ, தேவ ஆட்டுக்குட்டி

## Behold, the Lamb of God

*Hans J. Dederscheck*



இரட்சிப்பின் திட்டத்தில் கிறிஸ்து மாம்சத்தில் வெளிப் படுவது ஓர் உயரிய தேவனுடைய நோக்க மாயிருக்கிறது. விழுந்து போன மனிதன் தன்னைத்தானே இரட்சித் துக் கொள்ள இயலாதவனாயிருக் கிறான். மனித இனம் தன்னுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இரட்சகராக பெற்றுக்கொள்வதை தேவன் சாத்திய மாக்கினார்.

" தேவ ஆட்டுக்குட்டியானவர் " தேவன் தம்முடைய நீதியைச் சரிக்கட்டவும், பாவமுள்ள மனித இனத்தை இரட்சிப்பதற்குமான தேவனு டைய சொந்த பலியாயிருக் கிறது. யாத் 12:1-30 வசனங்களில் இடம் பெற்றுள்ள பஸ்கா ஆட்டுக்குட்டி மாபெரும் இரட்சிப்பை இஸ்ரவேலுக்கு நினைப்பூட்டியது. இந்தப் பழைய ஏற்பாட்டு பழக்கம் நிஜமாகிய கிறிஸ்துவுக்கு நிழலாயிருந்தது. கிறிஸ்து தேவ ஆட்டுக்குட்டியாக இருக்கிறார் (யோவான் 1:29-36). பவுல் I கொரி 5:7ல் கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லும் போது, "நீங்கள் புளிப் பில்லாதவர்களாயிருக்கிற படியே, புதிதாய்ப் பிசைந்தமாவா யிருக்கும் படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப் போடுங்கள் என்றார். ஏனெனில், நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே" என்று சொல்கிறார்.

கிறிஸ்து இப்பூமிக்கு வருவதற்கு சுமார் 700 வருடங் களுக்கு முன்பாக ஏசாயா என்னும் பேர் கொண்ட தேவனுடைய தீர்க்க தரிசி பரிசுத்த ஆவியின் ஏவுதலி னால் இவ்விதமாக அறிவித்தார். "*நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமா கிறோம்*" (ஏசாயா 3:5). அதே தேவனுடைய மனுஷன் குறித்த

காலத்தில் வரவிருந்த தேவ ஆட்டுக் குட்டியைப் பற்றிப் பேசினார். "...அவர் அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஓர் ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர்கத்திரிக் கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடா திருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந் தார் (ஏசாயா 53:7). மேலும், யோவான் வெளிப்படுத்தின விசேஷத்தில் உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவ புஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள்" என்று (வெளி 13:8)ல் எழுதி இருக்கிறார்.

தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்து கள்ளங்கபட மற்ற வராக இருந்தார். அவருடைய வாழ்க்கையானது பாவத்தால் தீண்டப்படவில்லை (எபி. 4:15; Iபேதுரு 2:22). எனவே, தேவ குமாரனுடைய வாழ்க்கை நமக்கு சிறந்த முன்மாதிரியாயிருக்கிறது (Iபேதுரு 2:21) பவுல் தான் கிறிஸ்து வின் வாழ்க்கையைப் பின்பற்றின தை தொடர்ந்து வலியுறுத்தியிருக் கிறபடியால் கிறிஸ்தவர்களால் பவுலின் முன் மாதிரியை வாழ்க்கை யிலும், கிரியையிலும் பின்பற்ற முடியும் (I கொரி 11:1).

கேடுகொண்ட ஆத்துமாக்கள் அவரை பாவியென்று குற்றஞ்சாட்டி இருந்தாலும் கூட, தேவ ஆட்டுக் குட்டியின் வாழ்க்கை பனியைப் போல் வெண்மையானதாகவும், எல்லா நிலையிலும் தூய்மையான தாகவும் இருந்தது (யோவான் 8:46). சுவிசேஷப் புத்தகங்களை நாம் வாசிக்கும் போது, அவரை அறிந்த மனித சாட்சிகள் கர்த்தரு டைய வாழ்க்கையில் எந்த ஒரு குற்றத்தையும் காணமுடியவில்லை என்று காட்டுகின்றன.

இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் கூட, "குற்ற மில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்ததினால் பாவஞ்செய்தேன் என்றான்" (மத் 27:4).

"அப்பொழுது பிலாத்து பிரதான ஆசாரியர்களையும், ஜனங்களை யும் நோக்கி : இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காண வில்லை என்றான்" (லூக்கா 23:4).

"அவன் (பிலாத்து) நியாயா சனத்தில் உட்கார்ந்திருக்கையில் அவனுடைய மனைவி அவனிடத்தில் ஆள் அனுப்பி : நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்ய வேண்டாம் ; அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகுபாடுபட்டேன் என்று சொல்ல சொன்னாள்" (மத் 27:16).

ஒரு ஆட்டுக்குட்டியைப் போல் இயேசு மென்மையானவராக இருந்தார். கர்த்தருடைய தீர்க்கதரிசி ஒருவர் இவ்விதமாகச் சொன்னார். அவர் கூக்குரலிடவுமாட்டார், தம்முடைய சத்தத்தை உயர்த்தவும் அதை வீதியிலே கேட்கப் பண்ணவு மாட்டார் (ஏசாயா 42:2). தேவ ஆட்டுக்குட்டியாகிய கர்த்தராகிய இயேசு மனந்திரும்பியவர்களை

ஏற்றுக்கொள்ள மறுத்ததில்லை (யோவான் 8:3-11).

பழைய ஏற்பாட்டின் நாட்களில் இருந்த ஆட்டுக்குட்டியைப் போல, கிறிஸ்து பாவ நிவாரண பலியாக இருந்தார் (எபி.10:4-8). "அவர் தம்மைத் தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசி காலத்தில் ஒரே தரம் வெளிப்பட்டார்" (எபி. 9:26). "இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறோம்" (எபி. 10:10). எனவே, கிறிஸ்துவும் ஜனங்களுடைய பாவங்களுக்காக தம்மை பலியாக ஒப்புக் கொடுத்ததினாலே, பாவ மன்னிப்புண்டாகும்படி அநேகருக்காக தம்முடைய இரத்தத்தைச் சிந்தினார் (மத். 26:28).

நம் கர்த்தர் ஆட்டுக்குட்டியைப் போல சாந்தமுடையவராக இருந்தார். "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! *நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன் ; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் (மத் 11:28-30)* என்று அவர் சொன்னார். இயேசு கிறிஸ்து, "*ஒரு ஆட்டைப் போல அடிக்கப்படுவதற்கு கொண்டு போகப்பட்டார்; மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப் போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார்*" என்று தேவனுடைய வார்த்தை நமக்குச் சொல்கிறது (அப். 8:32).


கடைசியாக, நம்முடைய கர்த்தர் பிதாவாகிய தேவனுக்கும், அவருடைய சித்தத்திற்கும் கீழ்ப்படிகிறவராயிருந்தார்: "*பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கும்படி செய்யும் ; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆககடவது* " (லூக்கா 22:42) என்றார்.

## முதல் நூற்றாண்டும், 21ம் நூற்றாண்டும்

**மு**தல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் இயேசுவைப் பற்றிய காரியங்களை எடுத்துச் செல்வதற்கு உபகத்திற்குள் சென்றனர்.

**ஆனால்,**

இருபத்தோரம் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் இயேசுவைப் பற்றிய காரியங்கள் தங்களுக்குச் சொல்லப்படுவதற்கு சபைக் கட்டிடத்திற்குக் கூட ஒழுங்காக வருவதில்லை. அப்படித்தானே!



# தாராளமாய்த் தருபவர்

## The Great Provider

*Jeril (Polly) Cline*

எகிப்திய சேனை செங் கடலில் மூழ்கடிக்கப்பட்டு மூன்று நாட்களாகி விட்டது. மோசேயின் பாடலும், இஸ்ரவேலின் பாடலும் சில இஸ்ரவேலர் களுடைய உதட்டில் இன்னும் இருந்திருக்கும். ஆனால், ஜனங்கள் சூர் வனாந்திரத்தில் இருக்கிறார்கள், அவர்களுக்கு குடிப்பதற்கு தண்ணீர் இல்லை. போற்றுதல் மற்றும் துதியின் இடத்தை முறுமுறுப்பு பிடித்து விட்டது. " நாங்கள் என்னத்தைக் குடிப்போம்" என்பது தான் அவர் களுடைய மிகப்பெரிய கவலையாக

இருந்தது. கர்த்தர் மாராவின் கசப்பான தண்ணீரை மதுரமாக மாற்றினார் (யாத். 15:23,25).

இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எகிப்தை விட்டு புறப்பட்டு ஒரு மாதம் ஆனது. அவர்கள் பாவ மென்னும் வனாந்திரத்திற்கு வந்தார்கள். " *அந்த வனாந்திரத்திலே இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லோரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறு முறுத்து; நாங்கள் இறைச்சிப் பாத்திரங்களண்டையிலே உட்கார்ந்து அப்பத்தைத் திருப்தி யாகச் சாப்பிட்ட எகிப்து தேசத்திலே, கர்த்தரின் கையில் செத்துப் போனோமானால் தாவிளை; இந்தக் கூட்டம் முழுவதையும் பட்டினி யினால் கொல்லும்படி நீங்கள் எங்களைப் புறப்படப் பண்ணி இந்த வனாந்திரத்திலே அழைத்து வந்தீர் களே"* என்று அவர்களிடத்தில் சொன்னார்கள் (யாத். 16:2,3).

அவர்களுடைய முறு முறுப்பை கேட்ட தேவன் மோசே யிடம் இவ்விதமாகச் சொன்னார். " *நான் உங்களுக்கு வானத்திலிருந்து அப்பம் வருஷிக்கப் பண்ணுவேன்; ஜனங்கள் போய், ஒவ்வொரு நாளுக்கு வேண்டியதை ஒவ்வொரு நாளிலும் சேர்த்துக் கொள்ள வேண்டும்; அதினால் அவர்கள் என் நியாயப்பிரமாணத்தின்படி நடப்பார் களோ, நடக்கமாட்டார்களோ என்று அவர்களைச் சோதிப்பேன்* " (யாத். 16:4) என்றார்.

எனவே, மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரையும் கூட்டி இவ்விதமாகச் சொன்னார்கள். " *கர்த்தர் உங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணினவர் என்பதைச் சாயங் காலத்தில் அறிவீர்கள். விடியற் காலத்தில் கர்த்தருடைய மகிமை யையும் காண்பீர்கள்; கர்த்தருக்கு விரோதமான உங்கள் முறு முறுப்புக் களை அவர் கேட்டார்; நீங்கள்* எங்களுக்கு விரோதமாய் முறுமுறுக் கிறதற்கு நாங்கள் எம்மாத்திரம் என்றார்கள்" (யாத். 16:6,7).

சாயங்காலத்தில் காடைகள் வந்து விழுந்து பாளயத்தை மூடிக் கொண்டது. விடியற்காலத்தில் பாளயத்தைச் சுற்றி பனி பெய் திருந்தது. பெய்திருந்த பனி நீங்கின பின், இதோ, வனாந்தரத்தின் மீதெங்கும் உருட்சியான ஒரு சிறிய வஸ்து உறைந்த பனிக்கட்டிப் பொடியத்தனையாய்த் தரையின் மேல் கிடந்தது. இஸ்ரவேல் புத்திரர் அதைக்கண்டு, அது இன்னது என்று அறியாதிருந்து, ஒருவரை ஒருவர் பார்த்து, இது என்ன என்றார்கள்" (யாத். 16:13,15).

தேவனிடத்திலிருந்து அனுதின ஆகாரம் என்பது, நம் ஆண்டவர் இப்பூமியிலிருந்த நாட்களில் அவருடைய இருதயத் திலும் இருந்த ஒன்று தான். "....எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" (மத். 6:11) என்றார்.

யார் இந்த மாபெரும் போஷகர், நம் தேவைகள் எல்லா வற்றையும் அவரால் சந்திக்க முடியும் என்று அவரை நாம் நம்ப முடியுமா? அதுவும் போராட்டக்காரர்களான அந்த இஸ்ரவேலர்களை திருப்தி யாக்கிப் பல வருடங்கள் ஆகிவிட்ட நிலையில் அவரை நாம் நம்ப முடியுமா?

மோசேயின் தேவைகளைச் சந்திப்பதற்கும், முன்பு அடிமைகளா யிருந்த முப்பது முதல் நாற்பது இலட்சம் மக்களை தினமும் திருப்தி யாக்குவதற்கு அதிகமான ஆகாரம் தேவை!

இராணுவத்தில் வீரர்களின் உணவு மற்றும் தங்குமிடத்திற்கு பொறுப்பேற்கும் அதிகாரியின் கூற்றுப்படி மோசேக்கு தினமும் அந்த மக்களுக்கு கொடுக்க 1500 டன் உணவு தேவைப்பட்டிருக்க வேண்டும்! அவ்வளவு ஆகாரத்தை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்ல எவ்வளவு சிரமப்பட்டிருப்பார் என்று கூறுகிறார். மேலும் இன்றைய சூழ்நிலையில் அத்தனை ஆகாரத்தையும் எடுத்துச் செல்ல வேண்டுமென்றால் ஒரு மைல் நீளமுள்ள இரண்டு சரக்கு ரயில்கள் தேவைப்படும்.

அவர்கள் வனாந்தரத்தில் வெளியே இருந்தபடியால் உணவை சமைப் பதற்கு விறகு அவசியப்பட்டி ருக்க வேண்டும்; மேலும், ஒவ்வொரு மைல் தூரத்திற்கும் அதைச் எடுத்துச் செல்ல சில இரயில்கள் இன்று தேவைப்படும். இதை 365 நாட்களுக்கு கணக்குப் போட்டால் அதுவும் நாற்பது வருடங்களுக்கு கணக்குப் பார்த்தால் என்ன ஆகும்?

ஆம், அவர்களுக்கு தண்ணீர் அவசியப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் குடிப்பதற்கு போதுமான தண்ணீரும், சில பாத்திரங்களை கழுவுவதற்கென்று தேவையான தண்ணீர் என்று எடுத்துக் கொண்டா லும் கூட ஒரு நாளுக்கு சுமார் 3 கோடி லிட்டர் தண்ணீர் அவசியப் பட்டிருக்கும், மேலும், 1800 மைல் நீளமுள்ள தண்ணீர் தொட்டி களுடன் கூடிய சரக்கு ரயில் தண்ணீர் கொண்டு வருவதற்கு தேவைப் படும். அவர்கள் நடந்து சென்ற வனாந்தரத்தில் ஏரிகள் இல்லா திருந்தன, ஒரு சில கிணறுகளே இருந்தன.

வேறொரு காரியம் என்னவென்றால் இஸ்ரவேலர்கள் எகிப்தை விட்டு கடந்து வந்த போது, அவர்கள் ஒரே ராத்திரியில் செங்கடலை கடக்க வேண்டிய தாயிருந்தது. அவர்கள் ஒருவர் பின் ஒருவராக வரிசையாக குறுகிய பாதையில் சென்றிருந்தால் அந்த வரிசை எண்ணூறு மைல் தூரத் திற்கு நின்றிருக்கும், அது மட்டுமல்ல செங்கடலைக் கடப்பதற்கு அவர் களுக்கு முப்பத்தைந்து நாட்களும், இரவுகளும் தேவைப்பட்டிருக்கும். ஒரே இராத்திரியில் அவர்கள் தப்பித்து அந்த செங்கடலில் ஐயாயிரம், ஐயாயிரம் பேராக நடந்து

செல்வதற்கு மூன்று மைல் தூரத்திற்கு விஸ்தாரமான இடம் இருந்திருக்க வேண்டும்.

மோசே எகிப்தை விட்டு புறப்படுவதற்கு முன்பு இதைப்பற்றி எல்லாம் கணக்குப் போட்டிருப்பார் என்று நினைக்கிறீர்களா? இல்லை, அவர் தேவன் மீது விசுவாசம் வைத்து அவர்களுடைய அன்றாடத் தேவைகள் தேவனால் பார்த்துக் கொள்ளப்படும் என்று நம்பினார். தேவன் கட்டளையிட்டார், மோசே அதற்குக் கீழ்ப்படிந்தார்.

இப்போது நான் எப்படி இருக்கிறேன்? நான் முறுமுறுக்கிறேனா, புகார் செய்கிறேனா? அல்லது ஜெபித்துத் துதிக்கிறேனா? அது என் வீட்டில் எப்படி இருக்கிறது? தேவன் என் தேவனாயிருக்கிறாரா? நான் அவருடையவனாயிருக்கிறேனா? அவர் என்னை போஷிக்கின்றமைக்காக அவருக்கு நன்றி உடையவனாக இருக்கிறேனா?

இஸ்ரவேல் ஜனங்களை அடிமைத்தனத்திலிருந்து சரீரப் பிரகாரமாகவும், மனோதத்துவ ரீதியாகவும் வழிநடத்துவது எளிதானதல்ல. அவர்கள் விடுதலையானதும் அவர்களுக்கு போதனையும், பரீட்சையும் தேவைப்படும். அவர்கள் தங்களுடைய தெய்வமாக தேவனை அனுமதிக்கிறார்களா? அல்லது அவர்கள் தேவனுடைய ஜனங்களாக மாறுகிறார்களா என்பதை பார்ப்பதற்கு வனாந்தரம் அவர்களுடைய பயிற்சிக் களமாக மாறியது. அவர்கள் சரியான முடிவை எடுக்கும்படியாக தேவன் அவர்களுக்காக ஏங்கினார்.

...எனக்கு? என்னுடைய அடிமைத்தன நாடு எது? என்னுடைய சோதனை மற்றும் பயிற்சிக் களம் எது? நான் தினமும் சரியானவைகளை தெரிந்தெடுக்கிறேனா?

## தேவனுடைய வார்த்தை

உணர்வுகள் வரும், உணர்வுகள் போகும்
உணர்வுகள் வஞ்சிக்கும் தன்மை கொண்டவை
என்னுடைய உத்திரவாதம் தேவனுடைய வார்த்தை தான்
வேறெதுவும் நம்பிக்கைக்கு உரியதல்ல
தேவனுடைய மாறாத வார்த்தைகளில்
நான் நம்பிக்கை வைப்பேன்
ஆவியும் சரீரமும் பிரியும் வரை
எல்லாமே அழிந்து போனாலும்
அவருடைய வார்த்தைகள் என்றென்றும் நிலைத்து நிற்கும்.

# தேவனுடைய வாக்குத்தத்தங்கள்

## The Promises Of God

*K. Bhaskar*

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் பற்றி தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு பரிசுத்த வேதாகமத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். தேவன் வேதத்தில் 365 வாக்குத்தத்தங்களை வெளிப்படுத்தியிருப்பதாக வேத ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகின்றனர். இந்த வாக்குத்தத்தங்களை தினமும் படித்து தேவ பெலனையும், தேவ பக்தியும் அடையலாம் என்று வேத ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவிக்கின்றன.

நாம் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மூன்று காலகட்டத்தில் சொல்லப்பட்டுள்ளதைப் படிப்போமாக! அது கடந்த கால வாக்குத்தத்தம். நிகழ் கால வாக்குத்தத்தம் மற்றும் வருங்கால வாக்குத்தத்தம் என்று படித்து அறிந்து கொள்வோமாக!.

### I கடந்த கால தேவனுடைய வாக்குத்தத்தம்

கடந்த கால தேவனுடைய வாக்குத்தத்தம் என்பது தேவன் இஸ்ரவேலருக்குக் கொடுத்த வாக்குத்தத்தமாக உள்ளது. தேவன் இஸ்ரவேலருக்கு கானான் தேசத்தைக் கொடுப்பதாக முற்பிதாக்களின் காலத்தில் வாழ்ந்த ஆபிரகாம் என்னும் மனிதரிடம் கூறினார். அதாவது, கி.மு. 1996ல் தேவன் வாக்குத்தத்தம் பண்ணினார் (ஆதி. 12:5,7) அந்த வாக்குத்தத்தத்தை சுமார் 600 ஆண்டுகள் கழித்து இஸ்ரவேலர்கள் யோசுவா என்னும் மனிதர் மூலமாகப் பெற்றுக்கொண்டு அவர்கள் கானான் தேசத்திலே குடி அமர்த்தப்பட்டனர் (யோசுவா 18:1). அதாவது கி.மு. சுமார் 1300ல் தேசம் அவர்கள் வசமாயிற்று. வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் (எபி. 10:23) இஸ்ரவேலருக்கு நல்ல வாக்குத்தத்தம் பண்ணினார் (எண். 10:29) ஆபிரகாமுக்கு சொன்ன வாக்கை அவருடைய சந்ததியான இஸ்ரவேலர்கள் அநேக வருடங்களுக்குப் பின்பு பெற்றுக்கொண்டனர் (2 நாளா. 20:7). ஆகவே ஜீவனுள்ள தேவனிடம் விசுவாசம் வைத்து அவர் உண்டென்றும் தம்மைத் தேடுகிற யாவருக்கும் பலன் அறிக்கிறவர் என்று விசுவாசிக்க வேண்டும் (எபி. 11:6).

தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசம் யோர்தான் என்னும் நதிக்கும், சாக்கடலுக்கும் மத்திய தரைக்கடலுக்குமிடையிலுள்ள தேசம். தாண் முதல் பெயெர் செபா வரை (நியா. 20:1) அதாவது, காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை என்பது போல. கானான் தேசம் பாலும், தேனும்

ஓடுகிற தேசம். அதாவது, செழிப்பான தேசம். பலவகையான கனிகள் விளையும் தேசம். திராட்சை, மாதுளை, அத்திப்பழம் போன்றவை முக்கியமாக விளையக் கூடியது. கானான் தேசத்தைச் சுற்றிலும் மலைகளும், அடர்ந்த காடுகளும், பசுமையான புல்வெளியும், ஆரோக்கியமான காற்றும், தண்ணீரும் இருந்தது. இந்த நல்ல தேசத்தை தேவன் தம்முடைய பிள்ளைகளான இஸ்ரவேலருக்கு கொடுப்பதாக வாக்குத்தத்தம் பண்ணினார் (லேவி. 25:38; எண். 13:23,27).

இஸ்ரவேலர்கள் எகிப்து தேசத்தில் சுமார் 430 வருடங்கள் அடிமைகளாக இருந்தார்கள். அப்பொழுது அவர்கள் தங்கள் அடிமைத்தன்மை தேவனிடம் முறையிட்டனர். அப்பொழுது அவர் ஆபிரகாமோடும், யாக்கோபோடும் பண்ணின உடன்படிக்கையை நினைவு கூர்ந்தார். (யாத். 2:23,24). அதன்படி தேவன் அவர்களை எகிப்திலிருந்து விடுதலை செய்யும்படி மோசே என்னும் மனிதரைப் பயன்படுத்தினார் (அப். 7:34,35). இஸ்ரவேலர்கள் வனாந்திர மார்க்கமாக நாற்பது நாட்களில் கானான் தேசத்தை வந்தடையும்படியாக இருந்தது. ஆனால், அவர்களுடைய முறுமுறுப்பும், கீழ்ப்படியாமையும் நாற்பது நாட்களை நாற்பது வருஷமாக்கிற்று (எண். 14:26,35) அவர்கள் வனாந்திரத்திலே அழியும் வரை சுற்றித் திரிந்தார்கள். எகிப்திலிருந்து புறப்பட்டவர்கள் சுமார் ஆறு இலட்சம் புருஷர்கள் அவர்களில் யோசுவா, காலேப் என்பவர்கள் தவிர மற்ற அனைவரும் வனாந்திரத்திலே செத்தார்கள் (எண். 32:11,13). அவர்களை வழி நடத்தின மோசே கூட கானான் தேசத்தில் பிரவேசிக்க முடியவில்லை. அவரும் இஸ்ரவேல் ஜனங்களாலே கீழ்ப்படியாமல் போனார் (எண். 20:3,11,12) யோசுவா, காலேப் என்பவர் களின் நாட்களில் இருந்தவர்களே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தைப் பெற்றுக்கொண்டனர்.

## II நிகழ்காலத்தில் தேவனுடைய வாக்குத்தத்தம்

வாக்கு மாறாத தேவன் நிகழ் காலத்திற்குரிய வாக்குத்தத்தம் இன்று வேதத்தில் வெளிப்படுத்தியிருக்கின்றார். எங்களால் தேவனுக்கு மகிமையுண் டாகும்படி தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கிறதே (2 கொரி. 1:20). தேவன் இன்று நமக்குரிய வாக்குத்தத்தத்தை கிறிஸ்துவுக்குள் வைத்திருக்கின்றார். அப்போஸ்தலனாகிய பேதுரு தனது முதல் பிரசங்கத்தில் இதை வெளிப்படுத்தி யிருக்கிறார். " பேதுரு அவர்களை நோக்கி நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும்

உண்டாயிருக்கிறது.." என்று கூறுகிறார் (அப். 2:38,39). எனவே கிறிஸ்துவின் சுவிசேஷம் இன்று நமக்கு வாக்குத்தத்தமாக உள்ளது.

கிறிஸ்துவின் சுவிசேஷம் உலகத் தோற்றத்திற்கு முன்னே வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது (1 கொரி. 2:7) இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளிலே உயிர்த்தெழ வேண்டியதாக இருந்தது. தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும்படி இயேசு கிறிஸ்துவை சிலுவைக்கு ஒப்புக்கொடுத்தார். இன்று யார் யார் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகின்றார்களோ அவர்கள் எல்லாரும் தேவனுடைய வாக்குத்தத்தத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். இதில் யூதனென்றும், கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனன் என்றும் இல்லை. ஆணென்றும், பெண்ணென்றுமில்லை. நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால் ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்திரராயும் இருக்கிறீர்கள். (கலாத் 3:27) நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும் பொழுது தேவனுடைய வாக்குத்தத்தத்தின்படி அவருடைய பிள்ளைகளாக இருக்கின்றோம் (கலாத் 4:28) இப்போது நிகழ்காலத்தில் தேவனுடைய வாக்குத்தத்தத்தைப் பெற்றுக் கொள்கின்றோம்.

## III. வருங்காலத்தில் தேவனுடைய வாக்குத்தத்தம்

சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து தேவனுடைய பிள்ளைகளாகும்போது நம்முடைய வருங்காலத்திற்குரிய ஆசீர்வாதத்தை வேதத்தின் தேவன் வெளிப்படுத்தியிருக்கிறார். "பொய்யுரையாத தேவன் ஆதி கால முதல் நித்திய ஜீவனைக் குறித்து வாக்குத்தத்தம் பண்ணி" ... (தீத்து 1:3) நித்திய ஜீவனைக் குறித்து வருங்கால வாக்குத்தத்தமாக உள்ளது. இவ்வுலகத்திலே பாவம், வியாதி, துன்பம், மரணம் இவைகளால் நாம் மகிழ்ச்சியை இழந்திருக்கிறோம். இவைகளுக்கு மாறுபட்ட வாழ்க்கை அதாவது பாவம், வியாதி, துன்பம், மரணம் இல்லாத வாழ்க்கை தான் நித்திய ஜீவன் என்பது இது. தேவ நீதியும், சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது (ரோமர் 14:17).

இப்படிப்பட்ட மகிழ்ச்சியான வாழ்வை நித்திய ஜீவனை நீடித்த வாழ்வை அளிப்பேன் என்பதே அவர் நமக்கு செய்த வாக்குத்தத்தம் (1 யோவான் 2:25). ஆகவே இவ்வுலகத்தில் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அந்த விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு நித்திய ஜீவனைப் பற்றிக் கொள். அதற்காகவே அழைக்கப்பட்டாய். அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய். (1 தீமோ 6:12) தேவன் வருங் காலத்திற்குரிய நித்திய ஜீவனை நமக்கு வைத்திருக்கிறார். (1 தீமோ 6:19) அதைப் பெற்றுக் கொள்ளும்படியாக நாம் வாழ்வோம்.

# நாம் ஏன் பயப்படக்கூடாது?

## Why We shouldn't Fear?

*K. Pandian*

வேதத்தில் பொதுவாக இரண்டு வித பயங்களைப் பற்றிய குறிப்பு உள்ளது. ஒன்று நாம் அனைவரும் தேவனுக்கு பயப்பட வேண்டும் என்பது. மற்றொன்று இந்த உலகம், மனுஷர், எதிர்காலம், பொருளாதாரக் கஷ்டங்கள் போன்றவற்றிற்கு பயப்படக்கூடாது என்பது. கடவுளுக்கு பயப்படும் பயம் இன்றைய நாட்களில் குறைந்து தேவனுக்கு விரோதமான உலக சிநேகத்திலும், விபச்சாரங்களிலும் உலகம் சிக்கி அழிந்து கொண்டிருக்கிற தைக் காண்கிறோம். ஆதலால், மனுஷர் வாழ்க்கையில் எல்லாவற்றையும் குறித்து பயந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பயம் மனுஷரை மனோ வியாதியிலும், பலவிதமான சரீர வியாதிகளிலும் தள்ளிக் கொண்டிருக்கிறது.

நம் ஆண்டவர் இயேசு : மனுஷருக்கல்ல தேவனுக்கே பயப்படுங்கள் என்றும், உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. *ஆதலால், பயப்படாதிருங்கள்,* அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் *நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்* என்றும் சொல்லியிருக் கிறார். கர்த்தருடைய புஸ்தகத்தில் ஏறக்குறைய 365க்கும் மேற்பட்ட இடங் களில் பயப்படாதே என்று மனுஷனை தேற்றுகிற வார்த்தைகளைக் காண்கி றோம். உலகத்தில் ஆபிரகாமை தெரிந்து கொண்ட தேவன் அவனை "ஆசீர்வதித்து பெரிய ஜாதியாக்குவேன் " என்று வாக்கு கொடுத்ததோடு மட்டு மல்லாமல், அடிக்கடி அவனை சந்தித்து " பயப்படாதே " என்றும் தேற்றுகிற தைக் காண்கிறோம். விசுவாசிகளின் வாழ்க்கையிலும் பயம் அவர்களைச் சூழும் போது அதே தேவனுடைய வார்த்தைகள் நம்மையும் இன்றைக்கு தேற்றுகிறது. நாம் ஆபிரகாமின் சந்ததியராய் இருக்கிறோம் என்பதை நினைவில் கொள்வோம்.

ஒரு சிலர் தாங்கள் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கு நியாயங்களைக் கற்பித்துக் கொண்டு; உலகம் ஆதாம் மூலமாக சபிக்கப்பட்டுள்ளதால் நாம் இந்த உபத்திரவங்களை அடைந்தே தீரவேண்டும் என்று நினைக்கின் றார்கள். ஆதாமினால் இந்த பூமி சபிக்கப்பட்டது உண்மையாயிருந்தாலும், இரண்டாம் ஆதாமாகிய, நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் சிலுவைத் தியாகத்தினால் அந்த சாபங்கள் எல்லாம் விசுவாசிகளுக்கு நீங்கியிருக்கிறது

என்பதே சத்தியமாயிருக்கிறது (கலாத். 3:13). ஆகவே, தேவனுடைய பிள்ளைகளே வஞ்சிக்கப்படாதிருங்கள். நீங்கள் சாபத்திற்கு அல்ல, மாறாக, ஆபிரகாமின் ஆசீர்வாதங்களுக்குச் சொந்தக்காரராய் இருக்கிறீர்கள். எனவே, எதிர்கால பயங்கள் நம்மை அண்ட விடாதிருங்கள். தேவன் நம்முன்னே செல்கிறார்; தம்முடைய தூதர்களைக் கொண்டு நம்மை பாதுகாக்கிறார். கிறிஸ்து இயேசுவே நமக்கு வழியும் சத்தியமுமாய் இருக்கிறார்.

**I நாம் மீட்கப்பட்டவர்களாய்** இருப்பதால் பயப்படத் தேவையில்லை (1 பேதுரு 1:19). பொல்லாத இந்த பிரபஞ்சத்தினின்று தேவன் நம்மை மீட்டு அவருக்குச் சொந்த ஜனங்களாக மாற்றியிருக்கிறார். நாம் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டுள்ளதால் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்தும் நாம் மீட்கப்பட்டுள்ளோம். நாம் பாவத்திலே மறுபடியும் மூழ்கி அழிந்து விடக்கூடாது என்பதற்காக பிதாவிடம் இயேசு ஆண்டவர் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். மேலும், பரிசுத்த ஆவியின் துணையும் விசுவாசிக்கு இருப்பதால் நாம் பயப்பட வேண்டியதில்லை. (ஏசா. 43:1,3) தீர்க்கதரிசனமாக தேவன் நம்மைப் பார்த்து "பயப்படாதே" உன்னை மீட்டுக் கொண்டேன் என்றதை நாம் நினைவு கூருவோம்.

**II பஞ்சம், சாவு நம்மை அணுகாது :** இன்றைக்கு பயங்கர வெள்ளச் சேதங்களும், பஞ்சங்களும், சாவுகளும் நாம் கேள்விபடுகிறோம். மக்கள் விலைவாசி உயர்வுகளைக் குறித்தும் பயந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய தேவன் அனைவரையும் போஷிக்கிற தேவனாக இருக்கிறார். (அப். 14:17) பஞ்சகாலத்திலே எலியா சாறிபாத் விதவையிடம் சொன்னதை நினைவுகூருங்கள்; பயப்படாதே, முதலில் ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டு வா, பானையின் "மா" செலவழியாது, எண்ணெய் குறையாது (1 ராஜா 17:13) என்ற கர்த்தரின் வார்த்தைகளையே கூறினான். அதே கர்த்தருடைய வார்த்தையின் அடிப்படையில் நாம் நமது சிறிய அடையை (காணிக்கை) வாரந்தோறும் செலுத்திக் கொண்டிருக்கிறோம். அந்த வல்லமையுள்ள தேவனே இன்றைக்கும் நம் அப்பத்தையும், தண்ணீரையும் ஆசீர்வதித்துக் கொண்டிருக்கிறார். அவருக்கே மகிமை உண்டாவதாக.

**III மனுஷரின் எதிர்ப்புகளுக்கு பயப்படதேவையில்லை :** மோசே மற்றும் அவனோடிருந்த இஸ்ரயேல் ஜனங்களுக்கு விரோதமாக பெரிய, பெரிய ராஜாக்கள் விரோதமாக வந்தார்கள். ஆனால், தேவன் தம்முடைய ஜனங்களைப் பார்த்துச் சொன்ன காரியம் என்ன? "பயப்படாதிருங்கள்" என்பதே. (யாத். 14:13) பயப்பட வேண்டாம் (எண். 21:34) ஆனால், அநேகர் தங்களுடைய பெலவீனங்களையும், குறைகளையும் பற்றியே நினைத்துக் கொண்டு தோல்வியை நினைத்து பயந்து கொண்டிருக்கிறார்கள்.

அப்படிப்பட்டவர்களுக்கு தேவன் கிதியோனுக்கு சொன்னதே சிறந்த பதிலாக உள்ளது : "*உனக்கு இருக்கிற இந்த பெலத்தோடே போ. உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா? நான் உன்னோடே இருப்பேன்* " என்றார் (நியா. 6:14,15). அப்படிப்பட்ட அருமையான தேவன் நம்மோடு இருப்பதால் நாம் பயப்பட வேண்டியதில்லை.

நமதாண்டவர் இயேசு கிறிஸ்து நமது ஊழிய காலத்திலே "பயப்படாதிருங்கள்" என்ற வார்த்தையை அநேக சூழ்நிலைகளில் சொல்லி யிருக்கிறதை நாம் அறிந்திருக்கின்றோம். ஜெப ஆலயத் தலைவன் மகள் மரித்தாள் என்று செய்தி வந்த போது அவனைப் பார்த்து பயப்படாதே விசுவாச முள்ளவனாயிரு என்றார். படகு அமிழத்தக்கதாக புயல் வந்த போது சீஷர்களைப் பார்த்து, அற்ப விசுவாசிகளே ஏன் பயப்பட்டீர்கள் என்று கடிந்து கொண்டார்; கடலின் மீது நடந்து பின் மூழ்கிய பேதுருவை நோக்கி, அற்ப விசுவாசியே ஏன் சந்தேகப்பட்டாய் என்று கடிந்து கொண்டார். சீஷர்களை விட்டுப் பிரியும் காலம் வந்த போது; உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள். என்னிடத்திலும் விசுவாச மாயிருங்கள் (யோவான் 14:1) என்றதை நினைவில் வைப்போம். ஆக, ஆண்டவர் இயேசுவின் வார்த்தையின்படி பார்க்கும் போது ஒரு மனிதனிடம் விசுவாசம் குறையும் போது அவனிடம் பயம் உருவாகிறது. ஆனால், கிறிஸ்துவின் வார்த்தைப்படி நாம் உணவு, உடைகளைப் பற்றி கவலைப் படாமல் முதலாவது தேவனுடைய ராஜ்ஜியம், நீதி தேடி ஒரு நல்ல சபை வாழ்க்கை வாழும் போது நாம் நம் வாழ்க்கையில் பயமில்லாமல் வாழலாம். தேவனுடைய வார்த்தைகளே நம்மை தைரியப்படுத்தக்கூடியது. இந்த உலகம் நம்மை பயமுறுத்தினாலும், உலகத்தை உண்டாக்கின தேவன் நமது தேவனாக இருப்பதால் நாம் பயப்பட வேண்டியதில்லை இவ்வுலகில் பொருளாதாரம் மட்டுமே ஆதாரம் இல்லை. நமக்கு உதவும் தேவனே நமக்கு ஆதாரம்.

" *நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கை விடுவது மில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே. அதினால், நாம் தைரியங் கொண்டு; கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன் மனுஷன் எனக்கு என்ன செய்வான்* " என்று சொல்லாமே (எபி. 13:5,6). விசுவாசிக்கிறவன் பதறான் (ஆப. 2:4). நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் கிருபை நம் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

தேவன்

# "ஜனங்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள்?" (மாற்கு 8:27)

## *"Who do men say that I am"?*

***Philip J. Sherwood***

உலகமானது இயேசு யார் என்பதைப் பற்றிய ஒரு நிச்சயமும், தெளிவும் இல்லாதிருந்தது. சிலர் அவரை உயிரோடெழுந்த யோவான் ஸ்நானன் என்றும், சிலர் எலியா அல்லது தீர்க்கதரிசிகளுள் ஒருவர் என்றும் சொன்னார்கள் (மாற்று 8:28). அப்போது இயேசு தம்முடைய சீஷர்களைப் பார்த்து " *நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்* "? என்று கேட்டார் (வசனம் 29). " *நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து* " என்று பேருது பதிலளித்தார் (மத். 16:15). சீஷர்கள் விசுவாசத்தினாலே பேசினார்கள், அந்த விசுவாசம் தான் அவர்களை மாற்றியது. இயேசுவின் கேள்வியானது ஜனங்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றிய அறியாமையினால் கேட்கப்பட்டதல்ல, ஆனால், சீஷர்கள் இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தை வெளிப்படையாக அறிவிக்கவும், அவர்களுடைய விசுவாசத்தை உறுதிப் படுத்தவும், பலப்படுத்தவும் கேட்கப்பட்டது.

இயேசுவை யார் என்று நாம் சொல்லுகிறோம்? அவர் ஓர் வரலாற்று நாயகனா? நல்ல மனிதரா? ஒரு தீர்க்கதரிசியா? அவர் நம் வாழ்க்கையின் ஓர் அங்கமாக இருக்கிறாரா? அவர் நம்முடைய ஆண்டவராகவும், எஜமானாகவும் இருக்கிறாரா? இந்தக் கேள்விக்கு நாம் கொடுக்க நினைக்கும் பதில் மிகவும் முக்கியமானது, ஏனென்றால், நம்முடைய செயல்கள் இயேசு, யார் என்கிற நம்முடைய நம்பிக்கையால் ஆளப்படுகிறது. அவர் ஒரு நல்ல மனிதர் அல்லது ஒரு தீர்க்கதரிசி என நாம் நினைத்தால் பாவம், நீதி மற்றும் நியாயத்தீர்ப்பைப் பற்றிய நம் நம்பிக்கையில் ஓர் உறுதி இருக்காது.

இயேசு ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று பேதுருவைப்போல நாம் நினைத்தால், நம் வாழ்க்கை தேவனுடைய வார்த்தையால் ஆளுகை செய்யப்படும். இருந்தபோதிலும், நித்திய ஜீவ வசனங்களைக் கேட்பதற்கு நாம் யாரிடத்தில் போகிறோம்? சீமோன், பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக ; ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே (யோவான் 6:68). அதிக கிருபையுள்ள எஜமானை நாம் எங்கே கண்டடைய முடியும்? அதிக வல்லமையுள்ள மீட்பரை, அதிக அனுகூலமான இரட்சகரை நாம் எங்கே கண்டடைய

முடியும்? நம் வாழ்வில் ஒவ்வொரு பகுதிக்கும் வேதாகமத்தில் மட்டுமே எல்லா பதில்களும் உண்டு. தேவனால் வாக்குத்தத்தம் செய்யப்பட்டு இருக்கிற நித்திய ஜீவனை நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் வேதாகமம் வெளிப் படுத்தியிருக்கிற கட்டளைகளை நாம் விசுவாசித்து அவைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

இயேசுவின் போதனைகள் புரிந்து கொள்வதற்கு கடினமாக இருந்த போது பல சீடர்கள் அவரை விட்டுப் போய்விட்டார்கள். நாம் புரிந்து கொள் வதற்குக் கடினமானக் காரியங்களைக் கேட்கும் போது அவைகளை விட்டுச் செல்லாதபடி நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நம் நித்திய ஜீவன் தேவனுடைய குமாரனிடத்தில் நாம் தொடர்ந்து விடாமல் வைக்கிற விசுவாசத்தைச் சார்ந்திருக்கிறது; நித்திய ஜீவ வசனங்கள் அவரிடத்தில் மாத்திரமே உண்டு. பல தத்துவஞானிகள் நம் ஆரம்பம், வாழ்க்கை மற்றும் விதி சம்மந்தமாக புதிய கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் தர முயற்சிக்கிறார்கள். ஆனால், அவர்கள் வேதவாக்கியங்களின் செய்தியில் இருந்து வேறுபடும் போது பெருஞ்சேதத்தையும், மரணத்தையும், நரகத்தை யும், நித்திய துக்கத்தையும் அவர்கள் கொண்டு வருகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் இயேசுவோடு வாழ்ந்த நாட்களில் அவருடைய கிரியைகளைப் பார்த்தும் அவர் போதித்த சத்தியங்களைக் கேட்டு வளர்த்துக் கொண்ட அறிவு, அவர்களுடைய விசுவாசத்திற்கு ஸ்திரத் தன்மையைக் கொடுத்தது. அந்த அறிவைத் தருவதற்கு இன்று நம்மிடம் வேதவாக்கியங்கள் உள்ளன. நாம் அவைகளை விசுவாசிப்பதன் மூலமாக கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைக்க முடியும். " *இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப் பட்டிருக்கிறது* " (யோவான் 20:31).

இயேசு தம்முடைய சீஷர்களிடம், " *நீங்கள் என்னை யார் என்று சொல்கிறீர்கள்* " என்று கேட்ட போது, அவர்களுடைய விசுவாசம் சம்மந்தமாக அவர்களைக் கேள்வி கேட்டார். சீடர்கள் மற்றவர்கள் பற்றி எண்ணுவதை விடுத்து தங்களைப் பற்றி எண்ணும்படியாக இயேசு இங்கே கேள்வி கேட்டார். அவர்கள் அவரைப் பின்பற்றினதால் மாத்திரம் அவரைப் பற்றி நன்றாக அறிந்திருந்தார்கள் என்று நாம் நினைக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் தங்களுக்குத் தாங்களே கேள்விகளைக் கேட்டு விசுவாச அறிக்கை செய்யும்படியாக இயேசு அவர்களை பரிசோதித்தார்.

சீடர்களைப் போல இயேசுவை மேசியாவாக, சபையின் தலையாக நாம் அறிந்திருக்கிறோமா? (மத். 16:18) அவர் அளிக்கும் இரட்சிப்பை ஏற்றுக்

கொள்ளத்தக்கதாக, அவரைப் பற்றிய தனிப்பட்ட அறிவு நமக்கும் தேவை, அல்லது அது அர்த்தமற்றதாகிவிடும்.

இயேசு கிறிஸ்துவை நாம் முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டும். இயேசுவை அறிந்து கொள்வதென்பது அவரை ஒரு சகோதரராக, நண்பராக, இரட்சகராக அறிந்து கொள்வதைப் போன்றதல்ல. அவர் தேவனுக்கும், நம் பாவ ஆத்துமாக்களுக்கும் இடையே மத்தியஸ்தராக இருக்கிறார். இயேசு இரட்சகராயிருக்கிறார், நம் இதயங்கள் இந்த சத்தியத்தால் தொடப்பட வேண்டும். இயேசு இரட்சகராயிருக்கிறார், நாம் இரட்சிக்கப்படும்படி வானத்தின் கீழே வேறொரு நாமம் கொடுக்கப்படவில்லை (அப். 4:12). ஒரே பூரண பலியாகிய இயேசு மட்டுமே நம் அன்புக்குப் பாத்திரராயிருக்கிறார். ஏனென்றால், அவர் மட்டுமே நமக்காகச் சிலுவையில் மரித்தார். இதை இன்று நம் இருதயங்களில் எடுத்துக் கொண்டு பேதுருவோடு கூட, " *நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து* " என்று சொல்லும்படியாகத் தீர்மானிப்போம்.

**ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய**
**இயேசு ஆண்டவர்**

பூலோகத்தாராலே நம்பப்படுகிற
ஏராளமான கடவுள்களில் ஒருவரல்ல.
இன்னும்,
ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற
குறிப்பிடத்தக்க மகான்களில் ஒருவருமல்ல.
மாறாக,
இப்பாமுலகைப் பாவத்தின் பிடியிலிருந்து
மீட்கும்படியாக வந்துதித்த
உலக இரட்சகர்



# அண்டசராசரங்களின் ஆதாரத்தைப் புரிந்து கொள்ளுதல்

## UNDERSTANDING THE SOURCE OF THE UNIVERSE

*DayTon Keesee*

சமீபத்தில் ரஷ்யாவில், மெத்தப்படித்த ஓர் அர்மேனிய ஆங்கிலேய ஆசிரியர், "சிருஷ்டிப்பு என்கிற கருத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை" என்று வெளிப்படையாக ஓர் அறிக்கையை விட்டார். நான் அவரிடம் காற்று, புவி ஈர்ப்பு மற்றும் பூமியின் ஆதாரத்திற்கான விளக்கத்தைக் கேட்டேன். யார் அல்லது எது ஆதாரம்? என்று கேட்டேன். இந்த பூதங்களின் ஆதாரம் பற்றி தனக்குத் தெரியாது என்று அவர் சொன்னார்.

இந்த பூதங்களின் ஆதாரம் தேடப்பட வேண்டிய ஒன்றாயிருக்கிறது. ஏன்? ஏனென்றால், நாம் உயிரோடிருக்கும்படியாக ஒவ்வொரு நாளும் அவைகளைச் சார்ந்திருக்கிறோம். இதில் கடமையும், பொறுப்பும் உள்ளடக்கம், பெற்றோர்கள் நமக்கு உணவு, உறைவிடம், கல்வி போன்றவைகளைத் தரும் போது அவர்கள் நம்முடைய நன்றிக்குத் தகுதியானவர்களாகிறார்கள். நாம் சுவாசிக்கின்ற காற்று, நாம் நடக்கின்ற பூமி, இப்பூமியில் நாம் விழுந்து போகாமல் நிலைத்திருக்க புவிஈர்ப்பு சக்தி போன்றவைகள் அற்பமான ஈவுகளல்ல. அவைகளுக்காக, நன்றி நிறைந்த இதயத்தோடு "நன்றி" என்று நாம் சொல்ல வேண்டும். இவ்விதமாக நம்மைத் தாங்குகின்ற, நிலைத் திருக்கச் செய்கிறவைகளின் ஆதாரத்தை ஒருவர் அறியாதிருந்தால், யாருக்கு அல்லது எதற்கு நன்றி செலுத்த வேண்டும் என்பதை அவர் அறியமாட்டார். அக்கறையுள்ள நேர்மையான இருதயங்கள், இன்று வாழ்வதற்கான வாய்ப்புக்காக நன்றிகளைச் செலுத்துவதற்கு காரணங்களைத் தேடுகின்றன.

நீங்களும் அந்த அர்மேனிய ஆங்கில ஆசிரியரைப்போல் ஆதாரத்தை அறிந்து கொள்வதற்கான நம்முடைய தேவையின் உண்மை யை உணர்ந்து கொள்வீர்களென்று நம்புகிறேன். அந்த ஆதாரம் என்ன வென்று உங்களுக் குத் தெரியுமா? அந்த ஆதாரத்தை நாம் அறிந்து கொள்ள முடியுமா?

இப்பிரபஞ்சத்தை உருவாக்கிய சக்தியைப் பற்றி கீழ்க்காணும் ஏழு நியாயமான உற்றுநோக்கலை ஆழ்ந்து சிந்தியுங்கள். இவ்விதமாக முடிவுக்கு வருவது நியாயமாக இருக்கிறது. *(1) காண முடியாத ஏதோ ஒரு சக்தி அதை உருவாக்கியது.* உங்களுக்குத் தெரிந்த ஒருவரோ அல்லது ஒரு குழுவோ அல்லது வரலாற்றில் நீங்கள் வாசித்த (காணக்கூடிய) ஏதோ ஒன்றோ அதைச் செய்ய முடியுமா? (2) *விவேகமுள்ள சக்தி அதைச் செய்தது.* நான் எழுதுகிற மேஜையை உருவாக்குவதற்கே விவேகம் அவசியம் என்றால், உலகத்தை உருவாக்கும் சக்திக்கு விவேகம் அவசியம் என்கிற நியாயமான முடிவுக்கு நாம் வரலாம். (3) *சக்தி நித்தியமானது.* எல்லா உண்மைகளையும் வைத்து, யோசித்து நாம் முடிவுக்கு வந்திருக்கிறபடியால் ஏதோ ஒன்று முன்பு இருந்தபடியால் இப்போது அது இருக்கிறது என்று நாம் அறிகிறோம். ஆகவே, ஏதோ ஒன்று எப்போதும் இருந்திருக்க வேண்டும். (4) *அந்த சக்திக்கு நம்மைப் பற்றிய உணர்வுகள் இருக்க வேண்டும்.* காற்று சுவாசிப்பதற்கு மிக நன்றாக இருக்கிறது, தண்ணீர் குடிப்பதற்கு மிக நன்றாக இருக்கிறது, இல்லை யென்றால் வேறுவிதமாக முடிந்திருக்கும். (5) *அந்த சக்திக்கு நோக்கம் இருந்திருக்க வேண்டும்.* அது நியாயமானது. ஒரு கைக்கடிகாரத்திற்கு நோக்கம் இருக்கிறதென்றால், இம்முழு பிரபஞ்சத்திற்கும், இப்பூமியின் மக்களுக்கும் ஒரு நோக்கம் இருந்திருக்க வேண்டும். (6) *அந்த சக்தி ஒருங்கிணைந்த சக்தியாக இருந்திருக்க வேண்டும்.* அந்த சக்தி

ஒருங்கிணைந்த சக்தியாக இருந்திருக்க வேண்டும். பிரபஞ்சத்தில் இசைவு (இரவைத் தொடர்ந்து பகல்; காலங்கள் போன்றவைகள் இது ஒருங்கிணைந்த சக்திதான் என்கிற முடிவுக்கு வர காரணமாகின்றன. (7) *அந்த சக்தி நம்மோடு தொடர்பு கொள்ள நாட வேண்டும்.* நாம் ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருக்கும் விவேகம், உணர்வுகள் மற்றும் நோக்கக் காரணிகள் அந்த சக்தி நம்மோடு தொடர்பு கொள்ள நாட வேண்டும் என்று நாம் முடிவுக்கு வருவதை நியாயப் படுத்துகின்றன.

மேற்சொல்லப்பட்ட ஏழு காரியங்களும் அறிவுப்பூர்வமாக நியாயமானது என்பதை ஒத்துக்கொண்ட பிறகு, அந்த அர்மேனிய ஆசிரியர் வேதாகமத்தி லிருந்து சில பகுதிகளை கவனிக்கும்படியாக கேட்டுக் கொள்ளப்பட்டார். நீங்களும் அதைச் செய்யும்படியாக கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேத வாக்கியங்கள் மேற்சொல்லப்பட்ட ஏழு காரியங்களோடு ஒத்துப்போகின்றன. மேலும், பிரபஞ்சத்தின் ஆதாரமாகிய அந்த சக்தியை நமக்கு அடையாளப் படுத்துகின்றன. மேலே குறிப்பிடப்பட்டிருக்கிற ஏழு அறிவுப்பூர்வமான உற்று நோக்கலோடு தொடர்புடைய பின்வரும் வசனப்பகுதிகளை வாசிப்பதற்கு நேரத்தை எடுத்துக்கொள்ளுங்கள் : (1) யோவான் 1:18; 14:8,11; (2) சங். 19:1,2; 147:45; (3) சங். 90:1,2; 1 யோவான் 1:3; (4) அப். 17:24,25; மத். 5:45; 1 யோவான் 4:8; (5) பிரசங்கி 12:13,14; சங். 139:14,16; மத். 4:10; (6) எபேசியர் 4:6; யோவான் 17:17,21; கலா. 3:26,27; (7) ரோமர் 1:16,25; 2 தீமோத். 3:16,17; அப். 17:15,17; கலா. 3:26,27.

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் வசனங்கள் அறிவுப்பூர்வமானது என்பதை மட்டும் நிரூபிப்பதில்லை. ஆனால், காணக்கூடாத, ஞானமுள்ள, நித்தியமான, உணர்வுள்ள, நோக்கமுள்ள, இசைவாயிருக்கிற தேவனின் தகவல் தொடர்பு கருவியாகவும், வேதாகமத்தை அவைகள் அடையாளப் படுத்துகின்றன. இது உங்களுக்கும், எனக்கும் எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது? எபிரெய ஆசிரியர் இவ்விதமாக எழுதுகிறார். "*விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய் காணப்படுகிறவைகள் தோன்றப்படு கிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்*" (எபி. 11:3; சங். 33:6,9).

வால்டர் என்பவர் ஒருமுறை இவ்விதமாகச் சொன்னார். தேவன் நம்மை அவருடைய சாயலில் சிருஷ்டித்திருந்தால், அதற்காக இன்னும் அதிகமாக நாம் செய்திருக்க வேண்டும் என்று. பவுல் மனிதன் தன்னுடைய சாயலில் தேவனை உருவாக்கும் முயற்சி ஓர் வீணான காரியம் என்று அறிவிக்கிறார். அது மனித இனம் தேவனுக்கு நன்றி செலுத்தத் தவறியதற்கு

காரணமாகி விட்டது (ரோமர் 1:21). தேவனுடைய அருமையான, வாழ்க்கையைத் தாங்கச் செய்யும் ஈவுகளுக்காக அவருக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறீர்களா?

நாம் தேவனை அல்லது அவருடைய படைப்பின் வல்லமையை எப்போதெல்லாம் மறுக்கிறோமோ, அப்போதெல்லாம் நியாயமான காரியங்களிலிருந்து நாம் தடம் மாறுகிறோம். மேலும், நாம் தினமும் யாருக்கு நன்றியுடையவர்களாயிருக்க வேண்டுமோ அவரிடத்தில் நம் ஆதாரத்தை இழந்து விடுகிறோம் (அப். 17:26,28). அவர் நம்மிடத்தில் தம்முடைய வார்த்தையைக் கொண்டு பேசியிருக்கிறபடியால் அவருக்குச் செவிக் கொடுப்போம் (மத். 17:5).

ஒருமுறை ஒரு நாத்திகன் வேதாகமம் உண்மையென்று நீ நம்புகிறாயா என ஒரு கிறிஸ்தவப் பெண்ணிடம் கேட்டான். அதற்கு "ஆம்" என்று அந்தப் பெண்மணி பதில் அளித்தார்.

பின்பு அந்த நாத்திகன், "அந்தக் கிறிஸ்தவப் பெண்ணிடம், எப்படி ஒரு திமிங்கலம் யோனாவை விழுங்கியது, திமிங்கலத்தின் வயிறு மனிதனின் தலையை விடப் பெரிதாக இருக்காதே " என்று கேட்டான்.

" எனக்குத் தெரியாது என்று அந்தப் பெண் பதிலளித்தாள். ஆனால், நான் பரலோகம் போன பிறகு யோனாவிடம் கேட்பேன் " என்று சொன்னாள்.

அதற்கு அந்த நாத்திகன் " யோனா அங்கே இல்லையென்றால் என்ன செய்வாய்? " என்று கேட்டான்.

அந்தக் கிறிஸ்தவ பெண் " அப்படியென்றால் நீ தான் அவரைக் கேட்க வேண்டும் " என்று நாத்திகனுக்குப் பதிலளித்தாள்.

# அந்த அளவுக்கு யாரும் குருடில்லையே

## None So Blind

*Brance Buckley*

அழகான 19 ஆம் சங்கீதம் இவ்விதமான அறிவிப்புடன் தொடங்கு கிறது: "*வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது*". அறிவிப்பது என்பது தெரியப்படுத்துவது என்று பொருள்படும். இந்த அறிவிப்பு எல்லா காலங்களிலும் உண்மையாகவே இருக்கிறது, ஆனாலும், குறிப்பாக இயற்கை யானது குறிப்பிடத்தக்க பாடங்களை நமக்குக் கற்றுத் தரும்போது, விசேஷமாக இது உண்மையாயிருக்கிறது.

துரதிஷ்டவசமாக, இயற்கையில் தேவனுடைய மகிமையை எல்லோரும் காண்பதில்லை. ஒரு கவிஞன் இவ்விதமாகப் பாடினான். "பார்க்க முடியாதவர்களைப் போல யாரும் இங்கு குருடில்லையே" என்று. அவர் களுக்கு சரீரப்பிரகாரமாக கண் பார்வையில் எந்த குறையும் இல்லை. ஆனால், எது வெளிப்படையாகத் தெரிகிறதோ அதைப் பார்க்க மறுக்கிறார்கள்.

தேவன் இருப்பதை இயற்கையானது வெளிப்படுத்துகிறது. துரதிஷ்ட வசமாக, வெளிப்படையாக இருக்கிற காரியங்களை மறுக்கிற அநேகர் நம்மைச் சுற்றிலும் இருக்கிறார்கள். "*தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான்*" (சங். 53:1). வேதாகமம் ஒவ்வொரு மனிதனையும் முட்டாள் என்று அழைப்பதில்லை, ஆனால், தேவன் இருக் கிறார் என்கிற உண்மையையும், இருக்கின்ற எல்லாவற்றையும் சிருஷ்டித் தவர் அவர்தான் என்பதையும் மறுக்கிற ஒருவனைத்தான் வேதாகமம் முட்டாள் என்று அழைக்கிறது.

தேவன் இருப்பதை இயற்கையானது வெளிப்படுத்துகிறது, ஆனால், அது அவருக்கு எப்படிக் கீழ்ப்படிவதென்றும், கிறிஸ்தவ வாழ்க்கையை எப்படி வாழ்வதென்றும் வெளிப்படுத்தவில்லை. அப்படியானால், அது எப்படிப்பட்ட வார்த்தையின் வெளிப்பாட்டிலிருந்து வருகிறது. இயற்கையின் வெளிப்பாடும், வேத வாக்கியங்களின் வெளிப்பாடும் முழுமையாக இசைந்திருக்கிறது.

ஒன்றுமில்லாமையிலிருந்து ஏதோ ஒன்று வருவதில்லை. ஒன்று மில்லாமையிலிருந்து ஒன்றும் உண்டாவதில்லை. ஆனால், தேவன் உலகத்தையும், அதிலுள்ள யாவையும் படைத்தார். சிருஷ்டிப்புக்கு முன்பு

தேவனைத் தவிர ஒன்றுமே இருக்கவில்லை. சந்தேகப் பேர்விழிகள் ஆதியாகமம் ஒன்றாம் அதிகாரத்தைப் பார்த்து, எல்லாம் எப்படி தொடங்கின என்று அறிந்து கொள்ளட்டும். "ஆதியிலே தேவன்..... வானத்தையும், பூமியையும் உண்டாக்கினார் " நாம் இயற்கையின் வெளிப்பாட்டையோ அல்லது தேவ ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தையை யோ ஒருபோதும் சந்தேகிக்க வேண்டாம்.

இயற்கையிலும், வேத வாக்கியங்களிலும் தெளிவாக எது அறிவிக்கப் பட்டிருக்கிறதோ அதைக் காண மறுக்கத்தக்கதாக நாம் ஒருபோதும் குருடாகி விடக் கூடாது.

## அப்போஸ்தலர் 8 (ஒரு சரியான மனமாற்ற சம்பவம்)

சகோதரரே, நீங்கள் அப்போஸ்தலர் எட்டாம் அதிகாரத்தை வாசித்திருக்கிறீர்களா? அந்த எத்தியோப்பிய மந்திரி சரியான பாதைக்கு எப்படி நேரடியாக வழி நடத்தப்பட்டார்?


அந்த அருமையான நாளில் எருசலேமிலிருந்து ஊருக்குத் திரும்பிப் போகும்போது ஏசாயா புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தார்.

இப்போது பிலிப்புவுக்கு அந்த எத்தியோப்பிய மந்திரியின் தேவை புரிந்து விட்டது. எனவே, அவர் மந்திரியிடம் நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றார்.

ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும் என்று சொன்னார். பிலிப்பு ஏறி அந்த மந்திரியோடு பயணித்தார்.

எத்தியோப்பிய மந்திரி கேட்டிராத வார்த்தைகளை, அதாவது தேவனுடைய பரிசுத்த வார்த்தையிலிருந்து அருமையான பிரசங்கத்தைப் பிலிப்பு பிரசங்கித்தார்.

அவர்கள் தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்த போது, எத்தியோப்பிய மந்திரி, நான் இவ்விடத்தை விட்டுப் போவதற்கு முன்பாக இயேசுவுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்றார்.



# எந்த அதிகார அளவினால்

## *By What Standard of Authority*

***Daniels. Hamm***

நான் சமீபத்தில் மத சம்மந்தமான விவாதத்தை வீடியோவில் பார்த்தேன். அதில் ஒரு பேச்சாளர் சத்தமாக, வெளிப்படையாக இவ்விதமாக அறிவித்தார். " தேவன் தம்முடைய ஜனங்கள் தம்மை எவ்விதமாக ஆராதிக்க வேண்டும் என்று எந்த கட்டளையையும் கொடுக்கவில்லை " என்று.

ஆனால், நம் கர்த்தர் இக்கூற்றுக்கு மாறாகப் போதித்துள்ளார். " மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களால் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் " (மத். 15:9). மனுஷருடைய உபதேசங்கள் கண்டிக்கப்படுகின்றன (கலா. 1:8). கிறிஸ்துவின் உபதேசங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன (2 யோவான் 9:11).

மார்க்க சம்மந்தமாக நீங்கள் அப்பியாசப்படுத்தும் காரியங்களை எந்த அதிகாரத்தினால் செய்கிறீர்கள்?

"பெரும்பான்மை" சரியான அதிகார அளவுகோலாக இருக்குமா? வெள்ளப்பெருக்கு வந்தபோது "பெரும்பான்மை" எங்கே போனது? (1 பேதுரு 3:20,21; மத். 7:13,14) வசனங்கள் பெரும்பான்மையானோர் நரகம் போவதைக் காட்டுகின்றன. " பெரும்பான்மை " எண்ணம் உங்கள் ஆத்துமாவை இழந்துபோக காரணமாக அமைந்து விட நீங்கள் அனுமதித்து விடாதீர்கள்!

" உறவுகாரர்கள் " சரியான அதிகார அளவாக இருக்கிறார்களா? நான் என் குடும்பத்தை நேசிக்கிறேன். ஆனால், நான் தேவனை நேசிப்பதை விட அதிகமாக அல்ல!

மத். 10:37யைப் பாருங்கள் மற்றும் லூக்கா 14:26யை வாசியுங்கள். பவுல் கிறிஸ்தவத்திற்கு மனமாற்ற மானபோது, அவர் தன்னுடைய குடும்பத்தோடு கலந்து ஆலோசிக்கவில்லை (கலா. 1:16). உங்கள் ஆத்துமாக்களை இழந்து போவதற்கு உங்கள் குடும்பம் காரணமாக அமைந்து விட அனுமதிக்காதீர்கள்.

" மனுஷருடைய கொள்கைப் புத்தகங்கள் சரியான அதிகார அளவு கோலாகுமா? இன்று ஏன் பல சபைகள் இருக்கின்றன? பல கொள்கைப் புத்தகங்கள் இருப்பதனால் தான் பல சபைகள் இருக்கின்றன. அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கும்படியாக இயேசு ஜெபம் பண்ணினார் " (யோவான் 17:21). " நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும் பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏக யோசனையும், உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும்" என்று பவுல் மன்றாடுகிறார் (1 கொரி. 1:10). " உங்கள் சொந்த கொள்கைப் புத்தகங்களை நடைமுறைப்படுத்துங்கள், நீங்கள் விரும்புகின்ற சபையில் சேர்ந்து கொள்ளுங்கள் " போன்ற ஊக்குவிப்புகள் நிச்சயமாக நீங்கள் உங்கள் ஆத்துமாக்களை இழந்து போக காரணமாகிவிடும் (வெளி. 22:18,19; எபே. 4:4).

நான் நினைக்கிறேன் என்பது சரியான அதிகார அளவுகோலாகுமா? (எரே. 10:23) " மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்ல " என்று சொல்கிறது. நல்ல யோசனை தவறான யோசனையாகவும் இருக்க முடியும் (நீதி. 14:12). "நான் நினைக்கிறேன்" அல்லது நீங்கள் நினைக்கிறீர்கள் என்பவைகள் உங்கள் ஆத்துமாக்களை இழந்து போகச் செய்துவிடும். ஆகவே, தேவன் என்ன எதிர்பார்க்கிறார் என்பதை மனதில் வைத்துக் காரிய மாற்றுங்கள்.

## மனித வாழ்க்கை

மனித வாழ்க்கை மூன்று பகுதிகளைக் கொண்டது

**முடிந்தது, நடப்பது, வரப்போவது**

**முதலாவது,** எழுதி முடிக்கப்பட்ட ஒன்று

**இரண்டாவது,** ஒவ்வொரு நாளும் எழுதப்பட்டு வருவது

**மூன்றில் சிறந்ததும், வரப்போவதும்**

நாம் பார்க்க முடியாதபடி அது பூட்டப்பட்டிருக்கிறது

தேவன் அதற்கான சாவியை வைத்துள்ளார்.

## தேவனுடைய வார்த்தை

# பொருத்தமான சுவிசேஷம்

# The Relevant Gospel

*Tim Nichols*

நமக்கு நெருக்கமானவர்களின் மரணம் வாழ்க்கையின் குறுகிய தன்மையை நமக்கு நினைவுபடுத்துகிறது. கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் இரண்டு நண்பர்களின் அடக்க ஆராதனையில் நான் கலந்து கொண்டேன். அதில் ஒருவர் நீண்ட நாட்கள் வாழ்ந்தவர். மற்றொருவர் இளம் வயதில் வாகன விபத்தில் எங்க ளை விட்டுப் பிரிந்து சென்றவர். மற்றுமொரு பழைய நண்பர் சில நாட்களுக்கு முன்பு மாரடைப்பால் காலமானார். அவர் என்னை விட சில வருடங்கள் இளையவர்.

நான் படித்த பள்ளியில் இருபது வருடங்களுக்குப் பிறகு பழைய மாணவர்கள் மறுபடியும் ஒருவரையொருவர் சந்தித்த போது, என்னுடன் வகுப்பில் ஒன்றாகப் படித்த பத்துப்பேர் இந்த உலகத்தை விட்டுக் கடந்து சென்றதைக் கண்டு பிடித்தேன். அவர்களெல்லாரும் இளமையாகவும், ஆரோக்கியமாகவும் இருந்ததை நான் நினைத்துப் பார்க்கிறேன். நாங்கள் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது அவர்களில் இரண்டு பேர் என்னுடன் மல்யுத்தப் போட்டியில் கலந்து கொண்டனர். அதில் ஒருவர் நட்சத்திர விளையாட்டு வீரராக இருந்தார். பல்கலைக் கழக அணியில் அவரோடு நான் போட்டி போட முடியாததால் மற்றொரு போட்டியில் என்னைச் சேர வைக்க வற்புறுத்திக் கொண்டே இருந்தார்.

நான் மேலே குறிப்பிட்ட நபர்களோ அல்லது அவர்களுடைய குடும்பங்களோ அவர்கள் பற்றி இங்கே நான் குறிப்பிடுவதை எல்லாம் ஒரு பொருட்டாக எண்ணு வார்கள் என்று நினைக்கவில்லை. ஆனால், இவைகளெல்லாம் இந்தப் பூமியில் நம் வாழ்க்கை குறுகிய கால அளவைக் கொண்டது என நமக்கு நினைப்பூட்டுகிறது. இன்னும் அவைகளெல்லாம் கிறிஸ்தவம் உண்மையானது என்பதையும் நமக்கு நினைப்பூட்டுகிறது. நாம் பிரசங்கிக்கிற சத்தியம் சம்மந்தமில்லாமல் இருக்கிறது என்று சிலர் நம்மைப் பார்த்துச் சொல்லக் காரணம், கவர்ச்சியை விரும்புகிற நம் இளைய சமுதாயத்தின் கவனத்தை ஈர்க்கும்படி உயிரோட்டம் உடையதாக அது இல்லை அல்லது இந்த உலகம் எவைகளை நம்பி நடைமுறைப் படுத்த விரும்புகிறதோ

அவை களை உள்ளடக்கிய வெளிப் படைத் தன்மை கொண்டதாக இல்லையென்றும், அதன் மூலம் வாழ்க்கையின் மையக்கருத்தை அது இழந்து விட்டிருக்கிறதென்றும் சொல்லு கிறார்கள்.

சத்தியமானது மிகத் துல்லிய மாக நம்முடைய தலைமுறை யினருக்கு சம்மந்தமுடையதாகவே இருக்கிறது. ஏனென் றால், அது மிகச் சுலபமாகப் புரிந்து கொள்ளக்கூடிய வகையில், இந்தக் குறுகிய கால வாழ்க்கையை விட்டு நித்தியத் திற்குள் பிரவேசிக்கப் போகிற எல்லா இடங்களிலுமிருக்கிற எல்லா ஆண் களுக்கும், பெண்களுக்கும் பொருந் தக் கூடிய அளவில் தான் இருக்கிறது. சுவிசேஷத்திற்கு நாம் கீழ்ப்படியும் போது அது நமக்கு பரலோகத்திற் கான பயணச் சீட்டு ஆக இருக்கிறது. பரலோகம் தான் நம் குறிக்கோள், அதை அடைவதற்கு வழி சுவிசேஷம் தான். நுழைவுச் சீட்டு அலங்காரமாக இல்லை என்ற காரணத்திற்காக ஒரு போட்டியைக் காண யார் மறுப்பார்கள்.

நாம் எந்த விசுவாசத்திற் காகப் போராடுகிறோமோ, அந்த விசுவாசம் முதல் நூற்றாண்டில் எப்படி ஒப்புக் கொடுக்கப்பட்டதோ அப்படித் தான் இன்றும் ஒப்புக்கொடுக்கப்படுகிறது. அது தொட்டிலிலிருந்து சுடுகாடு வரை பயணம் செய்கிற எல்லாருடைய தேவையையும் சந்திக்கிறது: ஒரு வாலிபன், ஒரு வயதான விவசாயி, நூலகக் காப்பாளர், ஓர் இசை அமைப்பாளர், ஒரு கூச்ச சுபாவ முடையவர், எல்லோரிடமும் சகஜ மாகப் பழகுபவர், ஒரு கல்லூரித் தலைவர் என்று இப்படி எந்த பிரிவைச் சேர்ந்த வராக ஒருவர் இருந்தாலும் சுவிசேஷம் சரியான தாகவே உள்ளது. இப்பிரிவை சேர்ந்த யாராவது ஒருவர் தங்கள் சூழ் நிலைக்கேற்ப சுவிசேஷத்தை மாற்ற வேண்டுமென்று சொன்னால், அவர்கள் சுவிசேஷத்தின் நோக்கத் தைப் புரிந்து கொள்ளவில்லை யென்றே பொருள். அவருடைய விசேஷித்த தேவைகளுக்கேற்ப சுவிசேஷத்தை மாற்ற வேண்டும் என விரும்பினால் நம் போதனை யையும், சுவிசேஷ நடைமுறை யையும் மேற்சொல்லபட்ட பிரிவி னரில் ஒரு சாராரைப் பிரியப்படுத்த மாற்றினால், அது வேறொரு சாரார் நற்செய்தியின் உபதேசத்திலிருந்து விலகிச் செல்ல ஏதுவாகி விடும். அத்தோடு, நம்முடைய பயணச் சீட்டை செல்லாததாகவும் ஆக்கி விடும்.

எல்லோருக்கும் பொருள்படும் படியாக வடிவமைக்கப்பட்ட சுவிசே ஷத்தின் தனித்தேவை எல்லோரா லும் சமமாக பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். நம்மு டைய அழிந்து போகிற சரீரங்கள் கல்லறையில் வைக்கப்படும் நாளிலே நம்மெல்லா ருக்கும் நம்பிக்கை தேவைப்படு கிறது. நம்மெல்லாருக்கும் நம் பாவங்கள் மன்னிக்கப்படுவது அவசி யமாயிருக்கிறது. நாமெல்லாரும் தேவனோடு ஐக்கியத்தை மீட்ட மைத்துக் கொள்வது அவசியமாயி ருக்கிறது. இந்த சத்தியமானது உங்க ளுக்கு, மிக எளிமையானதாக

இருந்தால், அதை மேற்கொண்டு மாற்று வதற்கு எங்களுக்கு உரிமை இல்லை என்று வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறோம். *பரலோகம் செல்வதற் கான ஒரே பயணச்சீட்டு கிறிஸ்துவின்* பாவங்கள் மன்னிக்கப் படுவது அவசி யமாயிருக்கிறது. நாமெல்லாரும் தேவனோடு ஐக்கியத் தை மீட்ட மைத்துக் கொள்வது அவசியமாயிருக்கிறது. இந்த சத்திய மானது உங்களுக்கு, மிக எளிமை யானதாக இருந்தால், அதை மேற் கொண்டு மாற்றுவதற்கு எங்களுக்கு உரிமை இல்லை என்று வருத்தத் தோடு சொல்லிக் கொள்கிறோம்.

*பரலோகம் செல்வதற்கான ஒரே பயணச்சீட்டு கிறிஸ்துவின் சுவிசேஷந்தான் என்பதை மட்டும் எங்களால் உங்களுக்குக் காட்ட முடியும்.* உங்களுக்கு இன்னும் அழகான பொழுதுபோக்கு அம்ச முள்ள பயணச் சீட்டு வேண்டுமென் றால், நீங்கள் வேறு எங்கா வது தான் பார்க்க வேண்டும். ஆனால், இந்த வாழ்க்கை முடிந்து நித்தியம் காத்தி ருக்கும் போது அது உங்களை கனப் படுத்துமென்று எந்த நிச்சயத்தையும் எங்களால் அளிக்க முடியாது. ❀

## தேவனுடைய....

தேவனுடைய வல்லமைக்காக அவருக்குப் பயப்படு

தேவனுடைய அதிகாரத்திற்காக அவருக்குக் கீழ்ப்படி

தேவனுடைய மன்னிக்கும் தன்மைக்காக அவரைத் தேடு

தேவனுடைய ஞானத்திற்காக அவரை நம்பு

தேவனுடைய நற்தன்மைக்காக அவரில் அன்பு கூரு

தேவனுடைய மகத்துவத்திற்காக அவரைத் துதி

தேவனுடைய இரக்கத்திற்காக அவருக்கு நன்றி சொல்

தேவனுடைய உண்மைக்காக அவரில் விசுவாசம் கொள்

தேவனுடைய பரிசுத்தத்திற்காக அவரை போற்று



# பழைய ஏற்பாட்டைப் படிப்பதற்கான காரணங்கள்

## Reasons for Studying the old Testament

*John Lriesen*

அவ்வப்போது சிலர் " நாம் புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவின் போதனைகளின் கீழ் வாழ்கிறவர்களாக இருக்கிறோம் என்றால், நாம் பழைய ஏற்பாட்டை ஏன் படிக்க வேண்டும்? என்று கேட்பார்.

கிறிஸ்து மோசேயின் பிரமாணத்தை சிலுவையில் ஆணி அடித்து முடித்தது உண்மையாக இருந்தது. நாம் மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழவில்லையென்றாலும், பழைய ஏற்பாட்டு புத்தகங்களில் காணப்படும் மாபெரும் பாடங்களையும், போதனைகளையும் நாம் கற்றுக்கொள்ள தேவன் விரும்புவதில்லை என்று பொருள் பாடாது. " *தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது* " என்று பவுல் சொல்கிறார் (ரோமர். 15:4).

### வரலாற்றுக் காரணங்கள்

பழைய வரலாற்றின் ஆதாரப் புத்தகமாக உலகின் எல்லா இலக்கியங்களிலும் முதல் இடத்தைப் பிடிப்பது பழைய ஏற்பாடு தான். தேசங்களின் ஆரம்பங்கள் பற்றி முழுவிவரமாக, மிகத் துல்லியமாக பழைய ஏற்பாடு மட்டுமே தர முடியும். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சரைப் பற்றிப் பழங்காலத்து வரலாற்றுச் சுவடுகளை விட தானியேல் புத்தகத்தில் அதிகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

மெய் தேவனும், ஜீவனுள்ள தேவனுமாகிய யெகோவாவைப் பற்றிய பழங்காலத்து ஆராதனை முறைமைகளைப் படிப்பதற்கு சிறந்த ஆதாரப் புத்தகமாக பழைய ஏற்பாடு தனித்துவம் வாய்ந்து நிற்கிறது. கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வருவதற்கு முன்பான காலகட்டத்தில் நடந்தவைகள் பற்றிய உண்மைத் தன்மை என்று வரும்போது பழைய ஏற்பாட்டு புத்தகங்களோடு வேறு எந்தப் புத்தகத்தையும் ஒப்பிட முடியாது. வரலாற்று இடங்கள், சம்பவங்கள் மற்றும் மக்கள்

சம்மந்தமாக அது தரும் உண்மைகள் தொடர்ந்து தொல்பொருள் மற்றும் வரலாற்று ஆராய்ச்சியாளர்களால் உறுதி செய்யப்பட்டு வருகிறது.

**இது ஆரம்பங்களின் இரகசியத்தை வெளிப்படுத்துகிறது**

மனிதனுடைய ஆரம்பம் மற்றும் மனிதனை உண்டாக்கின வரின் தன்மை போன்ற மாபெரும் இரகசியங்களுக்கு விடை தரும் ஒரே புத்தகமாக பழைய ஏற்பாடு திகழ் கிறது. இது இப்பிரபஞ்சம் மற்றும் எல்லா உயிரினங்களின் சிருஷ்டிப்பு பற்றியும், மனிதனுடைய ஆரம்பம், தேவனுக்கு விரோதமான அவனு டைய பாவம், மரண தண்டனை, மனிதனை பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் மீட்கும்படியாக இவ்வுலகத்திற்கு இரட்சகரை அனுப்பும்படியான ஆயத்தம் போன்றவை பற்றிப் பேசுகிறது.

**கிறிஸ்துவைப் பற்றிய தீர்க்க தரிசனங்கள்**

புதிய ஏற்பாடு கொடுக்கப்படு வதற்கு முன்பாக, இயேசு கிறிஸ்து வும், அப்போஸ்தலர்களும் இந்த பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களி லிருந்து தான் போதித்தார்கள். இயேசுவின் வாழ்க்கை மற்றும் கிரியைகளின் உண்மைகளோடு பழைய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ள தீர்க்க தரிசனங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது அதன் எழுத்துக்கள் இயேசு தேவனுடைய குமாரன் என்பதை நிரூபிக்கின்றன. இன்று பழைய ஏற்பாடு இயேசு தான் கிறிஸ்து என்பதை நிரூபிக்க ஓர் வல்லமையான ஆதாரப் புத்தக மாகத் திகழ்கிறது. ஏனென்றால், வரவிருந்த மேசியா சம்மந்தமான எல்லா தீர்க்கதரிசினங்களின் நிறை வேறுதலாக இயேசு இருந்தார். கர்த்தருடைய வருகையை முன்னறி வித்த பழைய ஏற்பாட்டு வசனங் களைப் பற்றிய அறிவில்லாமல் புதிய ஏற்பாட்டு பல வசனப்பகுதிகளை புரிந்து கொள்ள முடியாது. இவைக ளெல்லாம் நம் வேத வாசிப்பில் பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகளை ஏன் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்கான சில காரணங் களாகும்.

ஒரு கிறிஸ்தவ விவசாயி ஒரு பெரிய பட்டணத்திற்கு போயிருந்தார். அவர் அங்கிருந்த ஒரு பெரிய உணவகத்திற்கு மதிய உணவிற்காக சென்றார். அந்த உணவகத்தில் உட்கார்ந்திருந்த வாலிபர்கள் அருகிலிருந்த மேஜையில் அவர் உட்கார்ந்தார். அவருக்கான உணவு பரிமாறப்பட்டபோது தலை தாழ்த்தி தரப்பட்ட உணவிற்கு நன்றி செலுத்தி தேவனிடம் ஜெபித்தார். அருகிலிருந்த வாலிபர்களில் ஒருவன் உரத்த சத்தமிட்டு, " ஏய் விவசாயி, நீ எங்கிருந்து வருகிறாயோ அங்கே எல்லோரும் இப்படி ஜெபிக்கிறார்களா?" என்றான்.

அந்த விவசாயி தன் ஜெபத்தை முடித்து விட்டு அமைதியாக " இல்லை, மகனே, பன்றிகள் இப்படி ஜெபிப்பதில்லை " என்று பதிலளித்தார்.



# "பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள்"

## "O Worship the Lord in the beauty of holiness"

*Ron Bryant*

அன்பானது மனித இருதயத்தில் மிகத் தீவிரமான, ஆழமான உணர்வுகளைத்தட்டி எழுப்பக்கூடிய பன்முக பதிலை உள்ளடக்கியது. தேவன் மீதான அன்பு உயிரோட்டத்துடன் இருதயத்தில் செயல்படும் போது ஒரு மனிதன் அனுபவிக்கக் கூடிய மிக ஆழமான, தீவிரமான ஆவிக்குரிய உணர்வுகளின் ஆதாரமாயிருக்கிறது. அந்த அன்பு தான் ஆத்துமாவால் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு ஊக்கமான ஆராதனையை ஏறெடுக்க வழிவகுக்கிறது.

ஆராதனை என்பது தேவனைப் போற்றுவதும், துதிப்பதுமாயிருக்கிறது. இது தேவனுக்கு செலுத்தும் மரியாதையாயிருக்கிறது. உண்மையாக, மனப்பூர்வமாக தேவனைப் போற்றுவதும், துதிப்பதும் கிறிஸ்தவ வாழ்க்கையின் அம்சங்களில் ஒன்றாக இருக்கிறது. தேவனை ஆராதிப்பது மகிழ்ச்சியானதாயும், பிரகாசமானதாயும், உயர்த்துகிற தாயும், இனிமையானதாயும் இருக்கிறது. அது இருளாலும், சோகத்தாலும் நிறைந்திருக்கிற உலகில் ஆனந்தத்தையும், மகிழ்ச்சியையும் தருகிறது. அதே நேரத்தில், தேவனை ஆராதிப்பது தான் மனித உச்சரிப்பின் உயரிய உச்சரிப்பாயிருக்கிறது. ஏனென்றால், ஆராதனை ஆத்துமாவின் ஆழமான, பரிசுத்தமான எண்ணத்தை துதியோடு இணைக்கிறது. ஆராதனையானது அதன் ஆதாரத்தில், அதன் பாதையில், அதன் நன்மையில் அழகானது. அது தேவனுடைய கிருபையால் பிறந்து, மீட்கப்பட்டவர்களின் சந்தோஷமான இருதயங்களிலிருந்து எழும்புகிறது. ஆராதனை நன்றி நிறைந்த உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்து, வெற்றிக் களிப்பினால் பாய்ந்து, மகிழ்ச்சியுடன் போற்றுவதோடும், கனப்படுத்துவதோடும் தொடர்கிறது.

கர்த்தரைப் பரிசுத்த அலங்காரத்துடனே தொழுது கொள்ளும்படியான புத்திமதி (சங். 96:9) தேவனுக்கென்று நாம் பிரித்தெடுக்கும்படியான ஆவலைத் தூண்டுகிறது. இந்தப் பரிசுத்தத்தில் அழகு பொழிந்தருளப்பட்டிருக்கிறது. அதிலிருந்து ஆராதனை ஊற்றெடுத்து வர வேண்டும். பரிசுத்தத்தினால் அழகாக உண்டாக்கப்பட்டிருக்கிற வாழ்க்கையில் ஆராதனை என்பது ஏறெடுக்கலாம், ஏறெடுக்காமல் இருக்கலாம் என்பது போன்றல்லாமல் கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது.

***மனிதர்களாக,*** நாம் பரம்பரையாக மரபணுவாலும், சுற்றுச்சூழலாலும் உருவாக்கப்படுகிறோம்.

***ஆவிக்குரியபிரகாரமாக,*** நம் பிதாவாகிய தேவனுடைய சாயலில் உருவாக்கப்படுகிறோம்.

***கிறிஸ்தவர்களாக,*** " அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம் ".

பெட்டி பார்டன் சோட்



# எதற்காக ஞானஸ்நானம்?

## Baptism : What is it for?

*Ken Tyler*

"ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும், ஆனால், அந்த ஞானஸ்நானம் அவன் இரட்சிக்கப் படுவதற்காக அல்ல, "அவன் இரட்சிக் கப்பட்டபடியால்". ".... நாம் முன் பாகவே ஞானஸ்நானம் இல்லாம லேயே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்". "..... பாவ மன்னிப்பிற்காக ஞானஸ்நானம் அல்ல" போன்ற வாக்கியங்களெல்லாம் முற்றிலும் கத்தோலிக்கத்தனமானது

மேலே குறிப்பிட்டவைக ளெல்லாம் சரிதானா? இந்த வார்த்தைகளுக்குப் பின் அறிவாளி கள் என்று தங்களை அழைத்துக் கொள்பவர்கள் இருக்கி றார்கள். அவர்கள் பாவங்களை நீக்கிப் போடு வதற்கும், ஞானஸ்நானத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று நம்புகிறார்கள். வேதாகமம் என்ன போதிக்கிறது? இந்தக் கட்டுரையில் ஞானஸ்நானத்தைப் பற்றி இயேசு வும், பேதுருவும், அனனியாவும் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று பார்ப்போம். அதன் பின்பு ஞானஸ்நானத்தின் நோக்கம் என்ன என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ள முடியும்.

முதலாவதாக, ஒருவர் ஞானஸ்நானத்திற்கு முன்பாக இரட்சிக்கப்படுகிறதில்லை என்று இயேசு சொன்னார் (மாற்கு 16:16) யை கவனியுங்கள். " விசுவாசமுள்ள வனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாத வனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் ". இங்கே இயேசு "விசுவாசிக்கிறவன் இரட்சிக்கப்பட்டு அதன் பின்பு ஞானஸ்நானம் பெறு கிறான் " என்று சொல்ல வில்லை. இருந்தபோதிலும், நாம் மேற்கோள் காட்டிய மனிதருடைய வாக்கியங் களில், ".... நாம் முன்பாகவே ஞானஸ்நானம் இல்லாமலேயே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்...." என்று பார்க்கிறோம். இயேசு வெளிப் படையாகவே "விசுவாசமுள்ள வனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" என்று சொல்லி

விட்டார். நான் இயேசுவின் வார்த்தைகளைத் தான் கவனிப் பேன் என்று நம்புகிறேன். நீங்கள் எப்படி?

இரண்டாவதாக, பாவ மன்னிப்புக்கென்று நாம் ஞானஸ் நானம் பெற வேண்டும், அந்த ஞானஸ்நானம் நம்மை இரட்சிக் கிறது என்று பேதுரு அப்போஸ்தலர் சொன்னார் (அப். 2:38; 1 பேதுரு 3:21) வசனங்களை கவனியுங்கள், "..... நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத் தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் "*அதற்கு ஒப்பனையான ஞானஸ் நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல் இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினு டைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது* ". இவ்விரு வசனங் களை வைத்துப் பார்க்கும் போது, ஞானஸ்நானம் பாவமன்னிப்புக் கான தல்ல, அந்த ஞானஸ்நானம் நம்மை இரட்சிப்பதில்லை என்று ஒருவரால் எப்படிச் சொல்ல முடியும்? இருந்த போதிலும், நாம் மேற்கோள் காட்டிய மனித வாக்கியங்களில் " ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஞானஸ் நானம் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆனால், அந்த ஞானஸ்நானம் அவன் இரட்சிக்கப்படுவதற்காக அல்ல. ஏனென்றால், அவன் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டுவிட்டான் " என்று பார்க்கிறோம். மறுபடியும், நான் பேதுருவைத் தான் கவனிப்பேன். மனிதர்களை அல்ல. நீங்கள் எப்படி?

மூன்றாவதாக, அனனியா நம் " பாவங்களைக் கழுவப்படும்படி " நாம் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று சொன்னார். அவர் தர்சு பட்டணத்து சவுலிடம் " *இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு* " என்று சொன்னார் (அப். 22:16). இதைவிட வெளிப்படை யாக எப்படிச் சொல்வது? நம் " பாவங்கள் கழுவப்படும்படியாக" நாம் ஞானஸ் நானம் பெற வேண்டும். மறுபடியும் நான் அனனியாவைத்தான் கவனிப் பேன். வேறு மனிதர்களை அல்ல நீங்கள் எப்படி?

ரோமர் 6:3,7 வசனங்களில், " பவுல் நாம் கிறிஸ்துவின் மரணத் திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்று, அவரோடு கூட அடக்கம் பண்ணப் பட்டு, புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு எழுந்தோம் " என்று தெளிவுபடுத்திவிட்டார். அவருடைய மரணத்தில் கிறிஸ்து தம்முடைய இரத்தத்தைச் சிந்தினார். நம் பாவங்கள் நீக்கப்பட்டு கிறிஸ்து வுக்குள் புதுசிருஷ்டியாக எழுந்திருக் கிறோம். இது மிகவும் சுலபமானது! அப்படியானால் ஞானஸ்நானம் எதற்காக என்று வேதாகமம் சொல் கிறதை ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது? நீங்களோ, நானோ அல்லது வேறு யாரோ பரலோகம் போவதற்கு ஞானஸ்நானம் அவசியம். அது சரியானதாக இருக்க வேண்டும்.

# எங்களுக்கு விமர்சகர்கள் தேவை இல்லை : சிலர் சொல்லுகிறார்கள்

# Some Say: We Don't Need Critics!

*Hollis Miller*

நம்பிக்கையின் தத்துவ ஞானமானது நாம் மிகச்சிறந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று உறுதிப்படுத்துகிறது. ஆனால், இந்த தத்துவஞானம் சரியானதா? வேதாகமத்தின்படி அது சரியானதல்ல. தேவன் தமது சிருஷ்டிப்பைப் பார்த்து "நல்லது" என்று சொன்னபோது தான், மிகச் சிறந்த உலகம் உண்டானது. பாவம் இவ்வுலகத்தில் எப்போது பிரவேசித்ததோ, அந்நேரமே மிகச் சிறந்த உலகம் முடிவுக்கு வந்தது. அந்நேரத்திலிருந்தே இவ்வுலகமானது தேவனை விட்டுப் பிரிந்தது, அதன் விளை வையும் சந்திக்க நேர்ந்தது.

நமக்கு விமர்சகர்கள் தேவை இல்லை என்று சொல்கிறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், அவர்கள் சொல்வது சரியா? பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் விமர்சகர்களாயிருந்தார்கள். இயேசுவே ஒரு விமர்சகராயிருந்தார். அப்போஸ்தலர்கள் விமர்சகர்களாக இருந்திருக்கிறார்கள். விமர்சகர்கள் நமக்குள்ளே ஓர் இடத்தைப் பிடித்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்வதற்கு ஒருவருக்கு எப்படிப்பட்ட ஆதாரம் தேவை? காரியங்களின் மதிப்போடு இடைபடுகிறவன் தான் விமர்சகன். ஒருவரும் எதையும் மதிப்பீடு செய்யவில்லையென்றால், இவ்வுலகமானது உண்மையாகவே கூச்சலும், குழப்பமுமான இடமாயிருக்கும்.

இயேசு தம்முடைய நாட்களில் வாழ்ந்த யூதர்களுடைய எண்ணங்கள் குறைவான மதிப்பை உடையதாகக் கருதியபடியால் அவர்களைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று தம்முடைய சீஷர்களை எச்சரித்தார் (மத். 16:6,12). யோவான் கிறிஸ்தவர்களிடம் தங்களிடத்தில் வரும் தீர்க்கதரிசிகளை (மதிப்பீடு) விமர்சனம் செய்ய வேண்டுமென்று வலியுறுத்தினார் (1 யோவான் 4:1). கன்னானாகிய அலெக்சாந்தர் கடும் விமர்சனத்திற்கு உள்ளாவதற்கு தகுதி உடையவன் என்பதை தீமோத்தேயுவிற்கு அறிவிக்க பவுல் ஆவலாயிருந்தார் (2 தீமோத். 4:14). சபைகளில் விமர்சனம் செய்வது அல்லது

கண்டனம் பண்ணுவது மூப்பர்களின் முதன்மையான பொறுப்பாயிருக்கிறது (அப். 20:28,31; தீத்து. 1:9).

நேர்மறையான, வேதாகமம் சார்ந்த விமர்சனங்கள் எப்போதுமே அவசியமாகிறது. ஏனென்றால், பாவமும், அதன் காரணமாக அவமானமும் கர்த்தருடைய வருகை வரை தொடர்ந்து கை கோர்த்து வரும். தேவை இல்லாதது என்னவென்றால், அவதூறு, வம்பளப்பு, பெருமை மற்றும் அகந்தையான மனப்பான்மைதான். இவைகளெல்லாம் பாவமுள்ளவைகள். ஏனென்றால், இவைகள் தவறான உள்நோக்கத்துடன் விமர்சனம் செய்யக் காரணங்களாக அமைகின்றன. ஆகவே, நாம் விமர்சகர்களாகும் போது அதைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அதாவது, நாம் வேதாகம போதனைக்கு இசைவாக விமர்சிக்க வேண்டும்.

நீங்கள் எதற்காக நிற்கிறீர்களோ, அதில் தைரியமாக, உறுதியாக இருங்கள், ஆனால், எதற்காக நீங்கள் விழுந்துபோவீர்களோ அதிலே ஜாக்கிரதையாயிருங்கள். ❀

## எவ்வளவு நாளாயிற்று? சொல்லுங்கள்

- தனிமையில் இருப்பவரைப் போய்ப் பார்த்து நலம் விசாரித்து.....?
- வேதம் வாசிக்க முடியாதபடி வியாதியாயிருப்பவருக்கு வேதத்தை வாசித்துக் காட்டி...?
- கிறிஸ்தவராயிருப்பதால் பாடுகளோடிருப்பவருக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி.....?
- பாவத்திலிருப்பவர்கள் மனந்திரும்பும்படி ஊக்கமாக ஜெபித்து ......?
- இழந்துபோன நிலையில் இருப்பவருக்கு நற்செய்தியை அறிவித்து .....?
- மெய் பக்தியிலிருப்பவர்களைப் பாராட்டி நாலு வார்த்தைகள் சொல்லி .....?

ஒவ்வொரு கிறிஸ்தவனும், பிறருக்காக ஏதாவது ஒன்றைச் செய்ய முடியும்.

# கிறிஸ்துவை அணிந்து கொள்ளுதல்

## BEING CLOTHED WITH CHRIST

*Bill B. Gibson*

Hugo Mccord என்பவர் நித்திய சுவிசேஷத்தின் புதிய ஏற்பாடு என்கிற தன்னுடைய புத்தகத்தில் கலா. 3:27யை இவ்விதமாக மொழியாக்கம் செய்கிறார் : " *உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவை அணிந்து கொண்டீர்களே* ". இது மிகச் சரியான மொழியாக்கம் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. ஆனால், கிறிஸ்துவை அணிந்து கொள்ளுதல் என்பதின் பொருள் என்ன?

* கிறிஸ்துவை அணிந்து கொள்வதென்பது "கிறிஸ்துவின் சிந்தையை சொந்தமாக்கிக் கொள்வதாகும். ஒருவர் கிறிஸ்துவினுடைய குணாதிசயங்களை சொந்தமாக்கிக் கொள்கிறார்.

* கிறிஸ்துவை அணிந்து கொள்வதென்பது " இயேசுவின் அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வருவதற்கு நம்மால் முடிந்தவரை சிறந்ததைச் செய்வதாகும் " (1 பேதுரு 2:21).

* கிறிஸ்துவை அணிந்து கொள்வதென்பது நம் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து நம் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள்வதாகும். அப்போது அவர் நம் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார் (நீதி. 5,6). இது இயேசுவை ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் என் சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது (லூக். 22:42) என்று சொல்வதினால் ஏற்றுக் கொள்வதாகும்.

* மாம்சீகப் பிறப்பில் எப்படி ஒரு குழந்தை பெற்றோர்களுடைய உருவத்தைப் பெற்றுக்கொள்ளுகிறதோ, அப்படியே கிறிஸ்துவை அணிந்து கொண்ட கிறிஸ்தவனும் அவரைப் போலவே மாறுகிறான் (2 கொரி. 2:18).

* ஞானஸ்நானத்தில் நாம் கிறிஸ்துவை அணிந்து கொள்வதால் "கிறிஸ்தவன்" என்ற பெயர் நமக்குக் கிடைக்கிறது. அந்தப் பெயரை நாம் எப்போதும் கனப்படுத்துவது அவசியமாகிறது (1 பேதுரு 4:15,16).

* கிறிஸ்துவை அணிந்து கொள்வதென்பது எல்லா உடைகளிலும்

மிக அழகான உடையை உடுத்திக் கொள்வதாகும். அது இயேசுவைப் போல் பரிசுத்தமாக இருப்பதாகும், இயேசுவைப் போல் நேசிப்ப தாகும், இயேசுவைப் போல் மன்னிப்பதாகும், இயேசுவைப் போல் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதாகும், இயேசுவைப் போல் பேசுவதாகும். சுருக்கமாகச் சொல்வதென்றால், கிறிஸ்து நமக்குள் வாழ்கிறார். நாம் அவருக்காக வாழ்கிறோம் (கலா 2:20; பிலிப். 1:21).

* ஞானஸ்நானத்தில் இயேசுவை அணிந்து கொள்வதென்பது உலகிலேயே மிக விலை யுயர்ந்த ஆடையை அணிந்து கொள்வதாகும். அவர் அவை களை தம்முடைய சுய ரத்தத் தினாலே வாங்கினார் (1 பேதுரு 1:18,19).

* ஞானஸ்நானத்தில் ஒருவர் கிறிஸ்துவை அணிந்து கொள் ளும் போது, அப்படி கிறிஸ்துவை அணிந்து கொள்ளும் காலம் முழுவதும் கிறிஸ்துவால் அவர் பாதுகாக்கப்படுகிறார். (மத். 28:20).

* கிறிஸ்துவை நாம் அணிந்து கொண்டிருப்பதால், நாம் புது சிருஷ்டிகளாயிருக்கிறோம் (2 கொரி. 5:17; ரோமர் 12:12).

ஞானஸ்நானத்தில் நாம் கிறிஸ்துவை அணிந்து கொள்ளும்போது நாம் தானாகவே அவருடைய சாயலாக மாறுவதில்லை (பிலிப். 2:5; ரோமர் 13:14). ஆனால், ஒவ்வொரு நாளும் ஒரு கிறிஸ்தவன் இயேசுவைப் போல் மாறுவதற்கு தன்னால் முடிந்த வரை சிறந்ததைச் செய்யும் போது அவன் கிறிஸ்துவுக்குள் வளர்கிறான் கிறிஸ்துவைப் போல் மாறுகிறான்.


## கர்த்தர் ஆபிரகாமுக்கு கொடுத்த ஏழு ஆசீர்வாதங்கள்

1. நான் உன்னை பெரிய ஜாதியாக்குவேன்
2. நான் உன்னை ஆசீர்வதிப்பேன்
3. உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்
4. நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்
5. உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன்
6. உன்னை சபிக்கிறவர்களை சபிப்பேன்.
7. பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்

# ஜனநாயகம் சிறந்ததல்ல!

## DEMOCRACY IS NOT THE BEST!

*Allan E. Flaxman*



கர்த்தருடைய சபை ஜனநாயகமான ஒன்றல்ல என்பதைக் கேட்பதற்கு சிலருக்கு அதிர்ச்சியை அளிக்கிறது! சபையின் சில அங்கத்தினர்களுக்கு இந்தத் தகவல் ஆச்சரியமாக இருக்கிறது. நம்மில் அநேகர் ஜனநாயக முறையில் ஆட்சி செய்யப்படுகிற நாடுகளில் வளர்க்கப் பட்டிருக்கிறோம். ஜனநாயக முறையிலான அரசாங்கத்தில் தவறுகள் இருந்தாலும் அதுதான் மிகச்சிறந்த அரசாங்கமாக இருப்பதாக நம் வாழ்க்கை முழுவதும் படிப்பிக்கப் பட்டிருக்கிறோம். மேலும், இது சர்வதிகார ஆட்சியை விட மேலானது, இங்கிலாந்து மற்றும் வேறு சில நாடுகளில் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு இருந்தது போல, "பழைய பாணியிலான" மன்னராட்சியை விட சிறந்தது.

அப்படியென்றால், வார்த்தைகளால் வெளிப்படுத்தப்படாவிட்டாலும் கூட கிறிஸ்துவின் சபையும் சிறந்ததாயிருக்க வேண்டுமானால். அது ஜனநாயக முறையில் ஆளுகை செய்யப்பட வேண்டும் என்பது தான் முடிவாயிருக்கிறது.

ஆனால், இந்த முடிவு தவறானது! நிச்சயமாக கிறிஸ்துவின் சபை மிகச் சிறந்த அரசாங்கத்தால் ஆளுகை செய்யப்படுகிறது. ஆனால், அது ஜனநாயக அரசாங்க மல்ல. மாறாக, அது முற்றிலும் மன்னராட்சி முறையிலானது! மனித அரசாங்கத்தைப் பொறுத்தவரை சர்வதிகார ஆட்சியைப்போல இருந்தாலும் சபைக்கு இது நன்றாகப் பொருந்துகிறது. ஏனெனில், நமக்குப் பூரணமான ராஜா இருக்கிறார் (எபி. 4:15; யோவான் 8:46). அவர் பாவமில்லாதவர் மாத்திரமல்ல, எவ்விதத்திலும் பாவம் செய்வ தென்பது அவரால் கூடாத காரியம். மேலும், நாம் அவருடைய ராஜ்யத்தில் குடிமக்களாகும்படி நமக்காக தம்முடைய ஜீவனையே கொடுக்கும் அளவுக்கு நம்மில் அன்பு கூருகிறார் (யோவான் 3:16).

இப்போது இயேசு கிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தில் (சபையில்) ஆளுகை செய்து கொண்டிருக்கிறார். இதை இயேசு தாம் உயிர்த்தெழுந்த


சில நாட்களிலேயே தம்முடைய அப்போஸ்தலர்களுக்கு தெளிவு படுத்திவிட்டார். "வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று. (மத். 28:18). அப்போஸ்தலனாகிய பவுலும், கிறிஸ்து நம் "தலையாக" இருக்கிறபடியால் நாமெல்லாரும் அவருக்குக் கீழ்ப்படிந்து, எல்லாவற்றிலும் அவரை முதன்மைப்படுத்த வேண்டும் என்று சொல்கிறார். இது ஒருவர் இயேசுவுக்கு ஒப்பாகவோ, அவருக்குச் சமமாக இருப்பதற்கு மேற்கொள்ளும் முயற்சியை அறவே ஒழித்துப் போடுகிறது (எபே. 1:22,23; கொலோ. 1:18).

இந்த முக்கியமான உண்மையை மனதில் வைப்பதில் தோல்வி ஏற்பட்டதால் தான் வேதத்திற்கு புறம்பான "ஆர்ச் பிஷப்" மற்றும் "மதகுரு" போன்ற பட்டங்களும், பதவிகளும் உருவாக வழி வகுத்தது. இந்தப் பதவிகளெல்லாம் மூன்றாம், நான்காம் நூற்றாண்டு களில் தான் உருவாகின. இந்தப் பதவிகள் ஒன்றன்பின் ஒன்றாக, சிக்கலான அடுக்குப் பதவி முறைக்கு வழி வகுத்தது. கடைசியாக "போப்" என்று அழைக்கப்படும் உயரிய " ஆர்ச் பிஷப் "பை நியமிக்க வழி வகுத்தது. அவருக்கு பெருவாரியான அதிகாரம் கொடுக்கப்பட்டு, அவர் தவறு இழைப்பதில்லை என்று அறிவிக்கப் பட்டார்.

இந்த குருட்டுத் தன்மையை நீக்கி கிறிஸ்துவின் பூரண அதிகாரத்தைச் செலுத்தும் முயற்சிகள் வேறு சில தவறுகளுக்கு வழி வகுத்தன, அதாவது, ஆளுகை அமைப்புகளும், நிர்வாக அமைப்புகளும், ஆலோசனைச் சங்கங்களும், மற்றும் பிற முடிவெடுக்கும் மாநாடுகளும் தோன்ற வழி வகுத்தன. அவர்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்களை புதிய ஏற்பாடு அங்கீகரிக்கவில்லை. பல பிரச்சனைகள் சீர்திருத்தக் காலக் கட்டத்தில் தான் எழுந்தது. ஒன்றன்பின் ஒன்றாக பல பிரிவினைச் சபை கூட்டங்கள் தோன்றுவதற்கு காரணங்களாக அமைந்தன. கிறிஸ்து நம்முடைய ராஜாவாக இருப்பதற்கு முற்றிலுமாக அதிகாரம் பெற்றிருக்கிறார் என்கிற உண்மையை ஜனங்கள் அற்பமாக எண்ணினபடியால்தான் இன்று நம்முடைய நாட்களில் இத்தனை மார்க்கப் பிரிவினைக் கூட்டங்கள் உருவாகி இருக்கின்றன.

இன்று மூப்பர்கள், மேய்ப்பர்கள், கண்காணிகள் (புதிய ஏற்பாட்டில் இவைகளெல்லாம் ஒரே பதவியை அல்லது பொறுப்பைத் தான் குறிக்கிறது) சபையில் இருக் கிறார்கள். ஒரு சபையில் எந்த ஒரு காரணத்தைக் கொண்டும் ஒரு மூப்பர் இருக்கக் கூடாது. ஒன்றுக்கும் மேற்பட்ட மூப்பர்கள் தான் இருக்க வேண்டும். அதேபோல் ஒரு மூப்பர் ஒன்றுக்கும் மேற்பட்ட சபைகளில் மூப்பராக இருக்கக்கூடாது. மூப்பர்களுடைய பணி பிராந்திய சபையின் ஆவிக்குரிய நலனைக் கண்காணிப்பது தான். மூப்பர்களும் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற கிறிஸ்துவின் அதிகாரத்திற்கு முற்றிலுமாக கீழ்ப்பட்டிருக்க வேண்டும்.

கர்த்தருடைய சபை இப்படித் தான் இன்று செயல்பட்டு வருகிறது. இயேசு முழுமையான ராஜாவாக அங்கீகரிக்கப்பட்டு, அவரால் நெறி படுத்தப்பட்ட முறைமையைப் பின் பற்றுகிற சபையில் நீங்கள் அங்கமாயிருக்கிறீர்களா? ❀



# இயேசுவால் கட்டப்பட்டபடியே சபை

# *The Church As Jesus Built It*

***W.Douglass Harris***

கிறிஸ்து அப்போஸ்தலர்கள் மூலமாக சபையை ஸ்தாபித்த போது, எல்லா நிலை களிலும் அது எப்படியாக இருக்க வேண்டும் என்று நினைத்தாரோ அப்படி யாகவே அது இருந்தது. அவர் சபையைக் கட்டினபடியால் அது வேறுவிதமாக இருக்கவேண்டு மென்று அவர் விரும்பியிருந் தால், அதை வேறு விதமாக ஏற்படுத்துவதற்கு அங்கே வாய்ப் பிருந்தது (மத். 16:18). புதிய ஏற்பாடு தேவ ஆவியினால் ஏவப்பட்ட ஒன்று என ஏற்றுக் கொள்ளுகிற எல்லோரும் அதிலேயே சபைக்கான மாதிரி வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று விசுவாசிக்கிறார்கள். அதன் தெய்வீக அம்சத்தில், இயேசு எப்படிக் கட்டினாரோ அப்படியே இருந்தது. அதை மாற்றுவதற்கோ அல்லது மறு சீரமைப்பதற்கோ நமக்கு எந்த அதிகாரமும் இல்லை. ஆனால், இன்று மத உலகைப் பார்க்கும் போது, அந்த சபையை நாம் எப்படி அடையாளங் காண முடியும்?.

## நித்தியத்திலேயே அது திட்டமிடப்பட்டிருந்தது

பவுலைப் பொறுத்தவரை, சபையானது ஆதியிலேயே தேவனுடைய மனதில் இருந்தது (எபே. 3:10,11; கொலோ. 1:25). இதன் பொருள், இயேசுவால் கட்டப்பட்ட சபை, அவருடைய எண்ணத்தில் பின்பாக உதித்த ஒன்றோ அல்லது வருங்காலத்தில் வாய்ப்பிருந்தால் பார்க்கலாம் என்று இருந்த ஒன்றோ அல்ல. அது ராஜ்யத்திற்கான மாற்றாகவும் இருக்கவில்லை. மாறாக, அது பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்ட ராஜ்யமாக இருக்கிறது (தானியேல் 2:44; மத். 16:18,19) யோவான் ஸ்நானகன், பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள், வரையறுக்கப்பட்ட கட்டளையின் கீழ் அனுப்பப்பட்ட எழுபது பேர் மற்றும் " பரலோக ராஜ்யம் " சமீபத்திருக்கிறது என்று பிரசங்கித்த இயேசு போன்றோர் கள்ள தீர்க்கதரிசிகளாகி விட்டார்களா? இல்லையே! (மத். 3:12; 10:7; லூக். 10:1,9). தேவனால் அனுப்பப்பட்ட இந்த எண்பத்தி நான்கு பிரசங்கிகளையும் "ஒத்தி வைப்புக் கொள்கை" பொய்யராக்கு கிறது. ஆம், அது இவர்களை கள்ள தீர்க்கதரிசிகளாக்குகிறது.

## ஆரம்பத்தின் காலமும், இடமும்

தேவ ஆவியினால் ஏவப்பட்ட தீர்க்கதரிசன வாக்கியங்கள் சபை ஆரம்பிக்கப்படும் காலத்தையும், இடத்தையும் எருசலேமில் கடைசி நாட்கள் என்று குறிப்பிடுகின்றன (ஏசா. 2:1,3; லூக்கா 24:46,47). " கடைசி நாட்கள் " வேதாகமத்தில் இடம் பெற்றிருக்கும் கடைசிக் காலத்தைக் குறிக்கிறது (எபி. 1:1,2). இது அப்போஸ்தலர் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள பெந்தேகொஸ்தே நாளில் நிறை வேறியது. அந்த பெந்தெகொஸ்தே நாளுக்கு முன் சபையைப் பற்றிய தீர்க்க தரிசனங்களெல்லாம் அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தை முன்னோக்கித் தான் சுட்டிக் காட்டுகின்றன; அந்த நாளுக்குப் பிறகு, சபையைப் பற்றிய குறிப்புக ளெல்லாம் பெந்தேகொஸ்தே நாளின் ஆரம்பத்தை பின்னோக்கித் தான் சுட்டிக்காட்டுகின்றன (அப். 11:15). வேறொரு இடத்திலும், வேறொரு காலத்திலும் எதாவது சபை ஆரம்பிக்கப்பட்டிருந்தால் அது இயேசு கட்டின சபையாகாது.

## தெய்வீகப் பெயர்கள்

இயேசுவால் கட்டப்பட்ட சபைக்கு குறிப்பான பெயர் இல்லாவிட்டாலும், அந்தச் சபையை வேறுபடுத்திக்காட்ட தேவ ஆவியினால் ஏவப்பட்ட வேறு சில பெயர்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. சபை அங்கத்தினர்களுக்குத் தனிப் பட்ட ரீதியிலும், ஒட்டு மொத்தமாகவும் பல்வேறுப்பட்ட பெயர்கள் கொடுக்கப் பட்டுள்ளன. கூட்டாக அவர்கள் " *கிறிஸ்துவின் சபையார்* " (ரோமர் 16:16) *தேவனுடைய சபை* (2 தெச. 1:4), *பரிசுத்தவான்களின் சபை* (2 கொரி. 14:33) என்றழைக்கப்படுகிறார்கள். தனிப்பட்ட ரீதியில் அவர்கள் "கிறிஸ்தவர்கள்"

(அப். 11:26), "*பரிசுத்தவான்கள்*" (பிலிப். 1:1) அல்லது "*சகோதரர்*" என்றழைக் கப்படுகிறார்கள் (ரோமர் 12:1). இந்தப் பெயர்களெல்லாம் தெய்வீக ஆரம்பத்தை உடையவைகளாகவும், விசேஷித்த முக்கியத்துவம் பெற்றவைகளாகவும் இருக்கின்றன. இயேசுவால் கட்டப்பட்ட சபை இந்தத் தெய்வீகப் பெயர்களை மட்டும் தாங்கி வருகின்றன. புதிய ஏற்பாட்டால் அறியப்படாத பெயர்களை சபைக்கு வைக்கும் போது, அது இயேசு உத்தேசித்த சபையாக இல்லாமல் தெய்வீக மாதிரியிலிருந்து விலகிச் செல்கிற சபையாகத்தான் இருக்கும்.

## ஆளுகை அமைப்பு

புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டிருக்கிறபடி, ஒவ்வொரு சபையும் கிறிஸ்துவைத் தலையாகக் கொண்ட சுய ஆளுகையுடைய; சுயசார்புள்ள சபையாக இருக்கிறது (கொலோ. 1:18; எபே. 1:22,23). இதில் மறை மாவட்டம், மாவட்டம், பங்கு போன்ற ஆளுகை அமைப்புகளெல்லாம் இல்லை. இதில் சாமானிய மனிதனிடமிருந்து தன்னை வேறுபடுத்திக்காட்டுவதற்காக "மதகுரு" போன்ற உயர்ந்த பதவிகள் எல்லாம் இங்கு கிடையாது. கிறிஸ்து வின் சபை மூப்பர்கள், உதவிக்காரர்களால் முழுமையாக முறைப்படுத்தப் பட்ட உள்ளூர் சபையாக ஒவ்வொரு ஊரிலும் உள்ளது. ஒரு சபை விசுவாசத்திலிருந்து விழுந்து விட்டால், அதைப்பின்பற்றி மற்ற சபைகளும் விழுந்து போகாதபடி அதைத் தடுப்பதற்கு தெய்வீக ஞானம் இங்கு முழுமையாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. வேறொருவரைத் தலைவராகக் கொண்டு, மனிதனால் உண்டாக்கப்பட்ட ஆளுகையைக் கொண்ட எந்த ஒரு சபையும் இயேசு கட்டின சபையாகாது.

## இரட்சிப்பின் திட்டம்

இரட்சிக்கப்பட்டவர்களில் தனிப்பட்ட ஓர் அமைப்பாக இருக்கும்படி இயேசு தம்முடைய சபையைக் கட்டினார். பாவிகள் இரட்சிக்கப்பட்டு அவருடைய சபையில் சேர்க்கப்படும்படியான உபதேசக் கட்டளைகளைக் கொடுக்கும் படியாக தம்மால் ஏவப்பட்ட மனிதர்களுக்கு அங்கீகாரம் அளித்தார் (மாற். 16:15,16; மத். 28நு19,20; லூக். 24:46,49) இந்த நிபந்தனைகளை விதிக்கும் அதிகாரத்துடன் (மத். 16:19; 18:18), கிறிஸ்துவின் கட்டளைகளுக்கு அப்போஸ்தலர்கள் எப்படிக் கீழ்ப்படிந்தார்கள் என்று அப்போஸ்தலர் நடபடிகள் கூறுகிறது (அப். 2,8,9,10,16 அதிகாரங்கள்) இந்த அதிகாரங்களை நாம் கவனமாக வாசித்து முறையாக இணைத்துப் பார்த்தால், அவர்களெல்லாரும் ஒரே விதமான கட்டளைகளுக்குக் (விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கை செய்து, பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள்) கீழ்ப் படிந்தார்கள் என்பதைக் கற்றுக் கொள்ளலாம். அத்தோடு, கர்த்தரால்

அவருடைய சபையில் சேர்க்கப்பட்டார்கள் (அப். 2:47). இந்த தெய்வீகத் திட்டத்தைப் போதித்து, இதனை நடைமுறைப்படுத்த எந்த ஒரு சபையும் இயேசுவால் கட்டப்பட்டதல்ல.

### ஆராதனை முறைமை

கிறிஸ்து தாம் கட்டின சபையின் ஆராதனையை அங்கீகரித்தார் (யோவான் 4:24; கொலோ. 3:17). அந்த ஆராதனை சரியானவரை நோக்கி ஏறெடுக்கப்பட வேண்டும் (மத். 4:10; யோவான் 4:24; வெளி. 19:10), அந்த ஆராதனை தேவனால் அங்கீகரிக்கப்பட்ட வழிகள் மூலமாக ஏறெடுக்கப்பட வேண்டும் (அப். 2:42; கலா. 5:18,19; கொலோ. 3:16) இப்படிப்பட்ட ஆராதனையை ஏறெடுப்பவர்கள் தம்மை ஆராதிக்கிறவர்களாக இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் (யோவான் 4:23). தேவனுடைய வார்த்தைகளோடு கூட்டுபவர்களின் மீதும், குறைப்பவர்களின் மீதும், அல்லது அதற்குப் பதிலாக மனிதனால் அங்கீகரிக்கப்பட்ட கிரியைகளை அத்தோடு புகுத்துபவர்களின் மீதும் சாபங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன (கலா. 1:6,8; 1 கொரி. 4:6; 1 பேதுரு 4:11). எந்த ஒரு சபையாவது, சுவிசேஷத்தைப் போதிப்பதை விட, வாரந்தோறும் கர்த்தருடைய பந்தியில் பங்குபெருவிதை விட, காணிக்கைக் கொடுப்பதை விட, ஜெபிப்பதை விட இசை இல்லாமல் பாடல் பாடுவதை விடக் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செய்தால் அது இயேசு கட்டின சபை ஆக இருக்க முடியாது.

### முடிவுரை

இயேசு கட்டின சபையின் தெய்வீக அம்சத்தின் எந்த ஒரு காரியத்தின் மீதும் நம் அசுத்தமான கைகளை வைக்க நாம் துணிய வேண்டாம், குறிப்பாக, திரிப்பு, கலப்பு மாற்று அல்லது நீக்கு ஆகியவைகள் மூலமாக நம் அசுத்தமான கைகளை வைக்க நாம் துணிய வேண்டாம். அப்படிச் செய்வது பரலோக அதிகாரத்தை எதிர்த்து, அதற்கு கீழ்ப்படியாமல் இருப்பதும், சதா காலங்களிலும், சபையின் மூலமாக கிறிஸ்து பெற்றுக்கொள்ள வேண்டிய மகிமையைத் திருடுவதாகவும் இருக்கும் (எபேசியர் 3:21).

ஒரு கிறிஸ்தவன், சிலுவையை இழுத்துக் கொண்டுப் போவதை விட, அதை எடுத்துச் செல்வது சுலபமாயிருக்கும்.

# தேவனுடைய நித்திய நோக்கம்

## God's Eternal Purpose

*Clayton Popper*

**ப**ரலோகத்தைப் பற்றி நான் நினைக்கும் போது, அதன் அழகால் உருகி, வேதனை, துக்கம் மற்றும் மரணம் போன்றவைகள் ஒரு போதும் இல்லாத இடத்தை நினைத்து ஆச்சரியப்படுகிறேன்.

நரகத்தைப் பற்றி நான் நினைக்கும்போது, அந்த உபத்திரவ ஸ்தலத்தின் பயங்கரத்தை நினைத்து உறைந்து போகிறேன். அது புறம் பான இருளின் இடமாக இருக்கிறது. அங்கே நம்பிக்கை என்பதே இல்லை.

இவ்விரண்டு இடங்களுக் கிடையேயான கோடு சுவிசேஷத் தால் வரையப்படுகிறது. மேலும், சுவிசேஷம் மண்பாண்டத்தில் இருக் கிறது என்பதை உணரும் போது நான் பயப்படுகிறேன். மனிதர்களு டைய நித்திய முடிவு நம் கரங்களில் இருக்கிறது.

வேதாகமம் பல்வேறுப்பட்ட பாடங்களைக் குறித்த தகவல்களை உள்ளடக்கியது. இப்பொழுதிலி ருந்தே நாம் பிரசங்கிக்கவும், போதிக் கவும் விரும்பினால் அப்படிச் செய்ய லாம், அநேகமாக இழந்து போனவர் களைப் போய் சந்திப்பதைக் குறித்து கொஞ்சம் பேசலாம். அதேபோல் ஆத்தும ஆதாயம் செய்வதில் நம் தனிப்பட்ட பொறுப்பைப் பற்றி நாம் விரும்பினால் இப்பொழுதிலிருந்தே போதிக்கலாம். வேத வாக்கியங் களின்படி தேவனுடைய நித்திய நோக்கம் மனிதனுடைய மீட்பாயி ருக்கிறது. " தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத் தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும், அதிகாரங் களுக்கும் அவருடைய அநந்த ஞான மானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரிய வரும் பொருட்டாக, இயேசு கிறிஸ்துவைக் கொண்டு எல்லாவற்றையும் சிருஷ் டித்த தேவனுக்குள்ளே ஆதிக் காலங் கள் முதல் மறைந்திருந்த இரகசியத் தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (எபேசி. 3:9,11).

மனிதனை இரட்சிப்பதற்காக தேவனுடைய திட்டம் ஆதி. 3:15 லிருந்தே செயல்பட ஆரம்பமாகி விட்டது. கடைசியாக இயேசு யூதாக் கோத்திரத்தில் பிறந்தார். கிறிஸ்தவர் ஒவ்வொருவரும் சர்வவல்ல தேவன் ஆபிரகாமின் வித்தின்

மூலமாக வாக்களித்த ஆசீர் வாதத்தை அனுபவிக்கிறார். ஏசாயா இவ்விதமாக எழுதினார். "....சமுத்திரம் ஜலத்தினால் நிறைந் திருக்கிறது போல் பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந் திருக்கும்" (ஏசா. 11:9). *இதுதான் தேவனுடைய நம்பிக்கையாக, நோக்கமாக, திட்டமாக இருந்தது.* தேவனுக்கு தம்முடைய சபையைக் குறித்து மிகப்பெரிய எதிர்பார்ப்பு இருந்தது!

இந்த தீர்க்கதரிசனத்தை, இந்நாட்களில் தகவல் தொடர்பு பரிமாற்றத்தில் ஏற்பட்டிருக்கிற அபரித மான வளர்ச்சியின் காரணமாக முன்னெப்போதையும் விட இப்போது நிறைவேற்றுவது சுலபமானது என்று நம்புகிறேன். சில வருடங் களுக்கு முன்பு நாம் நினைத்தே பார்த்திராத காரியங்களை இன்று நம்மால் செய்ய முடிகிறது. ஏசாயா 2:2ல் சபையைக் குறித்து தேவனு டைய எதிர்பார்ப்பு விவரிக்கப் பட்டுள்ளது. " *கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலய மாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடி யில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடி வருவார்கள்* ".

இன்னும் இயேசுவின் பெயரைக் கேள்விப்பட்டிராத அநேக ஜனங்கள் இருக்கிறார்கள். அதே போல் சுவிசேஷத்தை அதன் தூயத் தன்மையில், அதன் எளியத் தன்மையில் ஒருபோதும் கேட்டிராத மக்களும் இருக்கத்தான் செய் கிறார்கள். ஆகவே, இந்த இரட்சிப்பின் செய்தியை நம்மால் முடிந்தவரை பலருக்கு எடுத்துச் செல்லும் பயங்கர மான பொறுப்பு நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது.

இயேசு பிறப்பதற்கு முன்பே அவரைப் பற்றி இவ்விதமாகச் சொல்லப்பட்டது. " *அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்* " (மத். 1:21). ஜனங்கள் அவசரமாக இரட்சிக்கப்பட வேண்டும் என்பதை நம் மனதில் நிலை நிற்க வைக்கிற காரியத்தில் நாம் முன்னேற வேண்டும் என்பது என்னுடைய ஆசையாயிருக்கிறது. நம்மைச் சுற்றிலுமுள்ள மக்கள் இழந்து போன நிலையில் இருக்கி றார்கள். அவர்களுக்கு இரட்சிப்பு தேவை என்பதைப் பற்றி நினைக்க நாம் எவ்வளவு நேரம் செலவிடுகி றோம்?


யாரோ ஒருவர் யோவான் 3:16யை *வேதாகமத்தின் தங்க வாக்கியம்* என்று மட்டும் விவரிக்கா மல், உலகத்தின் இழந்து போன ஆத்மாக்களுக்காக ஒளி வீசுகின்ற "தெய்வீக அன்பின் சுடர் " என்று விவரிக்கிறார். " *தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்* ". இது வேத வாக்கியங்களின் மிக முக்கியமான, விலையேறப்பெற்ற ஒன்றாக இருக்கிறது.

இயேசு வியாதியஸ்தர்களை சுகமாக்கினார், குருடர்கள் பார்வை யடையும்படி செய்தார். மரித்தவர் களை உயிரோடு எழுப்பினார், மாபெரும் பாடங்களைப் போதித்தார். ஆனால், லூக்கா 19:10ல் அவர் உண்மையாகவே இந்த உலகத் திற்கு வந்ததற்கான நோக்கத்தை வெளிப்படுத்துகிறார்; " *இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்க வுமே மனுஷ குமாரன் வந்திருக் கிறார்* " என்றார். இன்று சபையின் பணி என்னவென்பதை நாம் அறிய விரும்பினால், இயேசுவின் பணி என்னவாயிருந்தது என்பதை நாம் மறுபடியும் கண்டுபிடிக்க வேண்டும். அவருடைய பணி இழந்து போனதை இரட்சிப்பதாக இருந்தது!.

புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்களிலேயே இயேசு ஒருபோதும் அறியப்பட்டிராத உலகத் திற்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல் வதற்கு மிகவும் வல்லமை வாய்ந்த திட்டத்தை செயல்படுத்தத் தொடங்கி விட்டார். அவர் தம்முடைய அப்போஸ்தலர்களாயிருப்பதற்கு பன்னிரெண்டு மனிதர்களை அழைத்தார். அவர்கள் செய்யப் போகிற வேலைக்காக அவர்களுக் குப் பயிற்சி கொடுக்கும் போது, அவர் களோடு நெருக்கமான உறவை வைத்திருந்தார். அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாக, ஒப்புக் கொடுக்கப்பட்டவர்களாக, அர்ப்பணிப் புள்ளவர்களாக இருக்கவேண்டு மென்று வலியுறுத்தினார். அவர்கள் எவைகளை அறிய வேண்டுமென்று அவர் விரும்பினாரோ, அவர்கள் எப்படி யாக மாற வேண்டுமென்று அவர் விரும்பினாரோ அவைகளை அவர் அவர்களுக்குப் போதித் தார். மேலும் இயேசு தம்முடைய அப்போஸ்தலர் களுக்கு செயல்வழி முறையில் போதித்து, வேலை எப்படி செய்யப்பட வேண்டுமென்பதை அவர்களுக்குக் காட்டி, அவர்களுக்கு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்ந் தார். இயேசு அவர்களை வரை யறுக்கப்பட்டக் கட்டளையின் கீழ் நடைமுறைப் பயிற்சிக்காக அனுப்பி னார் (மத்தேயு 10). அவர் தெரிந்து கொண்ட இந்த மனிதர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக மூன்றரை வருடங்களை செலவழித்தார்.

> குறித்த காலத்தில் இயேசு பிறக்கவும்; சபை ஸ்தாபிக்கப்படவும்; தேவன் திட்டமிட்டிருந்த மாபெரும் இரட்சிப்பு எல்லோருக்கும் கிடைக்கவும் எல்லாக் காரியங்களையும் ஆயத்தப்படுத்துவதற்கு நான்காயிரம் ஆண்டுகள் ஆகியிருக்கிறது.

ஜனங்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து இரட்சிப்பதற்காக இயேசு சிலுவையில் மரித்து ஒன்றன் பின் ஒன்றாக நடந்த சம்பவத் தொகுப்பின் கடைசி செயலாகும். அவர் மனிதர்களுக்குப் பதிலாக மரித்து, மனிதர்கள் தங்கள் பாவங் களுக்காக பெற்றுக்கொள்ள வேண்டிய தண்டனையை ஏற்றுக் கொண்டார். அதன் பின்பு அவர் மரணத்திலி ருந்து உயிர்த்தெழுந்தார். கிறிஸ்து



மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்தார். கிறிஸ்து மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த் தெழுந்தார் என்னும் மகிமையான நற்செய்தியே சுவிசேஷமாகும் (1 கொரி. 15:1,4).

நாற்பது நாட்களுக்குப் பிறகு, அவரைச் சுற்றிலும் அப்போஸ் தலர்கள் சூழ்ந்து கொண்டிருக்கும் போது, நாம் அடிக்கடி குறிப்பிடுகிற பிரதானக் கட்டளையைக் கொடுத் தார். மாற்கு இவ்விதமாகச் சொல் கிறார். "*அவர் அவர்களை நோக்கி; நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங் கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக் கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படுவான்* " (மாற்கு 16:15,16).

மத்தேயு சற்று வித்தியாசமாகச் சொல் கிறார். "*ஆகையால், நீங்கள் புறப் பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள் ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கி றேன்* " (மத். 28:18,20).

மூன்று காரியங்கள் :

போய் உபதேசம் பண்ணுங்கள்

ஞானஸ்நானங்கொடுங்கள்

யாவையும் கைக்கொள்ளும்படி உபதேசம் பண்ணுங்கள்.

மேற்சொல்லப்பட்ட கட்டளை யில் சீஷர்களுக்கு அவைகளில் ஒன்றைத் தெரிந்துகொள்ளும் உரிமை உண்டு என்று இயேசு அங்கே சொல்லவில்லை. " போய் உபதேசம் பண்ணுங்கள்" ஒரு சரியான மொழியாக்கம் " போய் சீஷராக்குங்கள் " என்று சொல்கிறது.

யாரோ ஒருவர் ஒருமுறை இவ்விதமாகச் சொன்னார். " பத்துக் கட்டளைகள் பத்து ஆலோசனை களாக கருதப்படுகிறது ". எத்தனை கிறிஸ்தவர்கள் பிரதான கட்டளைக் குக் கீழ்ப்படியலாம் அல்லது அதை கண்டு கொள்ளாமல் விட்டுவிடலாம் என்பது போல் நினைக்கிறார்கள்! கர்த்தருடைய ஜனங்களாக நாம் அந்த பிரதான கட்டளைக்குக் கீழ்ப்

படியும் படியான நம்முடைய பொறுப்புப் பற்றி ஜாக்கிரதையுடைய வர்களாக இருக்க வேண்டும்.

தாலந்துகளின் உவமை பிரதான கட்டளைக்கு இணை யானது என்று நான் நம்புகிறேன், ஏனென்றால், அது பரலோக ராஜ்யத்தை தூரதேசத்திற்கு பிரயாணம் பண்ணுகிற ஒரு மனித னாக விவரிக்கிறது. அந்த மனிதன் தன் வேலைக்காரர்களை அழைத்து தன் உடைமைகளை அவர்களிடத் தில் ஒப்படைத்து விட்டு தூரத்தேசத் திற்கு பயணிக்கிறான் (மத். 25:14, 30). அந்த மனிதன் இயேசுவை அடையாளப்படுத்துகிறார். அந்த மனிதன் யாரிடத்தில் தன்னுடைய உடைமைகளை ஒப்புக்கொடுத் தாரோ அந்த வேலைக்காரர்கள் நாமாக இருக்கிறோம். நாம் சுவிசேஷத்தைப் பரப்பும்படியாக கட்டளை பெற்றிருக்கும் மண் பாண்டங்களாயிருக்கிறோம்.

தாலந்துகளின் உவமையில் அந்த எஜமான் ஒரு மனிதனுக்கு ஐந்து தாலந்துகளையும் இன்னொரு வனுக்கு இரண்டு தாலந்துகளை யும், மற்றொருவனுக்கு ஒரு தாலந்தையும் கொடுத்துவிட்டு தூரத் தேசத்திற்கு பயணம் செய்ததாக நாம் வாசிக்கிறோம். சில காலம் கழித்து அந்த எஜமான் திரும்பி வந்து வேலைக்காரர்களிடத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்ட காரியங்களைக் குறித்து அவர்களிடத்தில் கணக்குக் கேட்டான். அந்த ஒரு தாலந்து பெற்றவனைத் தவிர எல்லோரும் தங்கள் தாலந்துகளை இரட்டிப்பாக் கினார்கள். ஆனால், அவனோ தனக்குக் கொடுக்கப்பட்ட தாலந்து களை மண்ணுக்குள் புதைத்து வைத்தான்.

கடைசி நாளில் எஜமான், தங்களிடத்தில் எவைகள் ஒப்படைக் கப்பட்டதோ அவைகளை பெருக்கின வர்களை வெகுவாக மெச்சினார். அதே நேரத்தில் பயந்த அந்த ஒரு தாலந்தைப் பெற்றவனை கடுமை யாகக் கடிந்து கொள்ளுகிறார். எத்தனை முறை நீங்கள் பயத்தின் காரணமாக தேவனுக்காக செய்ய வேண்டிய காரியங்களைச் செய்ய மறுத்திருக்கிறீர்கள்? பயத்தால் கட்டுப்படுத்தப்படுவதென்பது மிக அபாயகரமான ஒன்றாகும். (வெளி. 21:8) பயப்படுகிறவர்கள் இழந்து போவார்கள் என்று சொல்கிறது.

ஒரு தாலந்தைப் பெற்றவன், "*நான் பயந்து போய்*" என்று சொன்னான், அதற்கு எஜமான் "*பொல்லாதவனும் சோம்பலுமான ஊழியக் காரனே* " என்று சொல்லி (மத். 25:26) " *பிரயோஜனமற்ற ஊழியக்காரனாகிய இவனைப் புறம்பான இருளிலே தள்ளிப் போடுங்கள்; அங்கே அழுகையும், பற்கடிப்பும் உண்டாயிருக்கும்* " என்றான் (25:30). இது தங்கள் கைகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டி ருக்கிற சுவிசேஷத்தை உலக முழு வதிற்கும் பகிர்ந்து கொடுக்கும்படியாக அதை எடுத்துச் செல்லாத மக்களை தேவன் எப்படி நடத்துவார் என்ப தைப் பற்றிய முன்னெச்சரிக்கை என்று நான் நம்புகிறேன்.

பெரும்பாலும் நாம் மாம்சத்தின் கிரியைகளில் ஈடுபடாமல் இருப்பதே ஒரு கிறிஸ்தவனின் முதன்மையான அளவு என்று நினைக்கிறோம். ஆனால், உண்மையுள்ளவர்களாயிருப்பதற்குப் பாவத்தைத் தவிர்ப்பதை விட இன்னும் தேவனுக்கு அதிகமாகச் செய்ய வேண்டியதாயிருக்கிறது. நாம் செய்யும்படியாக தேவன் நமக்குக் கட்டளையிட்டிருப்பவைகளை நாம் கண்டு கொள்ளாமல் இருந்தால் நமக்கு தண்டனை இல்லாமல் போகுமோ? மௌன கீழ்ப்படியாமைக்கு தேவன் மன்னிப்பளிப்பாரோ?

2 தீமோத். 2:2ல் பவுல் தேவனுடைய திட்டத்தை தீமோத்தேயுவுக்கு அறிவிக்கிறார். "*அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்கதாக உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி*". அது உலகத்திற்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்வதற்கு தேவனுடைய திட்டமாயிருந்தது. இது மனமாற்றமடைந்தவர்கள் மற்றவர்களுக்குப் போதித்து அவர்களை மனமாற்றமடையச் செய்யத்தக்கதாக அவர்களுடைய வேலையாக மாற வேண்டும். தேவச் செய்தியானது கேட்பவர்களுடைய இருதயத்திலேயே இருந்து விடக்கூடாது. அது பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும், கனி கொடுக்க வேண்டும்.

இழந்துபோன ஆத்துமாக்கள் சில வேளைகளில் தியாகக் களத்தில் ஆதாயப்படுத்தப்படுகிறார்கள். இருந்த போதிலும், தேவன் கிறிஸ்தவர்களை இந்த உலகத்தில் விட்டுச் சென்றதற்கான காரணமே ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதற்குத் தான். இதை நாம் உணர்ந்து, இழந்து போனவர்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்வது என்னும் பிரதான கட்டளைக்கு நம்மை நாம் ஒப்புக்கொடுப்போம்.

பவுல் தெசலோனிக்கே பட்டணத்து கிறிஸ்தவர்களிடம் இவ்விதமாகச் சொன்னார். " எப்படியெனில், உங்களிடத்திலிருந்து கர்த்தருடைய வசனம் மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் தொனித்ததுமல்லாமல், நாங்கள் அதைக் குறித்தும் ஒன்றும் சொல்ல வேண்டியதாயிராதபடிக்கு, தேவனைப் பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமா யிற்று" (1 தெச. 1:8).

சபையில் நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும் தேவனுடைய நித்திய நோக்கமாகிய ஆத்தும ஆதாயத்தை பிரதிபலிக்க வேண்டும்.

ஆனால், இன்று சபையில் நம் வளங்களின் பயன்பாடு இந்த நோக்கத்தை பிரதிபலிப்பதாக இல்லை. நம் பிரசங்கம், நம் கல்வித் திட்டங்கள், இன்னும் நம் பல்வேறு நிகழ்ச்சிகளெல்லாம் இப்போது இருக்கின்ற காரியங்களின் நிலையை தக்க வைத்துக் கொள்ளும் விதத்திலேயே வடிவமைக்கப்பட்டிருக்கிறது. நமக்கு பயிற்சி கொடுத்து, நம்மை ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிறவர்களாக ஊக்கப்படுத்தும் வகையில் அமையவில்லை. ❊

# வளருகின்ற சபையின் குணாதிசயங்கள்

# CHARACTERISTICS OF A GROWING CHURCH

*Clarence Deloach, Jr.*

சபை வளர்ச்சி சம்மந்தமாக ஏராளமான புத்தகங்கள் எழுதப் பட்டுள்ளன. அந்தப் புத்தகங்களில் வேத வாக்கியங்களோடு ஒத்துப் போகாத சில கருத்துக்கள் இருந் தாலும் பல பிரயோஜனமுள்ள கருத்துக்கள் இடம் பெற்றிருக் கின்றன. Dr.Win Ann என்பவர் இப்படி ஒரு புத்தகத்தை எழுதியிருக்கிறார். அதில் ஓர் அதிகாரத்தில் அப்போஸ் தலர் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கும் அந்தியோகியா சபையை மையமாக வைத்து வளருகின்ற சபை என்கிற தலைப்பில் அவர் எழுதியிருக்கிற கருத்துக்கள் உடலுக்குள் ஊடுருவி தாக்கத்தை ஏற்படுத்து கின்றன. அத்தகைய குணாதிசயங்களில் சிலவற்றை நாம் காண்போம்.

**முதலாவது, ஆராதனைக்கு உறுதியான அர்ப்பணிப்பு**

சபை வளர்ச்சிக்கு சபை கூடி வருதல் அவசியமாயிருக்கிறது. ஆராதனை நேரங்கள் துதி மற்றும் மகிழ்ச்சியின் தருணங்களாக இருக்க வேண்டும். ஆராதனை நேரங்கள் உயிரற்ற, உணர்வற்ற, வழக்கமான ஒன்றாக இருக்குமானால் அதினால் ஆத்துமாக்கள் ஆதாயம் செய்யப்பட மாட்டார்கள். ஆராதனைக்குத் திட்ட மிடுதலும், ஆயத்தமும் அவசியமா கிறது. அது தேவனை மையப் படுத்த வேண்டும்! அதன் விளைவாக நமக்குள் ஐக்கியம் ஏற்படுகிறது. நமது அன்பு பலப்படுத்தப்படுகிறது. ஆராதனையில் ஜெபம், கர்த்தரு டைய பந்தி, பாடல், காணிக்கை மற்றும் போதனை போன்றவைகள் உற்சாகத்தோடும், பக்தி வைராக்கி யத்தோடும் இடம் பெற வேண்டும்.

**இரண்டாவது, ஆத்தும ஆதாயத்துக்கு உறுதியான அர்ப்பணிப்பு**

அப்போஸ்தலர்கள் செயல் படாமல் இருக்கவில்லை. அவர்கள் உலகம் தங்களை நாடி வரவேண்டு மென்று காத்திருக்கவில்லை. அவர்கள் செயல்பட்டார்கள், உலகத்தை எதிர் கொள்ளத் துணிந்தார்கள். நாமும் அவ்விதமாக இருக்க வேண்டும்! அவர்கள் தனிப்பட்ட முறையில் மக்களோடு தொடர்பு கொண்டார்கள். கிறிஸ்துவின் ஆசீர்வாதங்களை ஜனங்களுடைய வாழ்க்கையில் திருப்பிவிட வேண்டுமென்றால் ஜனங்களோடு நெருக்க மான உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தனிப்பட்ட முறையில் மக்களோடு தொடர்பு கொள்வதற்கு ஈடு இணையில்லை.

**மூன்றாவது, பரிசுத்தவான்கள் பக்தி விருத்தி அடைவதற்கு உறுதியான அர்ப்பணிப்பு**

கிறிஸ்துவின் சரீரத்தில் ஒவ்வொருவரும் அன்பையும், வரவேற்பையும் பெற்றுக் கொண்டார்கள். வாழ்க்கையின் எல்லா நிலைகளிலிருந்தும் அவர்கள் மன மாற்றமடைந்து வந்தார்கள். ஆனால், கிறிஸ்துவுக்குள் எல்லோரும் ஒன்றாயிருந்தார்கள். அந்த சூழ் நிலையில் அவர்கள் பக்தி விருத்தி அடைந்தார்கள். அவர்கள் சபை கூடி வந்ததற்கான முக்கிய நோக்கம் பக்தி விருத்தியை உண்டாக்குவதாக இருந்தது. பக்தி விருத்தியை உண்டாக்கும் வசனப் பகுதிகளைக் கவனியுங்கள் (ரோமர் 14:19; 1 கொரி. 8:1; 1 கொரி. 14:17; எபே. 12,16).

**நான்காவது, ஜனங்களிடத்தில் உறுதியான அர்ப்பணிப்பு**

இயேசு "சபை" என்கிற வார்த்தையை உச்சரித்த போதெல்லாம் மக்களை மனதில் கொண்டே அவ்விதமாக உச்சரித்தார். மக்கள் மக்களுக்காக ஊழியம் செய்வது தான் சபை. அந்தியோகியா சபையில் அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் அர்ப்பணிப்புள்ளவர்களாக, கனப் படுத்துகிறவர்களாக, கீழ்ப்படிகிறவர் களாக இருந்தார்கள் (ரோமர் 12:5,10; 15:5,14; எபே. 5:20,21). இயேசு மக்களை நேரில் போய் சந்தித்து அவர்களை இரட்சித்தார். நாமும் அவ்விதமாகவே செய்ய வேண்டும்!.


**ஐந்தாவது தியாகத்திலும், உண்மையிலும் உறுதியான அர்ப்பணிப்பு**

அவர்கள் தங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்தார். அவர்கள் தன்னைத்தான் வெறுத்து, சிலுவையை எடுப்பதன் பொருளை கற்றுக் கொண்டார்கள் (ரோமர் 12:1; மத். 16:26). அவர்களுடைய விசுவாசமும், உறுதித் தன்மையும் கிறிஸ்துவுக்குள் அவர்கள் வெற்றி சிறக்க வழி வகுத்தது (ரோமர் 8:37).

நம் வளர்ச்சியின் மாதிரி எண்ணத்திலும், கருத்திலும் எப்போதும் வேத வசனங்களின் அடிப்படையிலும் இருப்பதாக! ※

## கிறிஸ்தவத்தை எப்படி வெளிப்படுத்துவது?

| | |
|---|---|
| வீட்டில் | – அன்பினாலும், தன்னலமற்ற தன்மையாலும் |
| தொழிலில் | – நேர்மையினாலும், கடும் உழைப்பினாலும் |
| சமுதாயத்தில் | – நல்லொழுக்கத்தினாலும், பணிவினாலும் |
| ஆதரவற்றோரிடத்தில் | – பொறுமையினாலும், உதவியினாலும் |
| துன்மார்க்கரிடத்தில் | – தீமையை மேற்கொள்வதினாலும் |
| தேவனிடத்தில் | – பயபக்தியினாலும், கீழ்ப்படிதலினாலும் |



# வண்டிக்கு இடமில்லையே

## No Place For a Wagon

***Frank Chesser***

அடிமைத்தனத்திலிருந்து இப்பொழுது தான் விடுதலையாகி யிருந்தாலும் எகிப்தின் அடிமைத் தனம் இப்போது கடந்து போன ஒன்றாகி விட்டது. வெறும் மூன்று வாரங்களில் சீனாய் மலையில் அவர்கள் ஒரு வருட காலம் தங்கியி ருந்தது முடிந்து போய், இஸ்ர வேலர்கள் கானானை நோக்கி பயணித்தார்கள். தேவன் ஆபிரகாமுக்கு செய்த வாக்குத்தத்தம் விரைவில் நிறைவேறப் போகிற படியால் அந்த எதிர்பார்ப்பில் இஸ்ரவேல் தேசத்தாருடைய இருதயங்கள் எழுச்சியைக் கண்டி ருக்கும் (ஆதி. 12:7).

லேவியின் மூன்று குமாரரும் ஆசரிப்புக்கூடாரம், அதன் பணி முட்டுகள் மற்றும் அதோடு சம்மந்த மான தட்டு முட்டுகள் எவ்விதமாக பயன்படுத்தப்பட வேண்டும் என்பது போன்றவைகளில் தங்களை ஈடுபடுத்தி வந்தார்கள். கெர்சோன் புத்திரர் ஆசாரிப்புக் கூடாரத்துக்குரிய தொங்கு திரை மற்றும் அதன் மூடி போன்ற காரியங்களுக்குப் பொறுப்பாளிகளாக இருந்தார்கள். மெராரி புத்திரர் வாசஸ்தலத்தின் பலகைகள், தாழ்ப்பாள்கள், தூண்கள் ஆகியவற்றுக்குப் பொறுப்பாளிகளாக இருந்தார்கள். கோகாத் புத்திரர் மரச்சாமான் களுக்குப் பொறுப்பாளிகளாக இருந்தார்கள். அவைகளுள் உடன்படிக்கை பெட்டி முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது (எண்.4).

ஆசரிப்புக் கூடாரத்தை கொண்டு போவதற்காக ஆறு வண்டிகள் ஒதுக்கி வைக்கப் பட்டிருந்தன. கெர்சோன் புத்திரர் இரண்டு வண்டிகளையும், மெராரியின் புத்திரர் நான்கு வண்டிகளையும் பெற்றார்கள். "

*கோகாத்தின் புத்திரருக்கோ ஒன்றும் கொடுக்கவில்லை; தோள்மேல் சுமப்பதே அவர்களுக் குரிய பரிசுத்த ஸ்தலத்தின் வேலையாயிருந்தது* " (எண். 7:9). கோகாத்தின் புத்திரருடைய வேலையில் வண்டிக்கு வேலையில்லாமல் இருந்தது. அவர்களுடைய வேலை தோள்களில் சுமப்பதே.

இப்போது ஆசாரியர்கள் மற்றும் நியாயதிபதிகளின் காலம் கடந்து விட்டது. இஸ்ரவேல் சவுல் மற்றும் தாவீதால் அரசாளப்பட்டது. இந்த மாற்றங்களின்போது உடன்படிக்கைப் பெட்டியானது கூடாரத்திலிருந்து எழுபது வருடங்கள் பிரிக்கப்பட்டிருந்தது. தாவீது ராஜா தேவனுடைய பிரசன்னத்தின் இந்த அடையாளச் சின்னத்தை மீட்டு மறுபடியும் அந்த இடத்தில் வைக்க ஆசையாயிருந்தார். ஆனால், சோககரமாக உடன்படிக்கைப் பெட்டியை சுமந்து செல்வதற்கு மாட்டு வண்டியை ஏற்பாடு செய்யும் முடிவை எடுத்தார். அந்தத் தவறு ஊசாவின் மரணத்திற்கு வழி வகுத்தது (2 சாமு. 6:1,7). பின்பு தாவீது, " ....*நாம் நம்முடைய தேவனாகிய கர்த்தரை நியாயமானபடியே தேடாதே போனபடியினாலும், அவர் நமக்குள்ளே அடி விழப்பண்ணினார்* " என்று ஒத்துக்கொள்கிறார் (1 நாளா 15:13).

மெய்யான ஆராதனைக்குப் பாத்திரர் தேவன் ஒருவரே. அவருடைய நாமத்துக்குச் செலுத்தப்படும் மரியாதை, அவருடைய எதிர் பார்ப்பின்படி இருக்க வேண்டும். தேவனுக்குப் பாடல்கள் விருப்பம், ஆனால், இசைக் கருவிகளுடன் கூடிய இசை தேவை இல்லை (கொலோ. 3:16); தேவனுக்குத் தேவை நம் இருதயந்தான், இயந்திரமல்ல; அவரால் நமக்கு தரப்பட்ட குரல் தான் அவருக்குத் தேவை, மனிதனால் வடிவமைக்கப்பட்ட கருவியல்ல. இத்தகைய மனித செயல்பாடுகள் ஆராதனையை தேவன் ஏற்றுக் கொள்வதைத் தடை செய்கிறது. மேலும், வீணான ஆராதனையை ஏறெடுக்க வழி வகுக்கிறது (மத். 15:9).

தேவனுடைய ஆராதனை மாதிரியில் இயந்திரங்களுக்கு இடமே இல்லை. இசை என்கிற காரியத்தில் தேவனுடைய விருப்பம் பாடல் மட்டும் தான். நம்முடைய ஆராதனை இருதயம் சம்பந்தப்பட்டதாயிருக்கிறது (எபே. 5:19). பாடலில் குரல்களை ஒன்றிணைப்பது தான் முறையானதும், ஒழுங்கானதுமாயிருக்கிறது. தேவனுடைய சித்தத்திற்கு எதிரான தேவனுடைய சித்தத்திற்கு எதிரான மனிதனுடைய விருப்பமென்னும் வண்டியில் ஏற்றி விடப்படும் இசைக் கருவிகளிலான இசையை, அதனடிப்படையிலான ஆராதனையை தேவன் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளமாட்டார். ❀

# ஆராதனையின் மதிப்பு

## The Worth of Worship

***Bill Dillon***

**ஆ**ராதனை என்பது கிறிஸ்தவனுடைய ஆவிக்குரிய பெலனாயிருக்கிறது. சரீரத்திற்கு ஆகாரம் எப்படியோ அப்படியே ஆத்துமாவுக்கு ஆராதனை இருக்கிறது. நாம் தேவனுக்குத் துதிகளைச் செலுத்தும்போது உயரிய நோக்கங்களுக்காகவும், பரிசுத்த காரியங்களுக்காகவும் புதுப்பிக்கப்படுகிறோம், மறு அர்ப்பணம் செய்யப்படுகிறோம். ஆராதனை வருங்காலங்களில் நமக்கு விரோதமாக வரும் தீங்குகளிலிருந்து நம்மைக் காக்கிறது.

நம்முடைய அனுதின கடினமான வாழ்க்கையில் நம்மைத் தாண்டி ஒரு பெலனைப் பெற்றுக் கொள்ள ஆராதனை வழி செய்கிறது. ஆராதனை தேவனுடைய மகிமையையும், மாட்சிமையையும் நம் கண்களுக்கு முன்பாகக் கொண்டு வந்து நம்மை நாம் தாழ்த்தும்படி செய்கிறது. ஆராதனை நம் வாழ்க்கையை சரியான கோணத்தில் காணச் செய்து அற்பமான காரியங்களில் நாம் அழிந்து போகாமல் நம்மை இரட்சிக்கிறது அல்லது காப்பாற்றுகிறது.

ஆராதனையில் கலந்து கொள்ளும் சிலாக்கியத்தின் மதிப்பை உணர்த்தும் வகையில் நம் உள்ளத்தை உருக்கும் உண்மைச் சம்பவம் ஒன்று சொல்லப்படுகிறது. விபத்து ஒன்றில் தன் மூத்த மகனை பறிகொடுத்த தகப்பன் துக்கத்தில் மூழ்கிப்போயிருந்தார். ஈமச் சடங்குகள் எல்லாம் முடிந்து விட்டன. இறந்துபோன அந்த பையனுடைய இரண்டு இளைய சகோதரர்கள் இருதயம் உடைந்துபோன பெற்றோர்களுடன் இருந்தார்கள். அவர்களும் அந்தத் துயர சம்பவத்தினால் பெற்றோர்களுக்கு இணையாகக் கதறினார்கள். அந்தச் சோகச் சம்பவம் நடந்த அந்த வாரத்தில், அதைத் தொடர்ந்து வந்த ஞாயிற்றுக் கிழமையில் அந்த குடும்பத்தினர் தான் சபை கூடி வரும்படி முதலில் சபைக் கட்டிடத்திற்கு வந்தார்கள். அவர்களுடைய முகங்களில் அவர்கள் கடந்து வந்த ஆழ்ந்த துக்கத்தின் நிழலும், அறிகுறிகளும் தெரிந்தன. ஆனால், அந்தத் தகப்பன் இவ்விதமாகச் சொன்னார். *"நாங்கள் இங்கே இருக்கிறோம் ஏனென்றால் இதை விட சிறந்த*

*இடத்தை எங்களால் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை*".

அந்தத் தகப்பன் சரியாகத் தான் சொன்னார். நாம் தேவனுடைய பாதத்தில் துக்கமென்னும் பாரத்தையும், எல்லா பிரச்சனைகளையும் ஆராதனை வேளையில் வைக்கும்போது அது நமக்கு ஆறுதலைத் தருகிறது!.

வாரத்தின் முதல் நாளில் நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்பது கர்த்தருடைய உயிர்த்தெழுதலையும், மரணத்தின் மீது அவர் கொண்ட வெற்றியையும் நினைவு கூருவதாக இருக்கிறது. பாவமும், துக்கமும், கல்லறையும் கர்த்தருடைய ஜெயத்தின் பிரகாசத்திலும், மகிமையிலும் தோற்கடிக்கப்படுகின்றன. இந்த ஓர் உண்மை மட்டுமே இப்பூமியிலுள்ள எல்லாக் கண்ணீரையும் வற்றச் செய்வதற்கு போதுமானது!

## ஆராதனை

**ஆராதனை என்பது, சரியான நேரத்தில் சரியான இடத்தில் இருப்பதைக் காட்டிலும் அதிகமானது.**

**ஆதரானை என்பது சரியானதொரு நிலை மற்றும் உணர்ச்சி என்பதைக் காட்டிலும் மேலானது.**

**ஆராதனை என்பது தேவன் ஏற்றுக் கொள்ளும்படியாக ஓர் அனுபவத்திற்குள்ளாக மனப்பூர்வமாகப் பிரவேசிப்பதாகும்.**

# வேறுசில பாக்கியவான்கள்

## The Other Beatitudes

*Robert Brooks*

மத்தேயு 5:1,11 வசனங்கள் "பாக்கியவான்கள்" பட்டியல் என்றழைக்கப் படுகிறது. பாக்கியமான நிலை அல்லது சந்தோஷம் என்பது அடிப்படையாகவே ஒருவருடைய மனநிலையைப் பொறுத்த ஒரு விஷயமாகும்.

இயேசு ஒருபோதும் தம்மை பின்பற்றுபவர்களுக்கு "ரோஜா தோட்டத்தை வாக்குத்தத்தம் செய்யவில்லை". மறுபடியும் மறுபடியும் அவர் அவர்களுடைய பாடுகள், சோதனை, துக்கம், மற்றும் மரணம் பற்றி எச்சரித்தார். ஆனால், இயேசு, ஒருவர் ராஜ்யத்தின் நிமித்தம் இப்படிப்பட்ட காரியங்களை சகிக்கும் போது உண்மையான மகிழ்ச்சி ஏற்படும் என்றார். அந்த ராஜ்யம் தான் சபையாக இருக்கிறது.

மேலும், வெளிப்படுத்தின விசேஷத்தில் இடம் பெற்றுள்ள பாக்கிய வான்கள் பட்டியலை இங்கே தொகுக்க ஆசைப்படுகிறேன். இது தேவன் காரியங்களை எப்படிப் பார்க்கிறார் என்பதை நாம் அறிந்து கொள்ள உதவும்.

வெளிப்படுத்தின விசேஷத்தில் ஏழுமுறை "பாக்கியவான்கள்" பட்டியல் வருகிறது. அவைகளாவன :

1. "இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கிய வான்கள், காலம் சமீபமாயிருக்கிறது" (1:3)
2. "கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள் என்றெழுது : அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம் (14:13)
3. "தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக் கொண்டு தன் வஸ்திரங்களைக் காத்துக் கொள்ளுகிறவன் பாக்கியவான்" (16:15)
4. "ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள்" (19:19).

5. முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான் (20:6). முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவர்கள் நான்காம் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற ஆத்துமாக்களாயிருக்கிறார்கள். இரண்டாம் மரணம் என்பது அக்கினிக் கடலில் தள்ளப்பட்டவர்களுக்கானது (20:14). தவறாக வாழ்ந்து சரியாக சாவதற்கு வழியே இல்லை. வேதப் புத்தகத்தின்படி நாம் வாழும் போது தான் சரியாக வாழ்கிறோம்.

6. " இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான் " (22:7).

7. "அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்" (22: 14)

## கிறிஸ்துவின் இரத்தம் அவசியமா?

பெரும்பாலும் மக்கள், " நான் நல்லவனாக இருந்தால், மற்றவர்களை நான் நன்றாக நடத்தினால், அது போதுமானது. நான் குறிப்பிட்ட எந்த ஒரு மதத்தையும் பின்பற்ற வேண்டியதில்லை என்று ஒரு முடிவுக்கு வருகிறார்கள். ஆனால், வேத வாக்கியங்கள் வேறுவிதமாகச் சொல்கின்றன; " *நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது* " (எபி. 9:22).

"*இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது* " (எபே. 1:7; வெளி. 1:5) கிறிஸ்துவின் ஐசுவரியமுள்ள கிருபையை அறிவிக்கிறது. "*நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களை நம்மைக் கழுவி* " என்று கூறுகிறது.

கிறிஸ்துவின் இரத்தம் அவசியமாயிருக்கிறதா? ஆம், " *அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்* " (1 யோவான் 1:7). பாவத்தின் ஒரு துளியை கூட அகற்றுவதற்கு நமக்கு அருகதை இல்லை. கிறிஸ்துவின் இரத்தத்தின் பூரணம் மாத்திரமே அதைச் செய்ய முடியும்.

# கிறிஸ்தவர்கள் வித்தியாசமானவர்கள்

# Christians are Different

*Tex William*

இயேசு தொடர்ந்து தம்முடைய போதனைகளைக் கேட்டவர்களை ஆச்சரியப்படுத்தினார். அவர் போதித்தவைகளும், அவர் தம்மைப் பின்பற்று பவர்களிடமிருந்தும் எதிர்பார்த்தவைகளும் அவர்கள் இதற்கு முன்பு கேட்ட உபதேசங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டவைகளாயிருந்தன. உதாரணமாக, யாக்கோபும், யோவானும் இயேசுவின் மகிமையிலே அவருடைய வலது பாரிசத்திலும், இடது பாரிசத்திலும் உட்காரும் சிலாக்கியம் தங்களுக்குத் தரப்பட வேண்டுமென்று கேட்டார்கள். அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தின் தன்மையைப் புரிந்து கொள்ளவில்லை. அதற்கு இயேசுவின் பதில் "*உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்*" என்று இருந்தது (மாற்கு 10:43). ஒருவர் கிறிஸ்தவனாகும்போது, முற்றிலும் வித்தியாசமான ஆவியை, மனநிலையை, வாழ்க்கை முறையை ஏற்றுக் கொண்டு அதில் மேம்படுகிறார்.

உண்மையாக, கிறிஸ்தவனின் சிந்திக்கும் முறையும், வாழ்க்கை முறையும் பெரும்பாலான மக்களின் சிந்திக்கும் முறையோடும், வாழ்க்கை முறை யோடும் ஒத்துப் போகிறதில்லை. அது அசாதாரணமானது, புரட்சிகரமானது, புதுமையானது இருந்தபோதிலும் கிறிஸ்தவர்கள் வாழ்க்கையின் இந்த புதிய முறைகளை ஏற்றுக்கொள்கிறார்கள். ஏனென்றால், அவைகள் உண்மைகள் என்பதில் அவர்கள் உறுதியான நம்பிக்கை உடையவர்களாயிருக்கிறார்கள். பல வேளைகளில் புதிய வாழ்க்கை முறைகள் ஒரு கிறிஸ்தவனுடைய ஆசைகளுக்கும், விருப்பங்களுக்கும் முற்றிலும் வேறுபட்டதாயிருக்கும். ஆனாலும், எப்படியோ அந்த கிறிஸ்தவன் அவைகளை தன்னுடைய வாழ்க்கையில் சேர்த்துக்கொள்கிறான். கிறிஸ்தவர்கள் இவ்வுலகத்தின் நடத்தை முறைகளை, வாழ்க்கை முறைகளை, ஒழுக்க நெறிகளை அவைகள் சிறந்ததாக இருந்தாலும் அவைகள் மேல் நம்பிக்கை வைக்காமல் இருக்கக் கற்றுக் கொள்கிறார்கள்.

ஒருவர் கிறிஸ்தவராகும் போது, அவர் தன்னுடைய வாழ்க்கையில் தேவையில்லாதவைகளை சேர்த்துக்கொள்வதில்லை. இந்தப் புதிய கிறிஸ்தவ முறைக்கு முழுமையான புரட்சி

அவசியப்படுகிறது. இதை இயேசு "மறுபிறவி" என்றழைக்கிறார். எனவே தான், " *பவுல் ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின* " என்று சொல்கிறார் (2 கொரி. 5:17).

வேதாகமம் இவ்வுலகில் இரண்டு ராஜ்ஜியங்கள் இருப்பதாக போதிக்கிறது. ஒன்றில் பிசாசும் அவனுடைய வழிகளும் பின்பற்றப் படுகின்றன. மற்றொன்றில், இயேசு கிறிஸ்து ஜீவாதிபதியாக இருக்கிறார். அவரைப் பின்பற்றுபவர்கள் அவருடைய வழிகளுக்கு இசைவான வாழ்க்கையை வாழ்கிறார்கள். இந்த கருத்து கிறிஸ்துவின் உபதேசத்தில் மிக அருமையாக விவரிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு வழிகள் இருப்பதாக அவர் சொன்னார். "*இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர் ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்* " (மத்தேயு 7:13,14)

அவர் ஒரு நிலத்தில் ஒன்றாக வளர்கின்ற கோதுமையையும், களைகளையும் வித்தியாசப்படுத்திக் காட்டினார். அவைகளுடைய இறுதி முடிவையும் சொன்னார்; " *இரண்டையும் அறுப்பு மட்டும் வளர விடுங்கள். அறுப்புக் காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி: முதலாவது, களைகளைப் பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ முன் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள்* " (மத். 13:29, 30).

இயேசு வேறொரு உவமையையும் சொன்னார். " *அன்றியும், பரலோக ராஜ்யம் கடலிலே போடப் பட்டு, சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக் கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது. அது நிறைந்த போது, அதைக் கரையில் இழுத்து, உட்கார்ந்து, நல்லவைகளைக் கூடையில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்து போடுவார்கள். இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவ தூதர்கள் புறப்பட்டு நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும், பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார்*" (மத். 13:47,50).


இயேசு இரண்டு எஜமான்களைப் பற்றியும் பேசினார்: "*இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு, மற்றவனை அசட்டைப் பண்ணுவான்; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது* " (மத். 6:24).

கிறிஸ்தவர்கள், பரத்திற்குரிய தேவனுடைய ராஜ்யமாகிய கர்த்தருடைய சபையின் ஓர் அங்கமாக இருக்கிறோம் என்பதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அது வாழ்க்கை மாற்றப் பட்டிருக்கிற ஒரு கூட்டத்தால் உண்டானது. " *திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்த சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப் படுகிற கூட்டத்தை உள்ளடக்கியது* " (2 கொரி. 3:18).

மேலும், அது இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகாமேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களைப் பெற்றுக் கொண்டவர்களால் உண்டானது (2 பேதுரு 1:3,4)

மாற்றப்பட்ட இந்த மக்கள்; பரலோகத்திற்குரியவர்களாக இருந்தாலும் கூட மற்றவர்களை தேவனுக்காக ஆதாயப்படுத்துவதற்காக அவர்களிடம் தேவனுடைய காரியங்களைப் பேசுவதற்காக இப்பூமியில் சில காலம் வாழும் வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. " *ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக் கொண்டு புத்தி சொல்லுகிறது போல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக் கொள்ளுகிறோம்* " (2 கொரி. 5:20).

கிறிஸ்தவர்கள் உலகமும், கிறிஸ்தவமும், வாழ்க்கை முறை அடிப்படையில் இரு வெவ்வேறு துருவங்களாக பிரிந்து இருக்கின்றன என்பதை அறிந்து கொண்டால் தான், இது நன்மை பயக்கும். ஒருவர் இவ்விரண்டில் ஒன்றை மற்றொன்றோடு சேர்க்க முடியாது. நாம் தேவனையா அல்லது சாத்தானையா யாரை சேவிக்க வேண்டுமென்று தெரிந்து கொள்ள வேண்டும்.



## கொஞ்சம் சிரியுங்களேன்!

ஒரு சிறு பையன், " அப்பா, நீங்கள் சிறுவனாக இருந்தபோது, ஞாயிறு பள்ளிக்கு சென்றிருக்கிறீர்களா? " எனக் கேட்டான்.

அப்பா பெருமையோடு, " ஒரு ஞாயிறு கூடத் தவற விட்டதில்லை " என்று பதிலளித்தார்.

உடனடியாகப் பையன், " அப்படியானால், ஞாயிறு பள்ளி எனக்கும் எந்த நன்மையும் செய்யாது " என்று முடித்தான்.

# உங்கள் குழந்தைகளோடு.....

மற்றவர்கள் பரபரப்பாகத் தங்கள் வேலைகளில் ஈடுபடும் போது, நீங்கள் உங்கள் குழந்தையோடு நேரத்தைச் செலவிடுங்கள்;

மற்றவர்களெல்லாரும் ஓடிக்கொண்டிருக்கும் போது, நீங்கள் உங்கள் குழந்தைகளோடு நடந்து செல்லுங்கள்.

மற்றவர்கள் உங்கள் குழந்தைகளிடம் முகம் சுளிக்கும் போது, நீங்கள் புன்சிரிப்பை வெளிப்படுத்துங்கள்;

மற்றவர்கள் பற்பல சிந்தைகளால் தங்களை நிரப்பும் போது, உங்கள் குழந்தை சொல்வதைக் கவனியுங்கள்.

மற்றவர்கள் கூச்சல் போடுவதை தெரிந்து கொள்ளும்போது, உங்கள் குழந்தையோடு நிதானமாகப் பேசுங்கள்;

மற்றவர்கள் உங்கள் குழந்தையிடம் தவறை மட்டும் கண்டுபிடிக்கும் போது, உங்கள் குழந்தையை நீங்கள் மெச்சுங்கள்.

மற்றவர்கள் தொடுதலின் வல்லமையை உணரத் தவறும் போது, உங்கள் குழந்தையை கட்டித் தழுவுங்கள்;

மற்றவர்கள் தொலைக்காட்சியைக் காணும் போது, உங்கள் குழந்தையோடு சேர்ந்து வேதாகமத்தை வாசியுங்கள்.

மற்றவர்கள் அற்பமாய் எண்ணும் போது, உங்கள் குழந்தையிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள்.

மற்றவர்கள் பொழுதுபோக்கு காரியங்களில் ஈடுபடும் போது, குழந்தையோடு விளையாடுங்கள்.

மற்றவர்கள் எல்லைகளை வகுக்கத் தவறும் போது, நீங்கள் உங்கள் குழந்தையை ஒழுங்குபடுத்துங்கள்.

மற்றவர்கள் தங்களை நல்லவர்கள் போல பாசாங்கு செய்யும் போது, உங்கள் குழந்தையிடம் மன்னிப்புக் கேளுங்கள்.

மற்றவர்கள் விசுவாசத்தை இழக்கும் போது, உங்கள் குழந்தையோடு ஜெபியுங்கள்;

மற்றவர்கள் சந்தேகப் பேர்விழிகளாக மாறும் போது, உங்கள் குழந்தையோடு நீங்கள் கனவுக் காணுங்கள்.

# நீங்கள் விசுவாசித்தால், அப்படியே பேசுங்கள்

## If you believe, say so

***Jimmy Jividen***

பிசாசின் மிகப் பெரிய ஆயுதங்களுள் ஒன்று அச்சுறுத்தலாகும். சமூக நிராகரிப்பு அல்லது சரீரப்பாடு போன்றவைகளைக் கொண்டு அவனால் மக்களை பயப்படுத்த முடிந்தால், அதன் மூலம் அவன் திருப்தி அடைகிறான். தான் விசுவாசிக்கிற ஒன்றிற்காக நிற்காத மனிதன் சீக்கிரத்தில் விசுவாசிப்பதையே நிறுத்திவிடுவான். ஒரு மனிதனுடைய விசுவாசம் உடனே மங்கிப் போவதில்லை, அவ்வப்போது செய்து கொள்ளும் சமரசங்களால் படிப்படியாக மங்கிப்போகிறது.

ஒரு சிறிய சமரசம் மற்றொன்றுக்கு வழி வகுக்கிறது, கடைசியாக, சமரசம் செய்து கொள்வதற்கு ஒன்றுமே இல்லாத நிலைக்கு அது வழிவகுக்கிறது.

பல சமூக வட்டங்களில், ஒருவருக்குத் தேவன் பேரில் இருக்கும் விசுவாசத்தைப் பற்றிப் பேசுவதோ, இயேசுவின் மீதுள்ள அன்பையோ அல்லது வசனங்களிலுள்ள விசுவாசத்தைப் பற்றிப் பேசுவதோ அசௌகரியமாயிருக்கும். ஆவிக்குரிய காரியங்களை விவாதிப்பதற்கு அது சரியான இடமோ, நேரமோ அல்லது என்பது போல் தெரியும். மற்றவர்கள் தேவனுடைய நாமத்தைத் தூஷிக்கும் போதும், அவருடைய போதனைகளை பரியாசம் பண்ணும்போதும் சமூக அச்சுறுத்தல் ஒருவரை அமைதியாக இருக்கச் செய்கிறது.

தேவனுடைய வார்த்தைகளை அங்கீகரிக்கிற அல்லது ஏற்றுக் கொள்ளுகிற மக்களுக்கு முன்பாக விசுவாசத்தை அறிக்கையிட்டு விட்டு, ஏற்றுக் கொள்ளாத மக்களுக்கு முன்பாக மௌனமாயிருப்பது மாயமாலமாகும்.

வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் மிகவும் கோழைத்தனமான கூட்டத்தாரில் ஒரு கூட்டமாக பயந்தாகொள்ளி யூத அதிகாரிகள் இருந்திருக்கிறார்கள். யோவான் அவர்களைப் பற்றி இவ்விதமாகச் சொல்கிறார். " *ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெப ஆலயத்துக்கு புறம்பாக்கப்படாதபடி, பரிசேயர் நிமித்தம் அதை அறிக்கை பண்ணாதிருந்தார்கள். அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும்*

*மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்* " (யோவான் 12:42,43)

இந்த அதிகாரிகளுக்கு விசுவாசம் இருந்திருக்கிறது. ஆனால், அவர்கள் அதை இரகசியமாக வைத்துக் கொள்ள விரும்பினார்கள். இரகசியமான விசுவாசம் நிலைத்திருக்க முடியாது. இரகசியம் விசுவாசத்தை அழித்து விடும் அல்லது விசுவாசம் இரகசியத்தை மேற்கொண்டு விடும்.

அப்போஸ்தலனாகிய பேதுரு ஆலோசனைச் சங்கத்தாரிடத்தில் அழைக்கப்பட்ட போது தன்னுடைய விசுவாசத்தைத் தைரியமாக அறிக்கை செய்தார். இயேசுவின் நாமத்தைக் குறித்து ஒருபோதும் பேசக்கூடாது என்று அதிகாரிகளால் தடை செய்யப்பட்டபோதும் கூட அவர் இவ்விதமாகச் சொன்னார். " *தேவனுக்குச் செவி கொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவி கொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசாமலிருக்கக் கூடாதே* " என்றார்கள் (அப். 19,20).

ஏதோ ஒன்றின் மீதோ அல்லது யாரிடத்திலோ உறுதியான விசுவாசம் வைத்திருப்பவர்கள் அதற்காக பேசுவதற்கான வாய்ப்பு வரும்போது அதை வரவேற்பார்கள். நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்தால், இயேசுவுக்காகவும் அவருடைய போதனைகளுக்காகவும் நில்லுங்கள்.


## சபையைக் கட்டுவதற்கான ஒரு வழிகாட்டி

பழைய ஏற்பாட்டிலுள்ள நெகேமியா நூலில் இஸ்ரவேல் ஜனங்கள் எருசலேமின் அலங்கம் திரும்பக் கட்டப்படுதல் பற்றிப்படிக்கிறோம். அவர்களின் செயல் தரும் சில முன்மாதிரிகளை இன்றைக்குக் கர்த்தருடைய சபைகள் பின்பற்றினால், சபைகள் பலமாகக் கட்டப்படுவதற்குப் பயனுள்ளவைகளாக இருக்கும்.

**அவைகள் சில :**

1. அவர்கள் ஜெபித்தார்கள்
2. அவர்கள் தங்கள் வேலையைத் திட்டமிட்டார்கள்
3. அவர்கள் ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்தினர்
4. அவர்கள் குறை கூறுபவர்களைக் கண்டுகொள்ளவில்லை
5. அவர்கள் தங்களுடைய வேலையில் ஒவ்வொருவரையும் ஈடுபடுத்தினர்.
6. அவர்கள் சரியான காரியத்தில் தங்கள் கவனத்தைச் செலுத்தியதோடு, கவனம் சிதற மறுத்தனர்.
7. அவர்கள் தேவன் தங்களோடிருந்து தங்களுக்காக யுத்தம் செய்கிறார் என்பதை நினைவில் கொண்டனர்.

# இவ்வுலகம் எனக்குச் சொந்த வீடல்ல



## This World In Not My Home

*Leon Barnes*

உங்கள் வீடு எங்கே இருக்கிறது? என்று யாராவது கேட்டால், நம்மில் பலர் நாம் பிறந்த இடத்தையோ அல்லது இப்போது நாம் வாழ்ந்து கொண்டி ருக்கிற இடத்தையோ வேகமாகச் சொல்லிவிடுவோம். ஆனால், உண்மை யாகவே அது அப்படித்தானா? இயேசு நம்மை இவ்வுலகத்தி லிருந்தும், அதன் பழக்க வழக்கங்களிலிருந்தும் பிரித்தெடுத்து ஒரு வித்தியாச மான வாழ்க்கை முறைக்குக் கொண்டு போகும்படியாக வந்தார். இயேசு தம்முடைய சீஷர்கள் உலகத்தில் இருந்தாலும் உலகத்தாரல்ல என்று சொன்னார் (யோவான் 15:19). இயேசு தாம் இவ்வுலகத்தானால்ல என்று தம்மைப் பற்றிச் சொன்னார், நாமும் உலகத்தாராயிருக்கக்கூடாது. அவர் நம்மை ஒரு வித்தியாசமான ராஜ்யத் திற்குள் அழைத்திருக்கிறார். நாம் இருளின் அதிகாரத்தினின்று விடுதலை யாக்கப்பட்டு தேவனுடைய அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறோம் (கொலோ. 1:13). நம்முடைய குடியிருப்பு இவ்வுலகத்தில் அல்ல பரலோகத்தில் இருக்கிறது (பிலிப். 3:20).

நாம் இந்தப் பூமியில் அந்நியர்களும், பரதேசிகளுமாயிருக்கிறோம் என்று பேதுரு சொல்கிறார் (1 பேதுரு 2:11). நாம் இந்த உலகத்தின் காரியங் களில் அதிக ஈடுபாடு கொண்டவர்களாயிருப்பதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. சில வேளைகளில் இவ்வுலகமே நம் குறிக்கோளாக, கனவாக மாறிவிடுகிறது. அப்போது நமக்காகக் காத்திருக்கிற அந்த மேலான உலகத் தைக் குறித்த எதிர்பார்ப்பு இல்லாம் போகிறது. இது சுயநலத்திற்கும், நம்முடைய தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்து கொள்வ தற்கும், தேவனுடைய ராஜ்ஜியம் என்னும் மாபெரும் பொக்கிஷத்தை மறப்ப தற்கும் வழிவகுக்கிறது. இவ்வுலகம் நம் சொந்தமல்ல என்பதை நினைவில் கொள்வது அவசியமாயிருக்கிறது.

**அதினாலென்ன?**

ஏன் இப்படிச் சொல்லப் படுகிறது? இவ்வுலகம் சொந்த நாடாக இல்லாமல் நான் வெறுமனே கடந்து போகிறவனாக இருப்பதால் என்ன? அது இன்று, இப்போது என்னில் என்ன வித்தியாசத்தை ஏற்படுத்து கிறது?

அது இந்நிமிடம் வரை ஒவ்வொரு நாளும் என் வாழ்க்கை தேவனோடு சரியாக இருக்கிறதா என்று என்னை சிந்திக்கத் துண்ட வேண்டும். வேதாகமம் வாக்களிக் கிறபடி உலகமும், அதிலுள்ளவை களும் கடந்து போகிறதாக இருந்தால் உலகத்திலும், அதின் காரியங் களிலும் என் நித்தியத்தை இழந்து போவது முட்டாள்தனமாக இருக்கு மல்லவா?

அது மற்றவர்கள் மீது என் தாக்கத்தைக் குறித்து என்னை சிந்திக்க வைக்க வேண்டும். இப்பூமி நமக்கு சொந்தமாக இல்லாவிட்டாலும் கூட இங்கிருந்து தேவனிடத்திற்கு மக்களை வழிநடத்தும் வெளிச்சமாக இருக்கிறோம் (மத். 5:13,16).

அது நான் பணி ஓய்வு பெற்ற பிறகு என்ன செய்வேன் என்று சிந்திப்பதை விட என் நித்தியத்தை எங்கே கழிப்பேன் என்று என்னை அதிகமாகச் சிந்திக்க தூண்ட வேண்டும். இந்த உலகத்தில் நான் பணக்காரனாக ஓய்வு பெற்றாலும், இங்கிருந்து ஒரு ரூபாயைக் கூட நான் எடுத்துச் செல்ல முடியாது. அப்படியிருக்கும்போது, தற்காலிக மான என் வாழ்க்கைக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் நித்தி யத்தை இழப்பது எனக்கு சரியான முடிவாக இருக்காது தானே?

**அப்படியானால், நான் என்ன செய்ய வேண்டும்?**

இவ்வுலகில் நாம் வாழும் ஒவ்வொரு நாளையும் கடைசிநாள் என்று நினைத்துக் கொண்டு வாழ வேண்டும். ஏனென்றால், "*நாளைய தினத்தைக் குறித்துப் பெருமைப் பாராட்டாதே; ஒருநாள் பிறப்பிப்பதை அறியாயே*" என்று சாலொமோன் சொல்லியிருக்கிறாரே (நீதி. 27:1). இந்நேரத்தில் உங்கள் வாழ்க்கை தேவனோடு சரியாக இல்லை யென்றால், ஆயத்தமில்லாமல் அவரைச் சந்திக்க மற்றொரு நாளை விரயம் செய்ய வேண்டாம். நாளை என்பது வெகு தாமதமாக இருக்கிற படியால் இன்றே தேவனிடத்தில் உங்களுக்கு இருக்கிற விசுவாசத்தை அறிக்கை செய்து, உங்கள் பாவங் களிலிருந்து மனந்திரும்பி, இப்போதே ஞானஸ்நானம் பெறுங்கள். அதன் பிறகு இந்த உலகத்தில் எப்போதும் அவருடைய பரிசுத்தப் பிள்ளையாக அவருக்காக வாழுங்கள்.

> தன்னிடத்தில் அக்கினி இல்லாதவன் பிறருக்கு அனல் மூட்ட முடியாது.

# பின்வாங்குதல் கூடாது

# NO BACKSLIDING

**B. Benny Martin**

அப்போஸ்தலனாகிய பவுல், பிற்காலங்களில் சிலர் விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள் என்று எழுதினார். " ஆகிலும் ஆவியானவர் வெளிப் படையாகச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள்" (1 தீமோ 4:1). அப்போஸ்தலனாகிய யோவான் சிலர் பிரிந்து போய் விட்டதாக எழுதினார். " அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து போனார்கள், ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாயிருக்கவில்லை, நம்முடையவர்களாயிருந்தார்களா னால் நம்முடனே நிலைத்திருப்பார்களே. எல்லோரும் நம்முடையவர்களல்ல வென்று வெளியாகும்படிக்கே பிரிந்து போனார்கள் " (1 யோவான் 2:19). இன்னும், " பின்வாங்கிப் போனவர்களைப் பற்றிய உதாரணங்கள் பெயர் களுடன் தரப்பட்டிருக்கிறது: இந்த நல்மனச்சாட்சியைச் சிலர் தள்ளிவிட்டு, விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள். இமெனேயும், அலெக்சந்தரும் அப்படிப்பட்டவர்கள்; அவர்கள் தூஷியாதபடி சிட்சிக்கப்பட அவர்களைச் சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தேன் " (1 தீமோத். 1:19,20).

நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ? என்று இயேசு கேட்ட இந்தக்காட்சியை சற்று கற்பனை செய்து பாருங்கள். சீடர்கள் இயேசுவோடு பல மாதங்கள் இருந்திருந்தும், ஏன் அவரை விட்டு பின்வாங்கிப் போனார்கள்? அதே கேள்வி இன்னும் கேட்கப்படுகிறது. கிறிஸ்துவின் சீடர்கள் இன்னும் அவரை விட்டு விலகிச் சென்று கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் ஏன் அப்படிச் செய்கிறார்கள்? கிறிஸ்து நமக்குச் செய்திருக்கிறவை களை எண்ணிப் பார்த்தால் நாம் எப்படி அவரை விட்டு விலகிச் செல்ல முடியும்? அவர் சொன்னதை நினைவில் கொள்ளுங்கள். என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் (யோவான் 14:6) நாம் அவரை விட்டு விலகிச் சென்றால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்கதாக வேறொரு பலி இல்லை (எபி. 10:26). ஆனாலும், சிலர் அவரை விட்டு பின்வாங்கிப் போகிறார்கள். " பின்வாங்கிப் போனவர்களைப் பற்றி தேவன் சொல்லும் போது ஒருவன் பின்வாங்கிப் போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது " என்று சொல்கிறார் (எபி. 10:38). கிறிஸ்து அவர்களுக்கு செய்தவைகளையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு, நன்றி கெட்டவர்களாய் அவரை விட்டு விலகிச் செல்கிறவர்கள் எங்கே செல்கிறார்கள் என்று பார்ப்போம்.

## I. சிலர், மறுபடியும் தங்கள் பாவ வாழ்க்கைக்குச் செல்கிறார்கள்

இயேசு கிறிஸ்து நம்மை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க வந்தார். ஆனால், சிலர் அவரை விட்டுவிட்டு மறுபடியும் அந்தப் பாவ வாழ்க்கைக்கே சென்று விடுகிறார்கள். சகோதரரே, " ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள் " என்று எபிரெய ஆசிரியர் பின் வாங்கிப் போகிறவர்களை எச்சரிக்கிறார் (எபி. 3:12). கிருபையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று வேதாகமம் சொல்கிறது (எபே. 2:5). ஆனால், சிலரைப் பார்த்து வேதாகமம் கிருபையி னின்று விழுந்தீர்கள் என்று சொல்கிறது (கலா. 5:4). எனவே தான், தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக் கடவன் என்று எச்சரிப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

**கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு நாம் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும்.**

என்ன ஆனாலும் நாம் அவரையே பின்பற்று வோம் என்கிற தீர்மானம் தான் அது. அதில் அசையாதவர்களாய் நாம் உறுதியாய் இருக்க வேண்டும். ஏனென்றால் இயேசு இப்படியாகச் சொன்னார். " என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான் " என்று (மத். 12:30). மேலும், 2 கொரி. 5:14,15 வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறவைகளை கவனியுங்கள். கிறிஸ்துவினு டைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும், பிழைத்திருக் கிறவர்கள் இனி தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தா ரென்றும் நிதானிக்கிறோம். அப்போஸ்தலனாகிய பேதுரு கிறிஸ்துவை விட்டு விலகிப் போகிறவர்களைப் பற்றிச் சொல்லும் போது, " அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும், அதை அறியாதிருந் தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்கு சம்பவித்தது " என்று சொல்கிறார் (2 பேதுரு 2:21,22). பாவத்திலிருந்து கழுவப் பட்டு, பின்பு கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து பாவ வாழ்க்கைக்கு மறுபடியும் திரும்புவது, கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரள திரும்பினது போலாகும்.

## II சிலர் உலகத்தின் ஐசுவரியத்தை நாடிச்செல்கிறார்கள் :

ஒருமுறை நம்முடைய அருமை இரட்சகர் ஒரு கேள்வியைக் கேட்டார். அந்த கேள்வி (மத். 16:26)ல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதோ, அந்தக் கேள்வி " மனுஷன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? " சிலர் நித்திய ஐசுவரியத்தின் வாக்குத்தத்தங்களில் திருப்திப்படாமல் கிறிஸ்துவை விட்டுப்பிரிந்து, அழிந்து போகின்ற உலகத்தின் ஐசுவரியத்தை நாடிச்சென்று விடுகிறார்கள். யூதாஸைப் போல் முப்பது வெள்ளிக் காசுக்காக அவர்கள் இயேசுவைக் காட்டிக் கொடுக்கிறார்கள். பூமியிலே உங்க ளுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டாம்; பரலோகத்தில் உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள் என்று இயேசு சொன்னார் (மத். 6:19,21). ஆனால், சிலர் இவ்வுலகத்தின் ஐசுவரியம், அதிகாரம், கௌரவம், சந்தோஷம் போன்றவை களுக்காக நம்முடைய அருமை இரட்சகரை விட்டுப் பிரிந்து செல்கிறார்கள்.

## III சிலர் மார்க்கப் பிரிவினைக் கூட்டத்திற்குள் செல்கிறார்கள்

சாத்தானுடைய மிக வல்லமையான பிரசங்கம் என்னவென்றால் எல்லா சபைகளும் ஒன்று தான் என்பதாகும். கிறிஸ்து ஒருபோதும் அப்படிச் சொன்னதில்லை, அப்படி அவர் ஒருபோதும் போதிக்கவுமில்லை. இயேசு, *நான் என் சபையைக் கட்டுவேன்* என்று சொன்னார் (மத். 16:18) அந்தச் சபையை, அவர் தமது சுய இரத்தத்தினாலே சம்பாதித்தார் (அப். 20:28). சாத்தான் மக்கள் மனதில் எப்படி வேண்டுமானாலும் இரட்சிக்கப்பட முடியும். எல்லா சபை களும் ஒன்று தான் என்கிற தவறான எண்ணத்தை ஏற்படுத்தி இருக்கிறான். இயேசு கட்டின சபையை இந்த உலகத்திலுள்ள எல்லா மார்க்கப் பிரிவினை சபைகளும் சேர்ந்து எதிர்க்கின்றன. எபேசியர் ஐந்தாம் அதிகாரத்தில் கிறிஸ்துவுக்கும் சபைக்கும் உள்ள உறவை பவுல் ஒரு கணவனுக்கும், மனைவிக்கும் உள்ள உறவாக வர்ணித்திருக்கிறார். சபையாகிய மண வாட்டியை, மணவாளனாகிய இயேசு விவாகம் செய்திருக்கிறார். எனவே, கிறிஸ்துவுக்கு சபையாகிய ஒரே மணவாட்டி தான் இருக்கிறது.

பிரிவினையே இருக்கக்கூடாது என்று இயேசு ஜெபித்தார்; நான் இவர் களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தை யினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளு கிறேன் (யோவான் 17:20,21)

# குழந்தை வளர்ப்பு தாய்மார்களுக்கானது மட்டுமல்ல



## *Parenting is not just for mothers*

***Gary C. Hampton***

கர்த்தரை நேசித்துத் தங்கள் பிள்ளைகளுக்குத் தேவனிடத்திலும், அவருடைய வார்த்தையினிடத்திலும் மரியாதையைப் போதிக்கும் தாய்மார்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். இன்று சில நடுத்தர வயதினர் உண்மையுள்ள கிறிஸ்வர்களாக இருப்பதற்கான காரணம் அவர்கள் தங்கள் தாய்மார்களிடத்தில் கண்ட தேவபக்தியுள்ள முன் மாதிரி தான் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் இத்தகைய விளைவுகளை தீமோத்தேயுவின் வாழ்க்கையில் கண்டார். "*உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவுகூருகிறதினால், என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்த மனச்சாட்சியோடே ஆராதித்து வரும் தேவனை நான் ஸ்தோத்தரிக் கிறேன், அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்*" (2 தீமோத். 1:4,5).

ஆயினும், தேவனுக்குக் கிறிஸ்தவத் தாய்மார்கள் மட்டும் குழந்தை வளர்ப்பை கையாள வேண்டுமென்பது அவருடைய திட்டமாக, நோக்கமாக ஒருபோதும் இருந்ததில்லை. பவுல் இவ்விதமாகச் சொன்னார். "*பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது. பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப் போகாதபடி, அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்*" (கொலோ. 3:20,21). பிள்ளைகளுக்கு போதிப்பதிலும், அவர்களைச் சீர்படுத்துவதிலும் பெற்றோர்கள் இரண்டு பேருமே ஈடுபடுத்தப்பட

வேண்டுமென்பது பவுலின் எண்ண மாயிருக்கிறது என்பது தெளிவா கிறது. அதுபோல் தகப்பன்மார்கள் குறிப்பாக நம்முடைய பொறுப்பில் தேவன் ஒப்புக்கொடுத்திருக்கிற பிள்ளைகள் திடனற்றுப்போகும் அளவுக்கு அவர்களை கோபப்படுத் தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கர்த்தர் சோதோம் கொமோரா பட்டணங்களை அழிப்பதற்கு முன்பாக, தம்முடைய திட்டங்களை ஆபிரகாமுக்குச் சொல்ல தீர்மானித் தார். *"கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப்பின் வரும் தன் வீட்டா ருக்கும்; நீங்கள் நீதியையும், நியாயத்தையும் செய்து, கர்த்தரு டைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன்"* என்றார் (ஆதி. 18:19). தேவன் பூமியிலுள்ள எல்லா தேசத்தாரையும் ஆபிரகாமின் சந்ததி மூலமாக ஆசீர்வதிப்பதாக வாக்குத் தத்தம் செய்திருந்தார். ஆனால், அந்த வாக்குத்தத்தம் ஆபிரகாம் தன் பிள்ளைகளையும், வீட்டாரையும் கீழ்ப்படிதலின் பாதையில் வழி நடத்துவதைச் சார்ந்திருந்தது.

ஞானி இவ்விதமாக எழுதினார், *"என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே. அவைகள் உன் சிரசுக்கு அலங் காரமான முடியும், உன் கழுத்துக்குச் சரப்பணியுமாயிருக்கும்"* (நீதி. 1:8,9). தகப்பன்மார்கள் தங்கள் பிள்ளைகளின் வாழ்க்கை மகிழ்ச்சி யால் நிரப்பப்படும்படிக்கு பிள்ளை களுக்கு போதிப்பதில் முழு மூச்சுடன் ஈடு பட வேண்டும்.

நிச்சயமாக, நம் இறுதி நோக்கம் நம்முடைய பொறுப்பில் கொடுக்கப்பட்டுள்ள விலையேறப் பெற்ற ஆத்துமாக்களின் இரட்சிப் பாகத்தான் இருக்க வேண்டும். *"என் மகனே நீ உன் செவியை ஞானத் திற்குச் சாய்த்து, உன் இருதயத்தைப் புத்திக்கு அமையப் பண்ணும் பொருட்டு.... அப்பொழுது கர்த்தருக்குப் பயப்படுதல் இன்னதென்று நீ உணர்ந்து, தேவனை அறியும் அறிவைக் கண்டடைவாய்"* (நீதி. 2:1,5). வெளிப்படையாகவே, தங்கள் குடும்பங்கள் பரலோகத்தில் மறு படியும் சங்கமிப்பதை விரும்பும், அதற்காக ஏங்கும் தகப்பன்மார்கள் தேவனுடைய அன்பை தொடர்ச்சி யாக பிள்ளை களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புவார்கள். *"என் மகனே, நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்து கொள்ளும்போது சோர்ந்து போகாதே. தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறது போல, கர்த்தரும் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார்"* (நீதி. 3:11,12).

தேவனுடைய குமாரன் மனித குமாரர்களை தேவனுடைய குமாரர்களாக மாற்றும்படி மனித குமாரனானார்
– தெரிந்தெடுக்கப்பட்டது.

# இன்று ....

இன்று நான் சந்தோஷமாக இந்த நாளைத் தொடங்கி இணக்கத்துடன் செயல்படுவேன் என்று தீர்மானிப்பேன். நான் யாரையும் விமர்சனம் செய்யமாட்டேன். தேவன் எனக்குத் தந்திருக்கிற விலையேறப் பெற்ற நேரத்தை வீணாக்க மறுப்பேன்.

இன்று எனக்கும் மற்றெல் லாருக்கும் சமமாகவே கொடுக்கப் பட்டிருக்கிறது.

இன்று நான் நேரத்தை வீணடிக்கமாட்டேன். ஏனென்றால், நேற்று நான் வீணடித்த நிமிடங்கள் மறைந்து போன எண்ணங்களாக இருக்கின்றன.

இன்று நான் நேரத்தை வீணடிக்காமல் செயல்படத் தொடங் கப் போகிறேன். ஒரு வாரத்தில் இன்று நான் இருப்ப தை விட பல மைல்கள் அப்பால் இருப்பேன்.

இன்று நான் காரியங்கள் வித்தியாசமாக இருந்தால் என்ன செய்வேன் என்று கற்பனை செய்ய மாட்டேன். என்னிடம் இருக்கிறவை களை வைத்து வெற்றி பெறுவேன்.

இன்று பூமியில் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கடைசி நாளென்று எண்ணி மற்றவர்க ளிடம் நல்லவிதமாக நடந்து கொள்வேன். நாளைக்காக காத்தி ருக்க மாட்டேன். நாளை ஒரு போதும் வருவதில்லை.

இன்று, நாளை என்ன நடக்கும் எனக் கவலைப்பட்டு என் நேரத்தை வீணடிக்கமாட்டேன். எனவே, காரியங்கள் நடக்கத்தக்க தாக என் நேரத்தை செலவு செய்யப் போகிறேன்.

இன்று, நாளை என்னு டைய தேவை மற்றவர்களுக்கு அவசியம் என்பதால் அந்நேரத்தில் நான் குறைவுபட்டவனாக காணாதபடிக்கு என்னை மேம்படுத்திக் கொள்ளத் தக்கதாக நான் என்னை மேம்படுத் திக் கொள்ளத் தீர்மானித்திருக்கிறேன்.



# நாம் அவரை எப்படி அணிந்து கொள்கிறோம்?

ஒரு முனையில் வேதவாக்கியங்கள் கிறிஸ்தவன் கிறிஸ்துவை அணிந்து கொள்வதையும், ஞானஸ்நானத்தில் அவருடைய இரத்தத்தால் கழுவப்படுவதையும், அவருடைய நீதியைத் தரித்துக் கொள்வதையும் பற்றிப் பேசும் போது, நம் அன்றாட வாழ்வில் மற்றும் நம் நடத்தையில் ஜனங்கள் நம்மையல்ல, கிறிஸ்துவைக் காண வேண்டும்.

மறுமுனையில், வேத வாக்கியங்கள் கிறிஸ்தவனுக்குள் கிறிஸ்து வாசம் செய்வது பற்றிப் பேசுகிறது..." விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும் " என்று (எபே. 3:16,17). இதன் பொருள், நாம் எதைச் செய்தாலும், நாம் எங்கு போனாலும், நாம் கிறிஸ்துவை எடுத்துச் செல்கிறோம். அதாவது, அவர் நமக்குள் இருக்கிறார். (ரோமர் 8:6,9).

⁕ நம் கோபத்தால் முகச்சுளிப்பால், கசப்புணர்வால், கெட்ட வார்த்தைகளால் வாழ்க்கையில் ஏற்படுகின்ற பிரச்சனைகளுக்கு உலகத்தாரைப் போல் பதிலளிக்கிறோமா?

⁕ உலகப்பிரகாரமான பழக்கவழக்கங்களால், அதாவது, மதுபானம், புகை மற்றும் வேறு தீங்கு இழைக்கக்கூடிய பொருள்களால் நம் சரீரங்களையும், நமக்குள் வாசம் செய்யும் கிறிஸ்துவையும் தவறாகக் காட்டுகிறோமா?

⁕ கிறிஸ்து எங்கு போவதைத் தெரிந்து கொள்ளமாட்டாரோ அந்த இடங்களுக்கெல்லாம் அவரை எடுத்துச் சென்று கொண்டிருக்கிறோமா?

தேவனையும், சக மனிதர்களையும் நேசிப்பதினால், தேவனை ஆராதிப்பதினால், நன்மை செய்வதினால், இழந்து போனவர்கள் இரட்சிக்கப்படும்படியாக அவர்களுக்குப் போதிப்பதினால் நம் கர்த்தர் பிரியமாக வாசம் செய்ய நம்மை ஒரு ஆவிக்குரிய வீடாக மாற்றுகிறோமா?

அல்லது நம் நடத்தையில் அவர் தொடர்ந்து காயப்பட்டு, நெருக்கப்படும் வகையில் நம் உலகப்பிரகாரமான வாழ்க்கை இருக்கிறதா? அவர் நம்மோடு தங்குவாரா, அல்லது நம்மை விட்டு அவர் போகும்படியாக அவரை நாம் பலவந்தப்படுத்துகிறோமா?

**- Betty Burton Choate**

# ஆத்துமாக்களை ஆதாயம் செய்வது ஞானமானது

## Winning Souls is wise

***Dale Grissom***



நாம் சுவிசேஷத்தை இழந்து போனவர்களிடத்தில் எடுத்துச் செல்லாத படியால்தான் கர்த்தருடைய சபை வளரவில்லை. நாம் சுவிசேஷத்தோடு மக்களை முகமுகமாய் எதிர்கொள்வதில்லை. பலர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வாய்ப்பிருக்கிறது. நம்மைச் சுற்றிலும் இருக்கிற இழந்துபோனவர்கள் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வாய்ப்பிருக்கிறது. நம்மைச் சுற்றிலும் இருக்கிற இழந்து போன, கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள் கீழ்ப்படிய வாய்ப்பு இருக்கிறது.

நமக்கு யாரும் செவிகொடுக்கமாட்டார்கள் என்று நினைக்க நாம் தூண்டப்படுகிறோம். ஜனங்கள் உண்மையாகவே நேர்மையானவர்களாக, ஆதரானைக்கு வருவார்கள் என்று நாம் நினைக்கிறோம். அவர்கள் வரும்போது, மறுபடியும் அவர்கள் வரும்படியாக அழைப்பு மட்டும் விடுக்கிறோம். அதன்பின்பு நாம் வழக்கமாக " நம்முடைய வார்த்தைகளுக்கு செவி கொடுப்பதில்லை" என்று சொல்கிறோம். நண்பர்களே, பிரச்சனை நமக்கு யாரும் செவி சாய்ப்பதில்லை என்பதல்ல. பிரச்சனை நாம் சுவிசேஷத்தை எடுத்துச் செல்வதில்லை என்பதுதான். நாம் பலரை சுவிசேஷத்தோடு முகமுகமாய் எதிர்கொள்ள வேண்டும். நாம் ஜனங்களை ஆராதனைக்கு அழைக்கிறவர்களாயிருந்து, முன்னுதாரணமான வாழ்க்கை வாழ்ந்து, சபை ஜனங்களை எதிர்கொள்வதில்லை என்கிற பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். சபை ஒருவரிடத்தில் அக்கறை கொண்டு அவரு டைய ஆத்துமாவைப் பற்றி பேசி, அவர் நித்தியத்தை எங்கே கழிப்பார் என்று யோசிக்கும் வரைக்கும் அது யாரையும் எதிர்கொள்ளவில்லை என்று தான் பொருள். " *நீங்கள் மற்றவர்களைக் குறித்து எவ்வளவாக அக்கறைப்படு கிறீர்கள் என்பதை அவர்கள் அறியும் வரை நீங்கள் எவ்வளவு அறிந்திருக் கிறீர்கள் என்பதைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை*". இது மிகவும் முக்கியமான வாக்கியமாக இருக்கிறது. நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கொண்டு இழந்து போனவர்களை எதிர்கொள்ளும் அளவுக்கு அக்கறை உடையவர்களாக காணப்பட வேண்டும்.

மத். 28:19,20 வசனங்களில் இயேசு இவ்விதமாகச் சொன்னார். "*ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி,*

*பிதாகுமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்"* என்றார். ஆமென்.

இயேசு, "நீங்கள் புறப்பட்டுப் போய், சகல தேசத்தாருக்கும் உபதேசம் பண்ணுங்கள்" என்று கட்டளையிட்டபோது அவர் பதினொரு மனிதர்களோடு பேசினார். அவர்கள் இயேசுவின் வார்த்தைகளைக் குறித்து என்ன நினைத்தார்கள்? அவர்கள் அது சாத்தியமில்லாதது, நம்ப முடியாதது, அடைய முடியாதது என்று நினைத்தார்களா?

இயேசு அதே வார்த்தைகளை இன்று அந்த பதினொருவருக்கு முன் மொழிகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அந்த பதினொருவரில் ஒருவராக கற்பனை செய்து கொள்ளுங்கள். உங்கள் பதில் என்னவா யிருக்கும்? இயேசு உண்மையாகவே என்னைத்தான் போகச் சொல்கிறார் என்று நீங்கள் நினைப்பீர்களா? அப்படியென்றால், பவுலோடு சேர்ந்து *"என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு "* என்று சொல்லத் தயாரா? (பிலிப். 4:13). இந்த வேலையை எதிர்கொள்ளும் போது ஆதிக்கிறிஸ்தவர்களின் பதில் என்னவா யிருந்தது என்பதைப் பவுல் விளக்குகிறார். " *நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும், ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடை கிறதில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப் பட்டும் மடிந்து போகிறதில்லை "* (2 கொரி. 4:8,9). நீங்கள் புறப்பட்டுப் போய் என்பது உண்மையாகவே தனிப்பட்ட முறையில் உங்களைக் குறிக்கிறதாக நீங்கள் உணர்ந்தால் உங்கள் பதில் என்னவா யிருக்கும்?

நீங்கள் புறப்பட்டுப் போங்கள் என்பது பிரதான கட்டளையின் ஒரு பகுதியாக இருக்கிறது. இது புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களுக்கு புறப்பட்டுப் போய் உபதேசிக்கும்படியான கட்டளையாகும். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் "நீங்கள் போங்கள்" என்றால், நானும் போக வேண்டும் என்பதை ஒத்துக் கொள்வார்கள். ஆனால், அவர்களுடைய கிரியைகளோ நேர் எதிராக இருக்கிறது.

கிறிஸ்தவர்களாகிய நாம் புதிய ஏற்பாட்டின் பிரதானக் கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டுமென்றால் இரண்டு பிரதான காரியங்களை நிறைவேற்ற வேண்டும். முதலாவது, கிறிஸ்துவுக்குள் வராத பாவிகளுக்கு போதித்து ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும். இரண்டாவது, தவறு செய்கிற அல்லது உண்மையில்லாத கிறிஸ்தவர்களை மறுபடியும் பழைய நிலைக்குக் கொண்டு வர வேண்டும். " இயேசு நமக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ண வேண்டும். நண்பர்களே, இழந்து போனவர்களை சந்திக்க இப்போதே நம் வேலையை தொடங்க வேண்டும் ஆயத்தமா?

செயலில் கிறிஸ்தவம்

# நீங்கள் ஒரு செயல்படுகிற அங்கத்தினரா?

நீங்கள் இல்லையென்றால் வருத்தப்படும் அளவுக்கு
செயல்படுகிற அங்கத்தினராக இருக்கிறீர்களா?
அல்லது உங்கள் பெயர் பட்டியலில் இருப்பதினால்
திருப்தி அடைகிறவர்களாய் இருக்கிறீர்களா?

நீங்கள் கூட்டங்களில் கலந்து கொண்டு சக அங்கத்தினரோடு
சேர்ந்து செயல்படுகிறீர்களா?
அல்லது வீட்டில் இருந்து கொண்டு
பிறர் காரியங்களைக் குறை சொல்லுகிறவர்களாய் இருக்கிறீர்களா?

சபையின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உதவும்படி
ஆக்கப்பூர்வமான பங்கு வகுக்கிறீர்களா?
அல்லது வெறுமனே அங்கத்தினராக இருந்தால்
போதுமென்று திருப்திபடுகிறவர்களாய் இருக்கிறீர்களா?

வியாதியாயிருக்கிற அங்கத்தினர்களை சந்திக்க
எப்போதாவது போயிருக்கிறார்களா?
அல்லது அவர்கள் ஏன் போகவில்லை என்று
பிறரைக் குறை பேசுகிறவர்களாய் இருக்கிறீர்களா?

வேலை செய்வதற்கான பணி ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது
அது நடைமுறைப்படுத்தப்பட்டால் வெற்றி நிச்சயம்
அது எல்லோருடைய ஒத்துழைப்பால்
சிறப்பாகச் சாதிக்கப்பட முடியும்.

ஆக, ஒவ்வொரு கூடுகையிலும் பங்கு பெறுங்கள்
கைகளையும், இருதயங்களையும் கோர்த்து வேலை செய்யுங்கள்
வெறுமனே அங்கத்தினராக மாத்திரம் இராதேயுங்கள்
பங்கெடுத்து சுறுசுறுப்பாகச் செயல்படுங்கள்

கிறிஸ்தவனே, இது குறித்துச் சிந்தியுங்கள்
செயல்படப் போகிறோமோ அல்லது இல்லையா?
நீங்கள் ஒரு செயல்படும் அங்கத்தினரா?
அல்லது சும்மா போக்கும், வரத்துமாயிருப்பவரா?

# நல்ல உக்கிராணக்காரனாக இருங்கள்

# *Be a Good Steward*

*V. Daniel Durairajan*

"மேலும், உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப் படுவது அவனுக்கு அவசியமாம் " (1 கொரி. 4:2).

**I. ஓர் உண்மையுள்ள வேலைக்காரனாக இருங்கள் :** (Be a Faithful Worker)

தேவன் மனிதனை சிருஷ்டித்த பொழுது வேலை செய்தல் என்பது அவனுடைய அன்றாட பொறுப்பு நிறைந்த வாழ்வின் ஒரு குறிப்பிடும்படியான அம்சமாக இருந்தது. ஆதியாகம புத்தகத்தில் ஆதாமை உண்டாக்கி ஏதேன் தோட்டத்தில் வைத்தபொழுது, தேவன் அதைப் பண்படுத்தவும், பாதுகாக்கவுமே வைத்தார் (ஆதி. 2:15). ஆதாமுடைய ஆளுகை பூமியில் வேலை செய்தலோடு துவங்குகிறது. மாறாக, தேவன் ஒரு கயிற்று கட்டிலைப் போட்டு நீ இதில் படுத்துத் தூங்கு என்று சொல்லவில்லை.

வேதாகம ஒழுக்க நெறிக் கோட்பாடுகளிலே ஒன்று வேலை செய்தல். கிறிஸ்தவனுடைய சுவிசேஷத்தின் வல்லமையானது அவனுடைய அல்லது அவளுடைய வேலை செய்யும் சிந்தையோடு பரிசோதித்துப் பார்க்கப்படுகிற தென்று (எபேசி. 6:5) சொல்லுகிறது. " வேலைக்காரரே, நீங்கள் கிறிஸ்து வுக்குக் கீழ்ப்படிகிறதுபோல சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர் களுக்கும் பயத்தோடும், நடுக்கத்தோடும் கிறிஸ்துவின் ஊழியக்காரராக மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள் ".

உன் எஜமானனுக்கு கடினமாக உழைத்தல் என்பது ஆண்டவருக்கு கடினமாக உழைத்தலாகும். சுவிசேஷத்தினை எதிர்க்கும் இந்த உலகம் கூட கடினமாக உழைப்பவர்களை வரவேற்கும். ஒருவேளை உன்னுடைய எஜமானன் உன்னுடைய விசுவாசத்தை துவக்கத்தில் மதிக்காதவராக இருந்தாலும், உன்னுடைய கடின உழைப்பினை கண்டிப்பாக மதிப்பவராக இருப்பார். இதன் விளைவாக உன்னுடைய சுவிசேஷத்தை அறிவிக்கும் வாய்ப்பு உனக்கு நீ வேலை பார்க்குமிடத்தில் பிரகாசமாகக் காணப்படும்.

நீதிமொழிகள் புத்தகத்தில் ஒருவன் ஆஸ்தியை எப்படி சம்பாதித்துக் கொள்ள முடியுமென்று அநேக வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நீதி. 14:23ல் " சகல பிரயாசத்தினாலும் பிரயோஜனமுண்டு; உதடுகளின் பேச்சோ வறுமையை மாத்திரம் தரும் ". மீண்டுமாக, நீதி. 28:19,20 "தன்

நிலத்தைப் பயிரிடுகிறவன் ஆகாரத்தால் திருப்தியாவான், வீணரைப் பின்பற்று கிறவனோ வறுமையால் நிறைந்திருப்பான் " என்று சொல்லியிருக்கிறது.

ஒரு பழங்காலக் கூற்று " புத்தியாய் வேலை செய்! கடினமாய் செய்யாதே! என்பது. ஆனால், நம்முடைய இன்றைய கலாச்சாரத்தில் இதுவே இப்படியாக சொல்லப்படுகிறது. "கடினமாகவும், புத்தியாகவும் வேலை செய்! " என்பதாகும்.

பெரும்பாலும் அநேகருக்கு பொருளாதார நெருக்கடிகள் வருவதற்குக் காரணம் அவர்களுடைய தவறான தெரிவு செய்தல் மட்டுமல்ல, மாறாக, அவர்கள் கூடியமட்டும் கடினமாக உழைக்காமை என்று சொல்லலாம். உழைத்தால் உயர்வு உண்டு.

## II. மிகுந்த ஜாக்கிரதையோடு திட்டமிடுங்கள் (Be a Careful Planner)

ஒரு உண்மையுள்ள வேலைக்காரனாக இருப்பதைப் பார்க்கிலும் ஒரு கிறிஸ்தவன் நன்கு தெளிவாக திட்டமிடுகிறவனாக இருக்க வேண்டும். இதில் சில தீர்மானங்களை எடுக்க வேண்டிய நிலைப்பாடும் அவனுக்கு உண்டு. அவைகளைப் பார்ப்போம்.

## III. நீங்கள் வாழ்வதற்காக உண்ணுங்கள், உங்களையே உண்பவைகளுக்காக வாழாதீர்கள் (Don't be Consumed by Consumption)

இன்றைய நாகரீக உலகில் இந்தப் பொருட்களை வாங்கி அதை உபயோகித்தல் என்பது ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. சில தேசங்களின் பொருளாதாரமே இதை மையப்படுத்தி ஏற்றங்களையும், இறக்கங்களையும் கண்டு வருகிறது. நீங்கள் உபயோகிப்பாளராக இருப்பது தவறல்ல. ஆனால், மதிகேடனான மனிதனைப் பாருங்கள். அவன் தனக்குண்டான எல்லாவற்றையும் செலவழித்துப் போட்டுவிட்டு எதிர்காலத்துக்கு ஒன்றையும் வைக்காமல் போகிறான் (நீதி. 21:20). எல்லாவற்றையும் செலவழித்து போடுவதற்கு எந்தக் காரணத்தையும் காரணமாக சொல்லமுடியாது. நீ சம்பாதிப்பவைகளுக்கு மேலாகச் செலவழித்து விட்டு கடன் வாங்கி கடன்காரனாக வாழுதல் தேவனுக்கு விருப்பமல்ல. வேதாகமம் இருப்பதைக் கொண்டு திருப்தியாக வாழுதலையே வலியுறுத்துகின்றது.

## IV. நீங்கள் அடிமைபடுவதற்கேதுவாக கடன்வாங்காதீர்கள் (Don't borrow to put yourself into bondage)

நீங்கள் ஒருவேளை இந்தப் பழமொழியை கேட்டிருப்பீர்கள் "கடன் வாங்காதே! கடன் கொடுக்காதே!!." இது வேதாகம வசனமல்ல, ஒரு மனிதன் வாயிலிருந்து வந்து வார்த்தைகள். ஆனால், கடன்படுவதைப் பற்றி பரிசுத்த வேதாகமத்தில் ஒரு வசனமுண்டு அது (நீதி. 22:7). ".....கடன்

வாங்கினவன் கடன் கொடுத்தவனுகு அடிமை". கடன் வாங்குவதும், அடிமைத் தனமும் ஒன்றோடொன்று தொடர்புடையதாக இருக்கிறது. நீங்கள் எவ்வளவு அதிகமாக கடன் வாங்குகிறீர்களோ அவ்வளவு அதிகமாக அவர்கள் உங்களுடைய வாழ்க்கையை கட்டுபடுத்துகிறவர்களாக ஆகிவிடுவார்கள்! எவ்வளவு துக்கமான ஒரு காரியம் பாருங்கள்!

பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேலர்களுடைய வட்டித் தொழிலைப் பற்றி தேவன் பேசுகிறார். குறிப்பாக வட்டி விகிதாச்சாரங்களைப் பற்றி சொல்லுகிறார் (லேவி. 25:36,37). மேலும், யூதர்கள் ஒருவருக்கொருவர் பணம் கடன் கொடுக்கும்பொழுது அந்த கடன் வட்டியில்லாமல் கொடுத்தல் வேண்டும். ஆனால், புற சாதியாரிடத்தில் வட்டி பெறலாம். ஆனால், சங்கீதக்காரன் 15ம் சங்கீதத்தில் 5ம் வசனத்தில் சொல்லுவது, " யார் தேவனுக்கு முன்பாக வந்து நிற்க கூடுமென்றால், தன் பணத்தை வட்டிக்கு கொடாதவன் " என்கிறார் (எசே. 18:8)ல் நீதிமானைப் பற்றி சொல்லும் போது தன் பணத்தை ஏழைகளுக்கு வட்டியில்லாமல் கொடுப்பவன் என்கிறார். ஆனால், அந்த யூதமக்களிடம் ஊழல் பெருகிப் போனது அவர்கள் தேவன் சொன்னபடி நடக்கவில்லை. தேவன் உங்களை கண்டிக்கின்றார். எசேக். 22:12-ல் " இரத்தஞ் சிந்தும் படிக்குப் பரிதானம் வாங்கினவர்கள் உன்னில் இருக்கிறார்கள். நீ வட்டியையும் பொலிசையையும் (அதிகமான வட்டி, மீட்டர் வட்டி, கந்து வட்டி) வாங்கி பொருளாசையினால் உன் அயலானுக்கு இடுக்கண் செய்து என்னை மறந்து போனாய் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் ".

வேதாகமம் நியாயமான கடன் வாங்குதலைப் பற்றியும், வரன்முறைக் குட்பட்ட வட்டி கொடுப்பதையும், வாங்குவதையும் தடை செய்வது கிடையாது. அது பெரும்பாலும் அரசு வங்கிகளிலும் சில நிறுவனங்களிலும் உண்டு.

### V. உன் வாழ்வின் வெற்றிக்காக ஆத்துமாவை விற்று போடாதே (நீதி. 28:19,20) (Don't Sell your Soul for Success)

ஒரு தவறான வழியில், மிகவும் கேவலமான தந்திரத்தில் சொத்து சம்பாத்திப்பதை இது கண்டிக்கிறது. தன்னுடைய மனதில் ஒரு தெளிவான திட்டம் கிடையாது. ஆகவே, அவர்கள் பணம் சம்பாதிக்க சூதாட்டம் சீட்டு கம்பெனிகள் நடத்துவது. வலைதள வியாபாரம் என்று அநேகருடைய அறியாமையை பயன் படுத்தி ஏமாற்றுவது நீதி. 12:11,12ல் சொல்லப்பட்டிருக்கிறது. " தன் நிலத்தைப் பயிரிடுகிறவன் ஆகாரத்தினால் திருப்தியடைவான். வீணரைப் பின்பற்றுகிறவனே மதியற்றவன் ". " துன்மார்க்கன் துஷ்டருடைய வலையை விரும்புகிறான். நீதிமானுடைய வேர் கனி கொடுக்கும்". நீதிமொழிகள் புத்தகத்தில் எங்கும் காணப்படுவது. துன்மார்க்கன் தவறான வழிமுறைகளை பின்பற்றி ஆஸ்தி சம்பாதிப்பதைப் பற்றியே பேசுகிறது நீதி. 15:27ல் பரிதானம்

வாங்குவதும் நீதி. 2:10,23 கள்ளத்தராசை பயன்படுத்துவது (நீதி. 23:10)ல் திக்கற்ற பிள்ளைகளின் வருமானத்தைத் திருடுவது சொல்லப்பட்டிருக்கிறது. (சகரி. 7:10)ல் கூட விதவைகளையும், திக்கற்ற பிள்ளைகளையும் வைத்து விடுதிகள் நடத்தி அவர்களுடைய ஆஸ்திகளையும் திருடி சுகபோகமாக வாழ்வது. இப்படிப்பட்டவர்களுக்குரிய தண்டனை கண்டிப்பாக உண்டு. வேதம் எச்சரிக்கிறது

உன்னுடைய பொருளாதார நிலைப்பாடு உன்னுடைய கடின உழைப்பிலும் நீ தெரிவு செய்த வேலையின் முழு அறிவுத் தெளிவிலும் தான் உண்டு நீதி. 24:3,4ல் வாசிக்கலாம், வீடு ஞானத்தால் (By wisdom) கட்டப்பட்டு விவேகத்தால் (By understanding) நிலை நிறுத்தப்படும். அறிவினாலே (By knowledge) அறைகளில் அருமையும் இனிமையுமான சகலவிதப் பொருள்களாலும் நிறைந்திருக்கும்.

ஞானம் (wisdom), விவேகம் (Understanding), அறிவு (Knowledge) இவை மூன்றும் இணைந்து செயல்படும் பொழுது ஓர் உறுதியான பொருளாதார கட்டமைப்பை உங்களுக்கு அவைகள் கொடுத்து எந்தவிதமான வியாபாரமாக இருந்தாலும், தொழிலாக இருந்தாலும் வேலை வாய்ப்பாக இருந்தாலும் உன்னை சுடர் விட்டு பிரகாசிக்கச் செய்யும், கண்டிப்பாக உயர்த்தும்.

வேதாகமத்தில் எந்த இடத்திலும் ஏமாற்றி, நேர்மையற்ற, உண்மையில்லாத வழிகளில் ஆஸ்தியை சம்பாதிக்கும் வாக்குத்தத்தம் கிடையாது.

நிறைவாக : அழிந்து போவதற்கான ஆயத்தம் என்பது சாதாரண ஒரு காரியமல்ல. கிறிஸ்தவனுடைய ஒரே நம்பிக்கை தேவன். அழிந்து போகிற ஆஸ்தியல்ல (1 தீமோ. 6:17; 4:10) வாசித்துப் பாருங்கள்.

கிறிஸ்தவர்கள் புரிந்து கொள்ள வேண்டியது, அவர்களுடைய முழுமையான பாதுகாப்பு தேவனிடத்தில் மட்டுமே இருக்கிறது. ஆஸ்தியிலில்லை. மேலும், நம்முடைய சரீரத்தையும், பொருளாதாரச் சூழ்நிலைகளையும் கட்டுபடுத்தும் சர்வ வல்லமை பரலோகத்தின் தேவனிடத்திலிருக்கிறது என்பதைச் சரியாகத் தெரிந்து கொண்டு தேவனிடத்தில் அதிகமாய் ஆஸ்தியை சேகரித்து வைக்க வேண்டும் (மத். 6:19,21; லூக். 12:15).

ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்த போது உங்களுக்குக் கட்டளையிட்டோமே. (1 தெச. 3:10)

# நியாயத்தீர்ப்பு நாளுக்கு நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா?

## Are you Ready for the Judgment Day?

*P.C. Philomon Raja*

பிரியமானவர்களே! உங்கள் யாவரையும் இவ்வுலகத்தை நீதியாய் நியாயந்தீர்க்கப்போகிற நீதியுள்ள நியாதிபதியாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்தி இவ்விதழ் மூலம் சந்திப்பதிலே மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். தினந்தோறும் நம்முடைய வரவு செலவை கணக்குப் பார்க்கின்றோம். நம்முடைய பிரயாசங்களை கணக்குப் பார்க்கின்றோம் மற்றும் நேரத்தை கணக்குப் பார்க்கின்றோமல்லவா? இதைப் போலத்தான், நம்மைப் படைத்த நம்முடைய கடவுள், அவர் நமக்குக் கொடுத்த இந்த வாழ்வை கணக்குப் பார்க்கும் செயலே நியாயத்தீர்ப்பு. இதற்கு நீங்கள் ஆயத்த மாயுள்ளீர்களா? அல்லது ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறீர்களா? நீதி கையளிக்கப்பட்டு தவறுகள் யாவும் நேர்ப்படுத்தப்படும் இந்த உச்சகட்டமான நாளை நோக்கி வரலாறு தயக்கமின்றி நகர்ந்துக் கொண்டிருக்கிறது. மானிடர் யாவரும் சந்திக்க வேண்டிய நாள் அது. அந்த நாளுக்கு நீங்கள் ஆயத்தமா யிருக்கிறீர்களா? அதைப் பற்றி படிக்க நம் மனதை ஆயத்தப்படுத்துவோம்.

### I நியாயத்தீர்ப்பு தப்பிக்க இயலாததாக உள்ளது (ரோமர் 2:1,5) One Cannot Escape Judgment

### அ. தேவன் நீதியின்படியே நியாயந்தீர்ப்பார்

இன்னொருவருடைய வாழ்வில் உள்ள பாவங்களைக் காண்பது மிகவும் சுலபமாக உள்ளது. அதையே ஒருவர் தனக்குள் இருப்பதைக் காணுதல் என்பது மிகவும் கடினமாக உள்ளது (ரோமர் 2:1,3; அப். 17:31).

தேவனுடைய நீதிமன்றத்தில் தவறான புரிந்துக்கொள்ளுதல், தவறான பிரதிநீதித்துவப்படுத்துதலோ, நீதியைத் தவறாக எடுத்துச் சொல்லுதலோ மற்றும் தவறுகள் எதுவுமே இராது. மேலும், யாவும் சத்தியத்தின்படியே இருக்கும். எவரொருவரும் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்க இயலாது. (2 கொரி. 5:10).

### ஆ. மனம் வருந்தாதவர்களை தேவன் நியாயந்தீர்ப்பார்

தேவன் மனம்திரும்பும்படி அவர்களுக்கு நேரம் மற்றும் வாய்ப்புகளை கொடுத்தார். அவர்களோ தேவனுடைய தயவை தேவன் தங்களது பாவங்களை காணாமல் விட்டுவிட்டார் என்பதற்கான அடையாளமாக எடுத்துக் கொண்டார்கள். (ரோமர் 2:4; 2 பேதுரு 3:9)

ஒருவர் பாவங்களை செய்கிறார்; ஆனால், உடனே அவரை தேவன் அந்த இடத்திலேயே அடித்து வீழ்த்துவதில்லை. ஆகையால் அவரோ, தேவனுக்கும் தனக்கும் உள்ள உறவு சரியாக இருக்கிறது என்று நினைத்துக் கொள்கிறார். அதனால் மனம் வருந்தவோ, திருந்தவோ அவர் விரும்பவில்லை. காரணம் நியாயத்தீர்ப்பு நாளைப் பற்றிய தவறான எண்ணமே. பிரியமானவர்களே, அந்த (நியாயத்தீர்ப்பு) நாள் எப்பொழுது வருமென்று தெரியாது; ஆனால் நேற்றைவிட இன்று வெகு அண்மையில் உள்ளது.

### இ. தேவன் ஒவ்வொருவரையும் நியாயந்தீர்ப்பார்

குற்றம் செய்தவர் மனிதர்களுடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பித்துக் கொள்ளலாம். தண்டனை விதிக்கப்பட்டாலும் கூட, அவர்கள் சிறைத் தண்டனையில் இருந்து வழக்கறிஞர்கள் மூலமாக தப்பித்துக்கொள்ளலாம் (ரோமர் 2:3). தேவனுடைய நியாயத்தீர்ப்பில் எந்த ஒரு பாவமும் கண்டறியப் படாமல் போகாது (எபி. 4:13; வெளி. 20:12); எந்தப் பாவியும் நியாயத்தீர்ப்பு நாளில் இல்லாது போகமாட்டார் (வெளி. 20:12; யோவான் 5:28,29).

## II நியாயத்தீர்ப்பு வழக்காட இயலாததாக இருக்கும் (ரோமர் 2:6,11) No Argument during Judgment

### அ. தேவன் நமது கிரியைகளுக்கு தக்கவாறு நியாயந்தீர்ப்பார்

கிரியைகள் விதைகளைப் போன்றுள்ளன. இப்பொழுது நீங்கள் அவற்றை விதைக்கிறீர்கள்; பிற்பாடு அவற்றை நீங்கள் அறுவடை செய்வீர்கள் (ரோமர் 2:6,8; 2 கொரி. 5:10; கலா. 6:8,9).

### ஆ. விதிவிலக்குகள் எதுவும் இராது

விதிவிலக்குகள் எதுவும் இருக்குமா? இல்லை. " பொல்லாங்கு செய்கிற எந்த மனுஷ ஆத்துமாவிற்கும் தண்டனை உண்டு ". (ரோமர் 2:9,11; வெளி. 20:12).

## III நியாயத்தீர்ப்பு பட்சபாதமற்றதாக இருக்கும் (ரோமர் 21:12,15) No Partiality at Judgment

### அ. புறஜாதியாரும், யூதர்களும் நியாயந்தீர்க்கப்படுவர்

நியாயப்பிரமாணம் இல்லாமல் செய்கிறவர்களுக்கு நியாயப்பிரமாணமில்லாமல், நியாயப்பிரமாணத்துடன் செய்கிறவர்களுக்கு நியாயப்

பிரமாணத்தின்படி நியாயத்தீர்ப்பு இருக்கும் (ரோமர் 2:12,13). நாம் சிலரிடத்தில் கனிவாக, சிலரிடத்தில் கடினமாக நடந்துக்கொள்கிறோம். ஆனால், தேவன் பட்சபாதமில்லாதவர் (உபா. 10:17; 1 பேதுரு 4:17; 2 தெச. 1:7,9)

**ஆ. எல்லாரும் நியாயமாய் நியாயந்தீர்க்கப்படுவோம்**


எல்லாருக்கும் தேவனுடைய நீதி அவசியமாயிருக்கிறது (ரோமர் 2:14,15; 14:10,12).

**IV நியாயத்தீர்ப்பு தவிர்க்க இயலாததாக இருக்கும் (ரோமர் 2:6,11) Judgment cannot be Ignored**

அந்தரங்கமான என்பது மற்றவருக்கு தெரியாத நமது சிந்தனைகள், நோக்கங்கள், கேட்கப்படாத வார்த்தைகள் மற்றும் செயல்களை குறிக்கிறது (ரோமர் 2:16; அப். 17:31). சிலர் அன்பான தேவன் எவரொருவரையும் நரகத்திற்கு அனுப்பமாட்டார் என்று நம்புகின்றனர். இயேசு நம்முடைய இரட்சகர் மட்டுமல்ல, நம்முடைய நியாயாதிபதியும் அவரே (யோவான் 5:22).

**V நியாயத்தீர்ப்பில் வெற்றி பெற .... (ரோமர் 2:16) To Succeed in Judgment**

1. ஆவிக்கென்று விதையுங்கள் ( சபை கூட்டங்களில் தவறாது பங்கு பெறுங்கள், பைபிள் படியுங்கள், ஜெபியுங்கள்) கலா. 6:8,9
2. நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாதிருங்கள் (ஏழை, திக்கற்றவர்களுக்கு உதவுங்கள்) ரோமர் 2:7
3. தினசரி ஆத்தும ஆதாயம் செய்யுங்கள் (தானி. 12:3)
4. இன்றே மனந்திரும்புங்கள் (லூக். 13:1,3)
5. பரிசுத்தமாக, தேவ பக்தியாய் வாழுங்கள் (2 பேதுரு 3:11)



# உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்

# Examine Yourselves

***B. Arjunan***

ஒரு மனிதனுடைய வாழ்வில் தற்சோதனை அவசியம். நம்மை நாமே முதலாவது சோதித்து அறியவேண்டும். எந்த ஒரு பயிற்சிக்கும் தற்சோதனை செய்து கொள்கிறோம். அப்பொழுதே தேர்வில் வெற்றி பெற முடியும். தற்சோதனை செய்யாமல் தேர்வில் வெற்றியடைவது என்பது கூடாத காரியம். ஆகையால், அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு எழுதும் கடிதத்தில் " நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே பரீட்சித்துப்பாருங்கள். இயேசு கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள் " என்று எழுதுகிறார் (2 கொரி. 13:5). ஒரு மனிதனுடைய விசுவாச வாழ்க்கை அவனை இரட்சிப்புக்கு நேரே வழிநடத்துகிறது. ஆகையால், ஒவ்வொருவருக்கும் விசுவாசம் என்பது அவசியம். இந்த விசுவாசத்தை நாம் கிரியைகளின் மூலமாக காண்பிக்க முடியும். கிரியையில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது. " ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" எனக் காண்கிறோம் (கலா. 3:6). காணாதவைகளை நம்புவதே விசுவாசம். இந்த விசுவாசம் ஆபிரகாமிடம் இருந்தது. அது நமக்குள்ளும் இருக்கும்போது நாமும் ஆபிரகாமின் பிள்ளைகளாக இருப்போம். கர்த்தரும் இவ்வருடத்தில் நம்மோடிருப்பார்.

நம்முடைய முற்பிதாக்கள் " விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள். நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள். சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள். அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன் கொண்டார்கள்; யுத்தத்தில் வல்லவர்களானார்கள். அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள் " என்று எபிரெய ஆசான் குறிப்பிடுகிறார் (எபி. 11:33,34). இவர்கள் எல்லோரும் விசுவாசத்தினாலே எல்லாவற்றையும் முறியடித்தார்கள். இன்றைக்கு நமக்குள் அந்தவிதமான விசுவாசம் இருக்குமேயானால் நாமும் ராஜ்யங்களை ஜெயிக்க முடியும். மிகவும் சாதாரண விஷயங்களை நம்மால் மேற்கொள்ளமுடியாவிட்டால் பின்பு எப்படி நம்

முற்பிதாக்களைப்போல அக்கினியின் உக்கிரத்தை அவிக்கப்போகிறோம். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற அன்பு வாசகரே! உன்னை நீயே சோதித்துப் பார். பெரும்பாடுள்ள ஸ்திரீயைப் பற்றி படித்திருப்பீர்கள். அவள் தன் உள்ளத்தின் ஆழத்தில் ஆண்டவர் இயேசுவை விசுவாசித்தாள். எப்படி யென்றால் அவரால் கூடாதது ஒன்றுமில்லை. அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும், தான் எப்படியாவது தொட்டு இந்த பெரும்பாட்டிலிருந்து விடுதலையாக வேண்டும் என்ற எண்ணம் அவளுக்குள் இருந்தது. அவ்வளவு திரளான கூட்டத்தின் மத்தியில் இருந்த இயேசுவை தொட்டு பரிபூரண சுகமானாள். ஆகையால், ஆண்டவர் இயேசு அவளைப் பார்த்து: "மகளே, திடன்கொள் உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது; சமாதானத் தோடே போ என்றார் " (லூக். 8:48). அவளுடைய விசுவாசம் அவளுக்கு சுகத்தைக் கொடுத்தது. உங்களுக்குள்ளும் அந்தவிதமான நம்பிக்கை இருக்கு மேயானால் நீங்களும் குணமாக்கப்படுவீர்கள். உங்களுடைய விசுவாசம் எப்படிப்பட்டதென்று முதலாவது சோதித்து அறியுங்கள்.

இரண்டாவது, " கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று சோதித்துப் பாருங்கள் " (எபே. 5:10). நாம் யாருக்குப் பிரியமாய் வாழ்ந்து கொண்டிருக்கி றோம்? நமக்காகவே வாழாமல் கர்த்தருக்குப் பிரியமானது எது என்பதை வேதாகமத்தின் துணை கொண்டு அறிந்து செயல்படுவோமானால் நாம் அதிகமாக ஆசீர்வதிக்கப்படுவோம். பொதுவாக " விவாகம் பண்ணினவன் தன் மனைவிக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, உலகத்திற்குரியவை களுக்காகக் கவலைப்படுகிறான்.... அதுபோல, விவாகம் பண்ணினவள் தன் புருஷனுக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, உலகத்திற்குரியவை களுக்காகக் கவலைப்படுகிறாள் " என்று பவுல் குறிப்பிடுகிறார் (1 கொரி. 7:33, 34). இந்த விதமான கவலை உலகத்தில் உள்ள எல்லா குடும்பங்களிலும் இருக்கிறது. இருவரும் சேர்ந்து கர்த்தருக்கு எப்படிப்பிரியமாயிருக்கலாம் என்ற முடிவுக்கு வரவேண்டும். அப்பொழுது தான் அக்குடும்பங்கள் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ந்து பெருக முடியும். கர்த்தருக்குப் பிரியமானதையும் செய்ய முடியும். நாம் தேவனுக்குச் சொந்தமானவர்கள். நாம் நம்முடைய வர்கள் அல்ல என்பதை முதலாவது நாம் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். " கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால், தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும், உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் " என்கிறார் பவுல் (1 கொரி. 6:20). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்டுக்கொள்ளப்பட்டவர் களாக இருக்கிறோம். பிதாவாகிய தேவன் இருளின் அதிகாரத்தினின்று நம்மை மீட்டு தமது அன்பின் குமாரனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கப் பண்ணியிருக்கிறார். ஆகையால், தேவனுக்குச் சொந்தமான இந்த

சரீரத்தினாலும், ஆவியினாலும் நாம் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். இது கர்த்தருக்குப் பிரியமானது. தேவன் மனிதனுடைய கைகளில் பணி விடைகளை ஏற்றுக்கொள்ளார் என்பதை அறிவீர்களா! ஆனால், மனிதனுடைய எண்ணமெல்லாம் அவருக்காக ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டும். கைநிறைய காணிக்கை போட வேண்டும் அல்லது விலையேறப்பெற்ற ஒரு கட்டிடத்தை அவருக்குக் கட்ட வேண்டுமென்பதே. அன்பு நேயரே, அந்த இடத்தில் தேவன் வந்து வாசம் செய்வாரா? அவர் உங்கள் உள்ளத்தில் வந்து வாசம் செய்ய விரும்புகிறார். நீங்களே தேவனுடைய ஆலயமாயிருக் கிறீர்கள். கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் செய்கிற தில்லை.

நம்மை நாமே சோதித்து அறிய வேண்டிய பகுதியில் மற்றொன்று : கர்த்தருடைய பந்தி : பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதிய நிருபத்தில் இதை தெரியப்படுத்துகிறார். " எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன்" என்கிறார் (1 கொரி. 11:28). நாம் எதற்காக கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்கிறோம் என நாம் நிதானித்து அறிய வேண்டும். சிலர் எதற்காக பந்தியில் பங்கு கொள்கிறோம் என்று அறியாது அதை ஒரு புனிதமாகவும், பாரம்பரிய சடங்காகவும் அனுசரிக்கின்றனர். நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்ளும் போது; ஆண்டவர் எனக்காக இரத்தம் சிந்தி, என்னை பாவத்திலிருந்து மீட்டு எடுத்துள்ளார். நான் அவருக்குப் பிரியமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறேனா? என்னுடைய சரீரத்தை வேசியின் சரீரமாக வைத்துள்ளேனா? நான் குற்றமுள்ள மனச்சாட்சியுடையவனாக வாழ்ந்து கொண்டு வருகின்றேனா? இப்படி அநேக கேள்விகளை நமக்குள் கேட்டு, நம்மை நாமே சோதித்து அறிந்தவர்களாக அதில் பங்கு கொள்ள வேண்டும். அநேகர் அதில் பங்கு கொள்ள எனக்குத் தகுதியில்லை என்று கர்த்தருடைய பந்தி சமயத்தில் வெளியே எழுந்து போய் விடுகிறார்கள். அதுவும் தவறான ஒன்றாகவே இருக்கிறது. ஏனெனில், என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான். நானும் அவனில் நிலைத்திருக்கிறேன் என்கிறார் (யோவான் 6:56). நாம் மீண்டும் மீண்டும் பாவம் செய்வோமானால் அவரை மீண்டும் மீண்டும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறோம் என்று தான் பொருளாகி விடும்.

ஆகையால், பவுல் சொல்வதைப் போல; " நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம்

ஆளாதிருப்பதாக. நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்" (ரோமர் 6:13). நீங்கள் உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுத்திருக்கிறீர்களா? ஆண்டவருக்கு ஒப்புக் கொடுக்கும்போது முழுமையுமாக ஒப்புக்கொடுக்கப் பழகுங்கள். இன்றைக்கு அநேகர் பாதியை உலகத்திற்கும், பாதியை தேவனுக்கும் ஒப்புக் கொடுக்கிறார்கள். உன் அதிபதிக்கு ஒரு பழத்தில் பாதியை கொடுத்துப்பார். அப்பொழுது அவன் அதை ஏற்றுக்கொள்வானா? உலக அதிபதிக்கு நாம் நலமான காரியத்தை கொடுக்க அறிந்திருக்கும் போது நம்மை உண்டாக்கின தேவனுக்கு நம்மை முழுவதுமாக அர்ப்பணிக்க வேண்டாமா? நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவ சரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 6:6).

ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின என்று சொல்லப்பட்ட வசனத்தின்படி புது சிருஷ்டியாயிருக்கிறான். நீங்கள் புதுசிருஷ்டியாயிருக்கிறீர்கள் ஆகையால், உங்களுடைய செய்கைகள் எல்லாம் புதியவைகளாகவே இருக்கட்டும். "என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜன பானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்" என காண்கிறோம் (1 கொரி. 11:29).

நாம் நம்மை முதலாவது சோதித்து பார்க்க வேண்டிய மூன்று காரியங்களை இச்செய்தியின் வாயிலாக தியானித்தோம். ஒன்று நாம் சோதித்து அறிய வேண்டும். இரண்டாவது கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று சோதித்து அறிய வேண்டும். மூன்றாவது தன்னைத்தானே சோதித்து அறிந்து கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்ள வேண்டும். இந்த மூன்று காரியங்களில் நீங்கள் உங்களை சோதித்து அறியுங்கள். எதில் நாம் குறைவாக இருக்கின்றோமோ அதை நம்முடைய வாழ்க்கையில் சரி செய்து கொள்ள வேண்டும். பூமியில் நமக்கு சரி செய்து கொள்வதற்கான கால அவகாசம் அதிகமாக இருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொண்டு கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்ய நாடுங்கள்.

**வாழத் தேவையானவைகள் எல்லாம் அதிகமாக இருந்தும், வாழ்வதற்கென்று ஒன்றுமில்லாதவர்களுடைய வாழ்க்கை பரிதாபகரமானது.**


# ஒற்றுமைக்காக வேண்டுகோள்

# A Plea For Unity

*Kenneth Tipton*

> "சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு ; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும் எல்லோரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்" (எபே 4 :3-5).

எபே 4:3-5 வசனப் பகுதியை நாம் ஆராய்ந்து பார்க்கும் போது, அதன் நோக்கம் சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு எல்லா முயற்சி களையும் எடுக்க வேண்டும் என்பது நமக்கு விளங்குகிறது. இங்கே பவுல் மார்க்கப்பிரிவினை கூட்டத்தார் மத்தியில் ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக அறிவுரை களை வழங்கியிருக்கிறார் என்று என்னால் நம்ப முடியவில்லை. அதுபோல், மீட்டமைப்பு இயக்கத்தின் பிரிவுகளுக் கிடையே "ஒற்றுமைப் பேச்சு வார்த்தைகளுக்கான" ஆலோசனைகளை வழங்கியி ருக்கிறார் என்றும் என்னால் நம்ப முடியவில்லை. என்னுடைய எண்ணம் என்னவென்றால் வாரந்தோறும் சபையாக கூடி ஒரே சபைக் கட்டிடத்தில் உட்கார்ந்து தேவனை ஆராதிக்கும் சகோதரர்களுக்கிடையே காணப் படும் வேற்றுமைகளை களைந்து ஒற்றுமையாக இருப்பதற்கான வழிகாட்டி தான் இந்த வசனப்பகுதி யாகும். ஒற்றுமைக்கான உண்மை யான அடிப்படை எது? எபே. 4:4-6 வசனங்களில் ஒற்றுமை பற்றி சொல்லப்பட்டிருக்கும் பின்வரும் காரியங்களை ஆழ்ந்து சிந்தியுங்கள்.




## ஒரே சரீரம்

பவுல் கொலோ 1:18 ல் சரீரத்தை சபையாக விவரித் திருக்கிறபடியால் ஒரே சபைக் கட்டிடத்தில் கூடிவரும் இரு சகோதரர்கள் இந்த கருத்தில் எப்படி வேற்றுமையாக இருக்க முடியும்? இந்த

கருத்து "நாம் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம்" என்கிற முடிவால் மேலும் பலப்படுத்தப்படுகிறது (1கொரி 6:16).

## ஒரே ஆவி

இவ்வசனப்பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒரே ஆவி "பரிசுத்த ஆவி" தான். இக்கருத்தில் யாருக்கும் எந்த பிரச்சனையும் இருக்கக் கூடாது. சிலர் தங்கள் வார்த்தைகளையும், பொருள்களையும் பற்றி குழப்பமடைந்து பரிசுத்த ஆவியானவர் வார்த்தை மூலமாக மாத்திரம் கிரியை செய்கிறாரா அல்லது வார்த்தை மூலம் பிராதானமாகக் கிரியை செய்கிறாரா என்று வாக்குவாதம் செய்ய முயற்சிக்கிறார்கள். சபைகளில் தனிப்பட்ட அங்கத்தினர்களிடையே இந்த காரியத்தில் வேறுபட்ட கருத்துக்கள் இருக்கலாம். இருந்த போதிலும் அவர்கள் இணைந்து வேலை செய்கிறார்கள்.

## ஒரே நம்பிக்கை

பரலோகத்தில் நித்திய வீட்டைத் தவிர வேறு எதையாவது நம்புகிற சகோதரனை எனக்குத் தெரியாது. ஏதோ ஒரு முறை ஒரு சகோதரன் மற்றுமொரு சகோதரனைப் பார்த்து பகை உணர்வுடன் "அவரால் பரலோகம் முடியுமென்றால், நிச்சயமாக நான் அங்கே இல்லை என்று நம்புகிறேன்" என்று சொல்லக் கேட்டேன்.

## ஒரே கர்த்தர்

"இயேசுவே கர்த்தர்" என்று பல பாடல்களைப் பாடுகிறோம். இயேசுவே கர்த்தர் என்கிற உண்மையை விசுவாசியாமல் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நம்மால் எப்படி இந்தப் பாடல் வரிகளைப் பாடமுடியும்? நம் சகோதரன் மீதான கோபம் தணியாமல் நம்மால் எப்படிப் பாட முடியும்?

## ஒரே விசுவாசம்

அப் 8 : 26-38 ல் இடம் பெற்றுள்ள அருமையான மன மாற்றச் சம்பவ உதாரணத்தில் பிலிப்பு அந்த எத்தியோப்பிய மந்திரியிடம் ஞானஸ்நானத்திற்கு முன்பு அவசியப்படுகிற விசுவாசத்தை அறிக்கையிடும்படி கேட்டுக் கொண்டார். அங்கே மந்திரியிடமிருந்து பதில் "நான் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன்" என்று வந்தது (அப். 8:37). அவ்வாக்கியத்திலுள்ள அசைக்க முடியாத விசுவாசமும், அது அடையாளப்படுத்துகிற மீட்பின் திட்டமும் "காணப்படாதவைகள்" என்கிற கருத்தோடு கச்சிதமாகப் பொருந்துகிறது. ஏனென்றால், எபி 11:1ல் விசுவாசம் என்பதற்கான மாபெரும் விளக்கம் அவ்விதமாகவே கொடுக்கப்பட்டிருக்கிறது.



# கிதியோன், விசுவாச மனிதன்

## GIDEON, MAN OF FAITH

*Don L. Norwood*

"யெருபாகால்" என்று அழைக்கப்பட்ட கிதியோன், இஸ்ரவேலின் நியாயாதிபதிகளின் காலத்தில் வாழ்ந்தார் (சுமார் 1256 கி.மு.). இவர் மனாசே கோத்திரத்திலுள்ள யோவாசின் குமாரன் இவர் அந்நாட்களில் பெயரிடப்பட்ட நியாதிபதிகளில் ஐந்தாவது நியாதிபதியாக இருந்தார்.

இஸ்ரவேல் தேவனுக்குக் கீழ்ப்படிவதிலிருந்து விலகிச் சென்றது. எனவே, தேவன் அவர்களை ஏழு வருஷம் மீதியானியரின் கையில் ஒப்புக் கொடுத்தார் (நியா. 6:1). அவர்கள் தங்களை காப்பாற்றும்படியாக தேவனை நோக்கி கூக்குரலிட்ட போது தேவன் அவர்களிடத்தில் ஒரு தீர்க்கதரிசியை அனுப்பி அவர்களுடைய கீழ்ப்படியாமையை நினைவுப்படுத்தினார். பின்பு தேவன் கிதியோனிடத்தில் தேவ தூதனை அனுப்பி, ஜனங்களை மீதியானியரிடமிருந்து விடுவிக்க அவனை தெரிந்து கொண்டிருப்பதாகக் கூறினார் (6:11,14).

கிதியோன் ஆரம்பத்தில் சந்தேகப்பட்டு இந்த மாபெரும் வேலையில் கர்த்தர் தன்னோடிருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டியதாயிருந்தது. அவன் தேவனை இரண்டு முறை சோதித்தான், அதெப்படியெனில், முதலாவது மயிருள்ள ஒரு தோலைக் களத்திலே போட்டு வானத்துப் பனி தோலின் மேல் மாத்திரம் பெய்து, பூமியெல்லாம் காய்ந்திருக்க வேண்டுமென்று தேவனிடம் கேட்டுக் கொண்டான். அது அப்படியே ஆயிற்று. இரண்டாவது, முறை அந்த தோல் மாத்திரம் காய்ந்திருக்கவும், பூமியெங்கும் பனி பெய்திருக்கவும் வேண்டுமென்று கேட்டுக் கொண் டான். அதுவும் அப்படியே ஆயிற்று (நியா. 6:36,38).

கிதியோன் மீதியானியர்களோடு போரிட சுமார் 32000 மனுஷரைக் கூட்டினான், ஆனால்; தேவன் அந்த தொகை அதிகம் என்றார் (7:2,8). பயமும்,

திகிலும் உள்ளவர்கள் வீட்டிற்கு திரும்பிப் போகட்டும் என்று கிதியோனுக்கு அறிவுறுத்தினார். அப்பொழுது 22,000 பேர் திரும்பிச் சென்றார்கள். மீதி 10,000 பேர் கிதியோனிடம் இருந்தார்கள். தேவன் அதுவும் அதிகம் என்றார். அப்போது தேவன் கிதியோனிடம் அந்த மனிதர்களை தண்ணீருக்குள் இறங்கச் செய்து தண்ணீரை எடுத்து நாவினாலே நக்கிக் குடிக்கிறவர்களை தனியாக நிறுத்தவும், குடிக்கிறதற்கு முழங்கால் ஊன்றிக் குடிக்கிறவர்களை வீட்டிற்கு அனுப்பும்படியாகவும் கட்டளையிட்டார். இப்போது கிதியோனிடம் 300 பேர் மாத்திரமே மீதமிருந்தனர். ஆனால், சத்துருக்களோ திரளாக இருந்தனர், அந்த பள்ளத்தாக்கு முழுவதும் நிரம்பியிருந்தனர்.

கிதியோன் எதிரி சேனைக் கூடாரத்தில் இரண்டு வீரர்களின் உரையாடலைக் கவனித்தார். அதில் ஒருவன் மற்றொருவனிடம் தன்னுடைய சொப்பனத்தைப் பகிர்ந்து கொள்கிறான். அதில் தேவன் மீதியானியரை தன் கையில் ஒப்புக் கொடுப்பது வெளிப்படுத்தப்பட்டிருப்பதை அறிந்து கொண்டான். அது அவனுக்கு அதிக தைரியத்தைக் கொடுத்தது. அதிலிருந்து அவன் தேவனுடைய திட்டங்களை நிறைவேற்ற தன்னை பக்குவப்படுத்திக் கொண்டான். கிதியோன் தன்னிடமிருந்த முந்நூறு மனுஷரை மூன்று பிரிவுகளாகப் பிரித்தான், அவர்கள் ஒவ்வொருவருடைய கையிலும் எக்காளத்தையும், வெறும் பானையையும், அந்தப் பானைக்குள் வைக்கும் தீவட்டியையும் கொடுத்தான் (7:16). மீதியானியர்கள் தூங்கிக் கொண்டிருந்த போது இஸ்ரவேலர்கள் அவர்களுடைய பாளையத்தைச் சூழ்ந்து கொண்டார்கள்.

கிதியோன் சைகைக் காட்டிய போது, முந்நூறு மனிதர்களும் எக்காளத்தை ஊதி, பானையில் இருந்த விளக்குகள் வெளிச்சத்தைத் தரும்படி பானைகளை உடைத்தார்கள். அவர்கள் கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம் என்று உரத்த சத்தமிட்டார்கள். இது மீதியானியரை திகிலடையச் செய்தது, அவர்கள் தாங்களே ஒருவரையொருவர் கொலைச் செய்து எல்லா திசைகளிலும் ஓடினார்கள். கிதியோன் அவர்களை பள்ளத்தாக்கு வரையும் அதற்கு அப்பாலும் விரட்டி அடித்தான். இது இஸ்ரவேலர்களின் சத்தருக்களுக்கு மிகப்பெரிய தோல்வியாக இருந்தது.


இந்தச் சம்பவத்திலிருந்து இன்றைய நாளில் நமக்குக் கிடைக்கும் மிகப் பெரிய பாடம் என்னவென்றால், ஒருவர் தேவனை முழுமையாக நம்பி அவருக்கு வெளிப்படையாகக் கீப்ப்படியும்போது, தேவன் தம்முடைய வார்த்தை யில் வாக்குரைத்தவைகளை எப்பொழுதும் செய்வார். கிறிஸ்து தம்மைப் பின்பற்றினவர்களிடம் இவ்விதமாகச் சொன்னார். " நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி, அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்றார் (மத். 28:19,20).

# தொற்காள் - எல்லோருக்கும் சிநேகிதி

# *Dorcas - Friend of All*

*Frances Parr*

வேதாகமத்தில் இடம் பெற்றிருக்கும் பலரைப் போல் இவளுக்கும் செல்லப் பெயர் இருந்திருக்கிறது. அச்செல்லப் பெயரால் இவள் அழைக்கப்பட்டிருக்கிறாள். இவளுக்கு கொடுக்கப்பட்ட பெயர் தபீத்தாள் என்பதாகும். தபீத்தாள் என்பதற்கு "மான்" என்று அர்த்தமாம். சொல் அகராதி மானை மிக வேகமாக ஓடக்கூடிய ஒரு விலங்காக விளக்குகிறது. பெரும் பாலானோர் மானின் மென்மையான கண்களையும், மெல்லிய கால்களையும் அழகாக, வேகமாக ஓடும் அதன் திறனையும் பாராட்டுவார்கள். வேதாகமத்தின் தபீத்தாள் இத்தகைய குணாதிசயங்களை வெளிப்படுத்தினாளா? "தொற்காள்" என்பது " தபீத்தாள் " என்பதின் கிரேக்க மொழியாக்கமாகும்.



அப்போஸ்தலருடைய நடபடிகள் ஒன்பதாம் அதிகாரம் இந்த தொற்காளை யோப்பா பட்டணத்தில் வாழ்ந்த ஒரு சீஷி என்றும், அவள் நற்கிரியைகளையும் தருமங் களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டு வந்ததாகவும் சொல்கிறது. அவள் விதவைகளின் மீதும், அவர்களுடைய பிள்ளைகளின் மீதும் அக்கறை கொண்டு தன்னுடைய நேரத்தையும், பணத்தையும் அவர்களுக்கு வஸ்திரங்கள் தைத்துக் கொடுப்பதற்கு பயன் படுத்தினாள். அவள் தானாகவே வஸ்திரங்களை

உருவாக்கினாள். அது பொதுவாக பெண்கள் சம்பாதிக்கிற காலகட்டமாக இல்லாதபோதிலும் தொற்காளிடத்தில் உணவும், பொருள்களும் மீத மிருந்தது போல் தெரிகிறது. அவளுக்கு ஆதரவாக கணவன் இருந்ததாக வேதாகமம் எதையும் குறிப்பிட வில்லை. அவள் இயற்கையாக மரணம் அடைவதற்கு பதிலாக அவள் வியாதிப்பட்டு மரணமடைந் தாள் என்று சொல்லப்பட்டிருக் கிறது. அதை வைத்துப் பார்க்கும்போது அவள் வயது சென்ற பெண்ணாக மரிக்கவில்லை, என்று தெரிகிறது. அவளைக் குளிப்பாட்டி மேல் வீட்டிலே கிடத்தி வைத்தார்கள்.

லித்தா பட்டணம் யோப்பா பட்டணத்திலிருந்து சில கிலோ மீட்டர் தூரத்தில் தான் இருந்தது. அப்போஸ் தலனாகிய பேதுரு, அந்த லித்தா பகுதியில் பயணித்து, பிரசங்கம் செய்து பலரை சுகமாக்கினார். தொற்காள் மரித்த போது பேதுரு அங்கே தான் இருந்தார். யோப்பா பட்டணத்திலிருந்த சபை அங்கத்தி னர்கள் இரண்டு பேர் பேதுரு அப்பட்டணத்தில் இருக்கிறா ரென்பதை கேள்விப்பட்டு தாம தில்லாமல் தங்களிடத்தில் வர வேண்டுமென்று அவரை கேட்டுக் கொண்டார்கள். பேதுரு தொற்காளை உயிரோடு எழுப்புவார் என நினைத்து அவர்கள் அழைத்தார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அநேகமாக அவர்கள் பேதுரு சோகத்தில் மூழ்கிப் போயிருக்கிறவர் களுக்கு ஆறுதல் அளிக்கும்படி அழைக்கப்பட்டிருக்கலாம்.

பேதுரு மேல் வீட்டில் வைக்கப்பட்டிருந்த தொற்காளிடத்தில் போனார். அநேக விதவைகள் அழுது புலம்பிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தொற்காள் தங்களுக்காக உண்டாக்கின அங்கிகளையும், வஸ்திரங்களையும் பேதுருவினிடத் தில் காட்டினார்கள். பேதுரு அவர்கள் எல்லோரையும் அந்த அறையை விட்டு வெளியே போகச் சொன்ன போது எவ்வளவாய் குழம்பிப் போயிருப்பார்கள். அதே நேரத்தில் பேதுரு கதவைத் திறந்து தங்களுக் குப் பிரியமான தொற்காள் உயிரோடு நிற்கிறதை கண்ட போது அவர் களுக்கு அது எவ்வளவு மகிழ்ச்சி யாக, அதிர்ச்சியாக இருந்திருக்கும்.

வேதாகமம் இந்த தொற களைப் பற்றி அதிகமாக எதுவும் சொல்லவில்லை. ஆனால், அவளு டைய மரணம் மற்றும் அதைத் தொடர்ந்து தேவனுடைய உதவி யால் பேதுரு அவளை உயிரோடு எழுப்பியது போன்ற காரியங்களால் அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள் என்று கூறுகிறது.

வேதாகமத்தில் சில வசனங் களில் இந்த தெய்வ பக்தியுள்ள பெண்ணைப் பற்றி சொல்லப்பட்ட வைகளிலிருந்து நாம் பல பாடங் களை கற்றுக் கொள்ளலாம்.

❖ அவள் ஒரு சிறிய ஊசியைக் கொண்டு பெரிய காரியங்களைச் செய்தாள்.

✤ அவள் தன்னால் அறியப்பட்ட மக்களால் அதிகமாக நேசிக்கப் பட்டாள்.

✤ அவளுடைய வாழ்க்கையின் சூழ்நிலைகளை தேவன் தமது நாமத்தினிமித்தம் பயன்படுத்தினார்.

ஒருவருடைய முயற்சிகள் மற்றவர்கள் மேல் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தும் என்று யாருக்கும் தெரியாது. தொற்காள் விதவைகளுக்காகவும், அவர்களுடைய பிள்ளைகளுக்காகவும் துணிகளைத் தைத்துக் கொண்டிருந்த போது ஒரு நாள் தான் புகழ் பெறப் போவதை நினைத்து தைத்திருப்பாள் என்று நினைக்கிறீர்களா? அவள் அங்கே தேவையைப் பார்த்து அந்த தேவை சந்திக்கப்பட தன்னால் என்ன செய்ய முடிந்ததோ அதைச் செய்தாள்.

கர்த்தருடைய சபையில் ஒவ்வொருவருக்கும் இடம் உண்டு. எந்த ஒரு வேலையும் சிறியதோ அல்லது முக்கியமற்றதோ அல்ல. கவனிக்கப்படாத ஒன்றாக இருந்தாலும் கூட யாரோ ஒருவரிடத்தில் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது. தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவருமே தனித்துவம் வாய்ந்தவர்கள், ஒவ்வொருவரும் செய்யக்கூடிய வேலைகள் உண்டு. இது தேவனுடைய திட்டம். இப்பொழுது உங்களால் என்ன செய்ய முடியும் என்பதை பற்றி யோசித்துப் பாருங்கள்!



## கொஞ்சம் சிரியுங்களே!

தன் காட்டு வழிப் பயணத்தில் ஒரு பெரிய கரடியைச் எதிர்கொண்ட பிரசங்கியார் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

அய்ய்யோ, அவருக்கு என்ன ஆயிற்று என்கிறீர்களா?

பிரசங்கியார், தன்னுடைய பிரசங்கங்களில் ஒன்றை எடுத்துப் பிரசங்கிக்கத் தொடங்கியவுடன், நீட்டிப் படுத்த கரடி அப்படியே தூங்கி விட்டதாம்!

# ஞானஸ்நானம் சம்மந்தமாக இரண்டு கேள்விகள்

# TWO QUESTIONS REGARDING BAPTISM

*Max Patterson*

## I இயேசு ஏன் ஞானஸ்நானம் பெற்றார்?

இயேசு தம்மை யோவானின் ஞானஸ்நானத்திற்கு ஒப்புக் கொடுத்தார் (மத்தேயு 3). யோவானின் ஞானஸ்நானம் பாவமன்னிப்புக்கானது (மாற்கு 1:4). ஆயினும், இயேசுவினிடத்தில் மன்னிக்கப்படும்படியாக எந்த பாவமும் இல்லாதிருந்தது. யோவான், தான் இயேசுவால் ஞானஸ்நானம் பண்ணப்பட விரும்பினார் (மத். 3:14).

இன்று பலர் ஞானஸ்நானம் பாவமன்னிப்புக்கானதல்ல என்று வாதாடு கிறது போல் இயேசு அன்று வாதாடவில்லை. அதற்குப் பதிலாக தாம் ஞானஸ் நானம் பெறுவதற்கான காரணத்தை அறிவிக்கிறார். " எல்லா நீதியையும் நிறை வேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது " என்றார் (மத். 3:15). இயேசு இவ்வுல கிற்கு தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு வரவில்லை. மாறாக, தம்மை அனுப்பின பிதாவின் சித்தத்தை நிறைவேற்றவே வந்தார். தேவனுக்குக் கீழ்ப்படிகிற காரியத்தில் யாருக்கும் விதிவிலக்கு அளிக்கப்பட வில்லை என்பதை ஜனங்களுக்கு புரிய வைக்கிற காரியத்தில் இயேசு வெற்றி பெற வேண்டுமென்றால் அவர் கீழ்ப்படிந்து எல்லா நீதியையும் நிறைவேற்ற வேண்டியதாயிருந்தது.

ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவராக இயேசு இவ்விதமாகச் சொன்னார். " தேவனால் கட்டளையிடப்பட்ட எதுவுமே நாம் செய்யலாம், செய்யாமலுமிருக்கலாம் " என்பது போன்றதல்ல, "நான் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதினால் நம்மால் கீழ்ப்படிய முடியாத காரியம் எதுவுமில்லை " என்பதை இவ்வுலகிற்கு நிரூபிக்கிறேன். இவ்விதமாக பாவமே இல்லாத இயேசு கீழ்ப்படிதலுக்கான மிகச் சிறந்த உதாரணத்தை நமக்கு வழங்கி இருக்கிறார்.

## II சிலுவையில் தொங்கின கள்ளன் இரட்சிக்கப்பட்டானா?

ஞானஸ்நானம் பெறுவதிலிருந்து தப்பித்துக் கொள்ள முயற்சிப்பவர் களில் பலர், சிலுவையில் தொங்கிய கள்ளன் ஞானஸ்நானம் பெறவில்லை யென்றாலும் இரட்சிக்கப்பட்டு விட்டான் என்று சொல்கிறார்கள். இது நிச்சயமாகவே ஓர் யூகம் தான். வேத வாக்கியங்கள் " எருசலேம் நகரத்தாரும், யூதேயா தேசத்தார் அனைவரும் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு,

யோர்தான் நதியில் யோவானால் ஞானஸ்நானம் பெற்றார்கள் " என்று சொல்கின்றன (மத். 3:5,6). அந்த எண்ணிக்கையில் அக்கள்ளன் இல்லை என்பதை ஒருவர் எப்படி அறிந்து கொள்ள முடியும்? ஒருவர் யூகத்தின் அடிப்படையில் நிரூபிக்க முயற்சிக்கிற காரியத்தை வைத்து நாம் எந்த முடிவையும் எடுக்க முடியாது.

ஆயினும், அந்த கள்ளன் ஞானஸ்நானம் பெறாமலேயே இரட்சிக்கப் பட்டுவிட்டான் என்று யூகித்துக் கொள்ளுங்கள், அங்கே பெரிதாக எடுத்துக் கொள் வதற்கு எதுவுமே இல்லை. ஏன்? ஏனென்றால் அக்கள்ளன் மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்து மரித்தான். கிறிஸ்துவின் மரணத்திற்குப் பிறகு தான் கிறிஸ்துவின் பிரமாணம் நடைமுறைக்கு வந்து, " விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் " என்கிற கட்டளை கொடுக்கப் பட்டது (மாற்கு 16:16).

பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெந்தெகொஸ்தே நாளில் பிரசங்கிக்கப்பட்ட முதல் சுவிசேஷ பிரசங்கத்தில் தான் கட்டளையாக அறிவிக்கப் பட்டது (அப். 2:38). சிலுவைக்குப் பிறகு, எல்லோரும் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும்படியாக கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள் (லூக். 24:47).

## நேற்று, இன்று, நாளை

நேற்று நாளையைப் பார்த்து இவ்விதமாகச் சொன்னது
நான் உன்னைப் போல் இளமையாக இருந்தபோது,
நான் எவைகளையெல்லாம் செய்ய நினைத்தேனோ
அவைகளைக் குறித்துப் பெருமைப் பாராட்டுவது எனக்குப்
பிடித்தமான ஒன்றாக இருக்கிறது;
ஆனால் அவைகளைக் குறித்து நினைத்து கனவு உலகில்
விழுந்து எழுந்த போது அது இன்று என்பதைக் கண்டு கொண்டேன்!
இன்று என்பது வாழ்க்கைப் பாதையில் மிக வேகமாக உருண்டோடுகிறது.
நான் தொடங்கிய வேலைகளில் பாதியைக் கூட என்னால் முடிக்கு முடியவில்லை
அந்த வேலையை மீண்டும் முயற்சிக்கட்டுமா
ஆனால் என்னால் ஒருபோதும் பின்னால் போக முடியாது
இன்று என்றென்றும் நிலைத்திருப்பதில்லை என்று இன்று வருத்தப்பட்டது.
கடந்து போகின்ற மணித்துளிகளில் வரலாற்றில் என்றென்றும்
நிலைத்திருக்கத்தக்கதாக பெயரை உருவாக்கும்படி
இன்று தயாராகி உயரிய கிரியைகளைச் செய்தாலும்
முயற்சிகள் பல எடுத்து வரலாற்றை நாளைய தினத்துக்கென்று
படைத்தாலும் அதில் பலன் ஏதுமில்லை, ஏனென்றால்
நாளையென்று நம் கையில் இல்லாததும் கடந்து போகிறதுமாயிருக்கிறது.